
மான்சி கைடு
8
ஆம் வகுப்பு
சமூக அறிவியல்
2024-2025
ENGLISH
LITERATURE

# முன்னுரை

"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

அன்பார்ந்த போட்டித் தேர்வு எழுதும் நண்பர்களுக்கும், பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் ஓர் இனிய செய்தி, மான்சி போட்டித்தேர்வு கைடு அனைத்து போட்டித்தேர்வுகளில்(IAS, TET, TNPSC, NEET, SLET/NET, RLY, POLICE, NMMS/NTSE…..etc) வெற்றி பெற்று மத்திய மாநில அரசு வேலை பெறவும், பள்ளி மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறவும் தேசிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்று அரசின் நலத்திட்ட உதவி பெறவும் துணையாக இருக்கும்.

TNSCERT 2017 – 2019 - ம் ஆண்டுகளில் NEET மற்றும் போட்டி தேர்வுகளில் வெற்றி பெறும் நோக்கில் புதிய பாடத்திட்டங்களை 1 முதல் 12-ம் வகுப்பு வரை பள்ளிப்பாடங்களாக கொண்டு வந்தன.

வண்டுகள் பூக்களில் சுவையான தேனை சேகரிப்பது போல், மான்சி போட்டி தேர்வு கைடு கொள்குறி வினை விடை வடிவில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு
நூலாசிரியர்.



P. ஆரோக்கிய சாமி

தொடர்புக்கு
மான்சி கைடு,
நெ.226, வளன் நகர்,
வேட்டவலம் – 606754,
திருவண்ணாமலை மாவட்டம்.
செல் : 9080235851 / 6374624036

எட்டாம் வகுப்பு சமூக அறிவியல்

பொருளடக்கம்


| அலகு | பாடத்தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | வரலாறு | |
| .1 | ஐரோப்பியர்களின் வருகை | 4 |
| .2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 7 |
| .3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 10 |
| .4 | மக்களின் புரட்சி | 13 |
| .5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 17 |
| 6. | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 20 |
| 7. | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்புற மாற்றங்கள் | 24 |
| .8 | காலங்கள் தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 27 |
| 1 | புவியியல் - பாறை மற்றும் மண் | 30 |
| 2 | வானிலை மற்றும் காலநிலை | 33 |
| 3. | நீரியல் சுழற்சி | 37 |
| 4. | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 41 |
| 5. | இடர்கள் | 44 |
| 6. | தொழிலகங்கள் | 47 |
| 7. | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 51 |
| 8. | புவிப்படங்களைக் கற்றறிதல் | 55 |
| | குடிமையியல் | |
| 1. | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது? | 59 |
| 2. | குடிமக்களும் குடியுரிமையும் | 61 |
| 3. | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 63 |
| 4. | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 66 |
| 5. | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 70 |
| 6. | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 74 |
| 7. | நீதித்துறை | 79 |
| | பொருளியல் | |
| 1. | பணம், சேமிப்பு, மற்றும் முதலீடுகள் | 83 |
| 2. | பொது மற்றும் தனியார் துறைகள் | 87 |
| | வரைபடங்கள் (MAP) | 93 |

# 8-ஆம் வகுப்பு: சமூக அறிவியல்

## அலகு -1

## ஐரோப்பியர்களின் வருகை :

**I**. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

விடை :இ.அல்போன்சோ டி- அல்புகர்க்.

2.பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?

விடை : ஆ.போர்ச்சுகல்

3.1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

விடை : ஆ.துருக்கி.

4.சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ----- நாட்டைச் சேர்ந்தவர்.

விடை : இ.இங்கிலாந்து.

5.இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை.

விடை : ஆ. செயின்ட் ஜார்ஜ் கோட்டை.

6.பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்

விடை : ஆ.பிரெஞ்சுக்காரர்கள்.

7.தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ---- வர்த்தக மையமாக இருந்தது.

விடை : ஈ.டேனியர்கள்.

**II** . கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (**NAI**) ----ல் அமைந்துள்ளது.

விடை : புதுடெல்லி.

2.போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் ----- என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.

விடை : மன்னர் இரண்டாம் ஜான்.

3.இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556 இல் ----- அரசால் கோவாவில் நிறுவப்பட்டது.

விடை: போர்ச்சுக்கீசியர்.

4.முகலாயப் பேரரசர் ------ .இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.

விடை : ஜஹாங்கீர்.

5.பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் -----என்பவரால் நிறுவப்பட்டது.

விடை : கால்பர்ட்

6. ----- என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார்.

விடை : நான்காம் கிறிஸ்டியன்.

**III**. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1.டச்சுக்காரர்கள் | -- | 1602 |
| 2.ஆங்கிலேயர்கள் | -- | 1600 |
| 3.டேனியர்கள் | -- | 1616 |
| 4.பிரெஞ்சுக்காரர்கள் | -- | 1664 |

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1.சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்

விடை : சரி.

2.நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.

விடை : சரி.
3.ஆனந்தரங்கம், பிரிட்டி‘ மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.
விடை : தவறு.
4.வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது.
விடை : சரி.

V.1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை டிக் செய்க:
1.கவர்னர் நினோ □ டி- குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
2.போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.
3.டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.
4.இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.
விடை: ஈ. 1, 2 மற்றும் 4 சரி.

தவறான இணையைக் கண்டறிக:
அ.பிரான்சிஸ் டே -- டென்மார்க்
ஆ.பெட்ரோ காப்ரல் -- போர்ச்சுகல்.
இ.கேப்டன் ஹாக்கின்ஸ் -- இங்கிலாந்து.
ஈ.கால்பர்ட் -- பிரான்ஸ்.
விடை :அ.பிரான்சிஸ்டோ -- இங்கிலாந்து, டென்மார்க் தவறு.

## 2 மதிப்பெண் வினா விடைகள்:

1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக?
1. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.
2. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது.

2). நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக?
I. நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன.
II. நவீன இந்தியாவின் முதல் நாணயம் 1862 □ல் ஆங்கிலேயர் வெளியிட்டனர்.

3. இளவரசர் ஹென்றி □மாலுமி ஹென்றி□ என ஏன் அழைக்கப்படுகிறார்?
இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் மக்களுக்கும், மாலுமிகளுக்கும் பயிற்சி அளித்ததால் இவர் மாலுமி ஹென்றி என அழைக்கப்படுகிறார்.

4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக?
டச்சு வர்த்தக மையங்கள்:
இந்தியாவில் பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் போன்ற இடங்கள் டச்சுக்காரர்களின் வர்த்தக மையங்கள் இருந்தன.

5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக?
இந்தியாவில் ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்:
சூரத் - 1613, ஆக்ரா, அகமதாபாத், புரோச், மசூலிப்பட்டினம், சென்னை □ ஜார்ஜ் கோட்டை □ 1640 கல்கத்தா □ வில்லியம் கோட்டை

சுதாநுதி, காளிகட்டம், கோவிந்தபூர் மூன்று கிராமங்கள் கல்கத்தாவாக மாறியது.

5 மதிப்பெண் வினா விடைகள்:

**VII.**விரிவான விடையளி:

1.நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக?

நவீன இந்தியாவின் வராற்று ஆதாரங்கள்:

1. நாட்டின் அரசியல், சமூக  பொருளாதார, கலாச்சாரம் பற்றி அறிய உதவுகின்றன.
2. ஐரோப்பியர்களின் அலுவலக அரசாங்க பதிவேடுகள்.
3. எழுதப்பட்ட ஆதாரங்கள்: இலக்கியங்கள், பயணக் குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள்.
4. ஆவணக் காப்பகம்: லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி, சென்னையில் உள்ள ஆவணக் காப்பகங்கள்.
5. ஆனந்தரங்கம் நாட்குறிப்பு: 1736  1760 வரை பிரெஞ்சு இந்திய உறவு முறைகள்
6. தேசிய தலைவர்களின் சாதனைகள், கலை, கட்டடக்கலை, அருங்காட்சியகங்கள், நாணயங்கள், ஓவியங்கள், சிலைகள்.

2. போர்ச்சுகீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

1. வாஸ்கோடகாமா இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு 1498 ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.
2. அவரை மன்னர் சாமரின் வரவேற்றார்.
3. இரண்டாவது போர்ச்சுகீசிய மாலுமி பெட்ரோ அஸ்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல்வழியைப் பின்பற்றி 13 கப்பல்களில் சில 100 வீரர்களுடன் கி.பி 1500-ல் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.
4. வாஸ்கோடகாமா இரண்டாவது முறையாக கி.பி.1501 ல் இந்தியா வந்தடைந்தார்.
5. கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
6. பின்பு கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார்.

3. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

1. எலிசபெத் மகாராணியிடம் அனுமதி பெற்று 1600 டிசம்பர் 31-ல் 100 வணிகர்கள் கொண்ட குழு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினர்.
2. இதில் ஒரு கவர்னர், 24 இயக்குநர்களை கொண்டிருந்தது.
3. 1611-ல் மசூலிப்பட்டினம், 1613ல் சூரத்திலும், வணிக மையம் அமைத்தனர்.
4. சர் தாமஸ் ரோ 1615 ல் ஜஹாங்கீரிடம் அனுமதி பெற்று ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் வணிக மையம் அமைத்தார்.
5. 1639-ல் பிரான்சிஸ் டே சென்னப்ப நாயக்கரிடம் மெட்ராசை குத்தகை பெற்று புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டு வர்த்தக மையம், தலைமையிடமாக மாறியது.
6. 1698 ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டை கட்டப்பட்டு வர்தக மையமாக மாறியது.

4. உயர் சிந்தனை வினா:

1. கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?

கி.பி. 1453 ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்டப் பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பியாவிற்கு மிடையிலான நிலவழி மூடப்பட்டது.

துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது.

இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

## அலகு □ 2

## வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

I.சரியான விடையைத் தேர்வு செய்க:

1.1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்.

விடை :சிராஜ் - உத் - தௌலா.

2.பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு.

விடை : அ .1757.

3.பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை.

விடை : அ.அலகாபாத் உடன்படிக்கை.

4.பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி --- கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

விடை :ஆ.இரண்டாம் .

5.ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு.----

விடை : ஆ.1761.

6.மங்க;ர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது.

விடை : இ.ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்.

7.மூன்றாம் ஆங்கிலேய □ மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர்----

விடை :இ.காரன்வாலிஸ்.

8.ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்து கொண்டவர் ----

விடை : அ. இரண்டாம் பாஜிராவ்.

9.மராத்திய பேரரசின் கடைசி பீ'வா --------

விடை :ஆ. இரண்டாம் பாஜிராவ்.

10.துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?

விடை : ஹைதராபாத்

II.கோடிட்ட இடங்களை நிரப்புக :

1.அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ------

விடை :1757.

2.சிராஜ் உத் - தௌலாவின் தலைமை படைத் தளபதி -----

விடை : மீர் ஜாபர்.

3.இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ----

விடை : வாரிசுரிமைப் பிரச்சினை.

4.இந்தியாவில் பிரிட்டி' சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர்------

விடை : டல்ஹௌசி பிரபு.

5.திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் ------

விடை : வெல்லெஸ்லி பிரபு.

6.திப்பு சுல்தான் இறப்புக்கு பின் -----வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.

விடை : 3- ம் கிருஷ்ணன்.

7.1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர்--------

விடை : வெல்லெஸ்லி

III. பொருத்துக:

1.அய் - லா □ சப்பேல் உடன்படிக்கை -- முதல் கர்நாடகப் போர்.

2. சால்பை உடன்படிக்கை -- முதல் மராத்தியப் போர்.

3.பாரிஸ் உடன்படிக்கை -- மூன்றாம் கர்நாடகப் போர்.
4. ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை -- மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்.
5. மதராஸ் உடன்படிக்கை -- முதல் ஆங்கிலேய மைசூர் போர்.

**IV**.சரியா ’ தவறா எனக் குறிப்பிடுக:
1.அலிவர்திகான் மறைவுக்கு பின்னர் சிராஜ் - உத் -தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார்? விடை : சரி.
2.பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார்.
விடை : தவறு.
3.ஐரோப்பாவில் வெடித்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இரண்டாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது.
விடை :தவறு.
4.வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார். விடை :சரி.
5.காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார்.
விடை : சரி.

**V**. கீழ்க்கண்டவைகளுள் சரியாக பொருந்தியுள்ளது எது?
1.அடையாறு போர் -- 1748.
2.ஆம்பூர் போர் --1754
3.வந்தவாசிப் போர் --1760
4.ஆற்காட்டுப் போர் --1749
விடை : வந்தவாசிப் போர் --1760.

2 மதிப்பெண்கள் வினா விடைகள்:
1.இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக?
சிராஜ் - உத் - தௌலாவின் படைவீரர்கள் 146 ஆங்கிலேயர்களை கல்கத்தா வில்லியம் கோட்டையில் 1756 ல் காற்று புகா இருட்டறையில் அடைத்து வைத்தனர்.
மறுநாள் அறையை திறந்தபோது 123 பேர் மூச்சுதினறி இறந்திருந்தனர். இது இருட்டறை துயரச் சம்பவம் என்றழைக்கப்படுகிறது.

2.பிளாசிப் போருக்குப்பின் ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் யாவை?
<u>பிளாசிப் போரினால் ஆங்கிலேயர் பெற்ற சலுகைகள்:</u>
1.வங்காள கருவூலம் மூலம் இராணுவம் பலப்படுத்தப்பட்டது.
2.ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் தொடங்கி இரு நூற்றாண்டுகள் ஆட்சிபுரிய வைத்தது.

3. பக்சார் போருக்கான காரணங்களைக் குறிப்பிடுக?
<u>பக்சார் போர் - 1764 காரணங்கள்:</u>
1.ஆங்கிலேயர் மீர்ஜாபரை பதவியிலிருந்து நீக்கி அவர் மருமகன் மீர்காசிமை வங்காள நவாப்பாக்கியது.
2. தஸ்தக் என்ற சுங்கவரியை ஆங்கிலேயர் தவறாக பயன்படுத்தியதால் மீர்காசிம் ஆங்கிலேயரை எதிர்த்தது.

4. முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?
<u>முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள்:</u>

1. ஹைதர் அலியின் வளர்ச்சி அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்ட நட்புறவு அகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாயின.
2. ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

5. மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை?
2. பே'வா இரண்டாம் பாஜிராவிற்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு அவரின் பகுதிகள், மற்றும் நாக்பூர், இந்தூர் பகுதிகள் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

6. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக?
துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட சுதேச அரசுகள்:
1.ஹைதராபாத் (1798) 2). தஞ்சாவூர் (1799) 3). அயோத்தி (1801)
4).பேஷ்வா(1802) 5).போன்ஸ்லே (1803) 6).குவாலியர் (1804) 7). இந்தூர் (1817)
8).ஜெய்ழர், உதய்பூர் மற்றும் ஜோத்பூர் மற்றும் (1818)

VII.விரிவான விடையளி:
1.இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக?
இரண்டாம் கர்நாடக போர் - (1749 □ 1754):
வாரிசுரிமை பிரச்சினை □ கர்நாடக நவாப் பதவிக்கு அன்வாருதின், சந்தா சகிப்பும், ஹதராபாத் நிஜாம் பதவிக்கு நாசிர் ஜங், முசாபர் ஜங் உரிமை கோரினர். ஆங்கிலேயர்கள் அன்வாருதீனுக்கும் நாசிர் ஜங்கிற்கும் உதவினர்
பிரெஞ்சுகாரர்கள் சந்தா சாகிப்பிற்கும் முசாபர் ஜங் -க்கும் உதவி செய்தனர்.
ஆம்பூர் போரில் 1749 அன்வாருதீன், தக்காணத்தில் நாசிர்ஜங் பிரெஞ்சு கூட்டுப் படைகளால், கொல்லப்பட்டனர்.
கிளைவ் ஆற்காட்டுப் போரில் (1751 □ல்) பிரெஞ்சு படைகளை தோற்கடித்து முகமது அலியை நவாப் ஆக்கினார்.
டியூப்ளே பிரான்சுக்கு திரும்ப அழைக்கப்பட்டார்.

பாண்டிச்சேரி உடன்படிக்கை -1755:
இங்கிலாந்து, பிரான்சு இரு நாடுகளும் உள் நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது எனவும், போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்பட்டது.
2. நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் பற்றி எழுதுக?
நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் - 1799
1.காரணம்: திப்புசுல்தான் ஆங்கிலேயருக்கு எதிரான வெளிநாட்டு கூட்டணி அமைத்தல்.
போரின் போக்கு:
1.1799 □ல் வெல்லெஸ்லி திப்புவின்மீது போர் தொடுத்தார்.
2. தளபதி ஸ்டுவர்ட் ஆர்த்தர் தலைமையில் வெல்லெஸ்லி பிரபு ஸ்ரீரங்கபட்டினத்தை கைப்பற்றினார்.
3. திப்பு கொல்லப்பட்டார் போர் முடிவுபெற்றது.
4. மைசூர் பகுதிகளை (கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் பகுதிகளை) ஆங்கிலேயர் இணைத்துக்கொண்டனர்.
5. மூன்றாம் கிரு'ண ராஜா மைசூர் அரியணை ஏறினார்.
6. திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

3). பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி?

டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை -1848:
1.ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு 1848 ல் வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டுவந்தார்.
2. சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளை தத்தெடுக்க நேரிடும்போது.
3.மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்தப் பிள்ளைக்கும்.
4. மன்னரின் ஆட்சி பகுதி ஆங்கிலேயரின் ஆட்சி பகுதியாகும் என அறிவிக்கப்பட்டது.
5. இந்தியர்கள் இதனை கடுமையாக எதிர்த்தனர் 1857 ல் பெரும் புரட்சிக்கு இது வழிகோலியது.

4. வெல்லெஸ்லி பிரபு எவ்வாறு ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுபடுத்தினார்?
வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் - 1798:
1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை விரிவுபடுத்த வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தை கொண்டு வந்தார்.
2. இந்தியாவில் இருந்த சுதேச அரசுகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்தன.
3. சுதேச அரசுகள் ஆங்கில படையை ஏற்றுக்கொண்டு அனைத்து செலவுகளையும் செய்தல் வேண்டும்.
4. சுதேச அரசை பாதுகாப்பது ஆங்கில படையின் பொறுப்பாகும்.
5. கம்பெனி சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையினை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.
6. ஆங்கிலேயரை தவிர பிற ஐரோப்பியர்கள் சுதேச அரசுகளை விட்டு வெளியேற வேண்டும்.

**VIII.** உயர் சிந்தனை வினா:
1.இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றிக்கான காரணங்களை விளக்குக?
இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்:
1. மிகப் பெரிய கடல் வலிமை
2. அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்
3. பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜதந்திரம்.
4. இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்.
5. இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

## அலகு  3
## கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்:

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
1.ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?
அ.மகல்வாரி முறை ஆ.இரயத்துவாரி முறை இ.ஜமீன்தாரி முறை ஈ.இவற்றில் எதுமில்லை.
விடை : ஈ. இவற்றில் எதுவுமில்லை.
2.எந்த கவர்னர் - ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் செய்து கொள்ளப்பட்டது?
விடை : ஆ. காரன்வாலிஸ் பிரபு.
3.மகல்வாரி முறையில் மகல் என்றால் என்ன?
விடை : இ.கிராமம்.
4.மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்துகொள்ளப்பட்டது?

விடை :ஈ.பஞ்சாப்.

5.கீழ்க்காணும் கவர்னர்களுள் மகல்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?

விடை : ஈ.வில்லியம் பெண்டிங் பிரபு.

6.ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?

விடை : இ.வங்காளம்.

7.இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?

விடை : இ.திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்.

8.பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?

விடை : அ.சர்தார் வல்லபாய் பட்டேல்.

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. --------- என்பது ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறையாகும்.

விடை :மகல்வாரி.

2.மகல்வாரி முறை ---- என்பவரின் சிந்தனையில் உதித்த திட்டம் ஆகும்.

விடை : ஹோல்ட் மெகன்சி.

3.இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி ---- ல் நடைபெற்றது.

விடை : 1859 பெங்காலில்.

4.மாப்ளா கலகம் ----- ல் நடைபெற்றது.

விடை :1921 ஆகஸ்ட்

5.□சம்பராம் விவசாயச் சட்டம்□ நிறைவேற்றப்பட்ட ஆண்டு ------

விடை : 1918 மே மாதம்.

## III. பொருத்துக:

1.நிரந்தர நிலவரி திட்டம் -- வங்காளம்.

2.மகல்வாரி முறை -- வடமேற்கு மாகாணம்.

3.இரயத்துவாரி முறை □ மதராஸ்.

4.நீல் தர்பன் -- இண்டிக்கோ விவசாயிகளின் துயரம்.

5.சந்தால் கலகம் -- முதல் விவசாயிகள் கிளர்ச்சி.

## IV. சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

விடை :சரி.

2.இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.

விடை : சரி.

3.குஜராத்தின் யூசுப்'ாகி என்ற பர்கானாவில் பாப்னா கலகம் ஏற்பட்டது.

விடை : தவறு.

4.□பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்□ 1918 இல் நிறைவேற்றப்பட்டது.

விடை : தவறு

ஏ.பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை டிக் செய்க:

1.கீழ்க்காண்டவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்.

விடை : இ. விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது.

2.கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் நடைபெற்ற விவசாய புரட்சி பற்றிய சரியான கூற்று எது?

விடை : ஆ. நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது.

2 மதிப்பெண் வினா விடைகள்:

1. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக் கூறுகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக?
நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புகள்:
1. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு முறையாக வரி செலுத்தும் வரை ஜமீன்தாரர்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.
2. விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்பட்டனர்

2.இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
1.வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்துகொள்ளப்பட்டது.
2. நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டு 45 □ 50% வரி நிர்ணயிக்கப்பட்டது.

3). மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக?
1. கிராமத் தலைவர், சலுகைகளை தவறாக பயன்படுத்தினார்.
2. கிராம உயர் வகுப்பினர்களுக்கு இலாபகரமாகவும், விவசாயிகளுக்கு பாதிப்பும் ஏற்பட்டன.
4. 1859 -60 இல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம் என்ன?
இண்டிகோ கலகம் 1859 -60:
1. ஐரோப்பிய இண்டிகோ தோட்டக்காரர்கள் இந்திய விவசாயிகளை இண்டிகோ (அவுரி) செடி துணி சாயம்) பயிரிட கட்டாயப்படுத்தினர்.
2. மேலும் விவசாயிகள் பயிரிடும் அவுரியை, குத்தகை, மற்றும் குறைந்த விலையில் தருமாறு வற்புறுத்தினர்.

5. சம்பரான் சத்யாகிரகத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை குறிப்பிடுக?
அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, மகாத்மா காந்தியை அக்குழு உறுப்பினராக சேர்த்து கொண்டது.
காந்தி தலைமையில் பீகாரில் உள்ள சம்பரானில் விவசாயிகளின் குறைகள் விசாரிக்கப்பட்டு, மே 1918 □ல் சம்பரான் விவசாய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

6. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லாபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக?
பிப்ரவரி 12, 1928 □ல் 30% நிலவருவாயை எதிர்த்து வல்லபாய் பட்டேல் வரிகொடா இயக்கத்தை தொடங்கினார்.
இதில் பல பெண்களும் கலந்து கொண்டனர்.

**VII.** வரிவான விடையளி:
1.நிலையான நிலவரி திட்டத்தின் நிறை குறைகளை விவாதிக்க?
நிலையான நிலவரித் திட்டம் நிறைகள்:
1. தரிசு நிலங்கள் மற்றும் காடுகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன.
2. ஜமீன்தாரர்கள் ஆங்கிலேயரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக, நில உடமையாளராக, விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலித்து அரசுக்கு செலுத்தினர்.
3. நீதி வழங்குவதிலிருந்து ஜமீன்தாரர்கள் விடுவிக்கப்பட்டனர்.

குறைகள்:
1. விவசாயிகள் உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிமையாக நடத்தப்பட்டனர்.
2. ஜமீன்தாரர்கள் சோம்பேறியாக, ஆடம்பரமாக செயல்பட்டனர்.
3. வங்காளத்தில் ஜமீன்தார் - விவசாயிகளிடையே பல மோதல்கள் நடைபெற்றன.

2.ஆங்கிலேயர்களின் நிலவரி திட்டங்கள் இந்திய விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன?

1.விவசாயிகள் அதிக வரி, பஞ்சம், கடன் சுமையால் அவதிபட்டு நிலங்களை விற்றதால் விவசாயம் பாதிப்படைந்தது
2.ஜமீன்தார், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் ஏழை விவசாயிகளை சுரண்டினர்
3.ஆங்கில பொருட்களால் இந்திய குடிசைத் தொழில் மறைந்தன.
4.பழையன மாற்றப்பட்டு புதிய சட்டம், நீதிமன்றமுறை தோன்றின.
5.ஒரு குறிப்பிட்ட சமுதாயம் மட்டுமே பலன் அடைந்தனர்.

3.மாப்ளா கிளர்ச்சி பற்றி ஒரு பத்தியில் எழுதுக?
மாப்ளா கிளர்ச்சி □ 1921:
1. கேரளாவில் மாப்ளா எனப்பட்ட முஸ்லிம் விவசாயிகள், ஜமீன்தார்கள், ஆங்கில அரசால் சுரண்டப்பட்டது கிளர்ச்சிக்கு காரணமாகும்.
2. ஏப்ரல் 1920 மலபார் மாநாட்டில் குத்தகைதாரர்களுக்கு ஆதரவாக, நிலக்கிழார் - குத்தகைதாரர் உறவை ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்பட்டது.
3. 1921 ஆகஸ்ட் -ல் மாப்ளா விவசாயிகள் ஜமீன்தாரர்களின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.
4. காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், வட்டி, நிலக்கிழார் வீடுகள் தாக்கப்பட்டன.
5. 1921 டிசம்பர் -ல் அரசு இரக்கமின்றி மாப்ளா கிளர்ச்சியை அடக்கியது.
6. 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் 1650 பேர் காயமடைந்தனர், 45 ஆயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர்.

VIII.உயர் சிந்தனை வினா:
1.வரிகள் மட்டும் அல்லாமல் வேறு எந்த வகைகளில் ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளின் நிலங்களை சுரண்டினர்?
1. ஆங்கிலேயர் இந்தியாவின் பழைய வேளாண்மை முறையை ஏற்கவில்லை.
2. நிலையான நில வருவாய் திட்டம். மகல்வாரி திட்டம், இரயத்துவாரி திட்டம் மூலம் விவசாயிகளுக்கு எதிரான பொருளாதார சுரண்டலை ஆங்கிலேயர் மேற்கொண்டனர்.
3. நிலையான நிலவரித்திட்டம்: 1793 □ல் காரன்வாலிஸ் கொணர்ந்தார்.
வரி கட்டும் வரை ஜமீன்தாரர்கள் நிலத்தின் உடமையாளராக அங்கீகரிக்கப்பட்டனர் விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.
4. இரயத்துவாரி முறை □ 1820, நிலம் விவசாயிகளுக்கு சொந்தம். ஆதிக நிலவரியால் விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.
5. மகல்வாரி முறை: விளைச்சலில் பாதியாக நிலவருவாய் வசூலிக்கப்பட்டது. விவசாயிகள் துன்பமும், உயர் வகுப்பினர் இலாபமும் அடைந்தனர்.

## அலகு 4
## மக்களின் புரட்சி:

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
1.பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு.
விடை : இ.1529.
2.பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர்.
விடை : அ. பூலித்தேவர்.
3.காலின் ஜாக்சன் எந்தப் பகுதியின் ஆட்சியாளர்?
விடை :இ.இராமநாதபுரம்.
4.வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்க்கண்ட எந்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார்?
விடை :ஈ. கயத்தாறு .

5.வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?

விடை : இ. சிவகங்கை.

6.□திருச்சிராப்பள்ளி பிரகடனம்□ யாரால் வெளியிடப்பட்டது.?

விடை : அ. மருது பாண்டியர்கள்.

7.கீழ்க்கண்டவைகளுள் தீரன் சின்னமலையோடு தொடர்புடைய பகுதி எது?

விடை :ஈ.ஓடாநிலை.

8.ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?

விடை : அ. மத்திய இந்தியா.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.கிழக்குப்பகுதி பாளையங்கள் ------ கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

விடை : கட்டபொம்மன்.

2.விஸ்வநாத நாயக்கர் அவரது அமைச்சர் ----- உடன் கலந்தாலோசித்து பாளையக்கார முறையை ஏற்படுத்தினார்.

விடை : ஆரிய நாதர்.

3.கட்டபொம்மனின் முன்னோர்கள் ------- பகுதியைச் சார்ந்தவர்கள்.

விடை : ஆந்திரா.

4.------- தமிழர்களால் □வீர மங்கை□ எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார்.

விடை : வேலுநாச்சியார்.

5. ----- □சிவகங்கையின் சிங்கம்□ என அழைக்கப்படுகிறார்.

விடை : சின்ன மருது.

6. 1857 ஆம் ஆண்டு புரட்சியை -------- என்பவர் □முதல் இந்திய சுதந்திரப் போர்□ என விவரிக்கிறார்.

விடை : வி .டி . சவார்க்கர்.

III. பொருத்துக

1.டெல்லி -- இரண்டாம் பகதூர் ஷா.
2.கான்பூர் -- நானா சாகிப்.
3.ஜான்சி □ லட்சுமி பாய்.
4.பரெய்லி □ கான் பகதூர் கான்.
5.பீகார் -- கன்வர் சிங்.

III. சரியா தவறா எனக் குறிப்பிடுக.

1.விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர்.

விடை : சரி.

2.சிவசுப்பிரமணியம் என்பவர் மருது பாண்டியர்களின் அமைச்சர் ஆவார்.

விடை : தவறு.

3.1799 அக்டோபர் 16 ஆம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

விடை : சரி .

4.திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் ஆவார்.

விடை : சரி.

Iv. அ பின்வரும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும் :

1.I.வேலூர் புரட்சி 1801 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

II. நான்காம் மைசூர் போருக்குப்பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.

III..வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னையின் ஆளுநராக இருந்தார்.

IV.ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்.

விடை : இ. **II&III** சரி.

2.ஆ. தவறான இணையைக் கண்டுபிடிக்கவும் :
விடை : அ. மருது பாண்டியர் -- எட்டயபுரம்.
3.இ.மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி :
விடை :ஈ.திப்பு சுல்தான்.

2 மதிப்பெண்கள் வினா விடையளி:
1.பாளையக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயரைக் கூறுக?
பாளையக்காரர்கள் வரி வசூலித்தல், நாயக்கர்களுக்கு இராணுவ உதவி செய்தல் போன்றவற்றில் நாயக்கர்களின் கீழ் பகுதிகளை ஆட்சி புரிந்தனர்.
பூலித் தேவர், வீரப்பாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் குறிப்பிடதக்க பாளையக்காரர்கள் ஆவர்.
2.பாளையக்காரர்கள் புரட்சியில் வேலுநாச்சியாரின் பங்கு என்ன?
ஆங்கிலேயரின் ஆயுத கிடங்கை அழித்து, இந்தியாவில் பிரிட்டி' காலனி ஆதிக்கத்தை எதிர்த்து போரிட்ட சிவகங்கையை ஆட்சிபுரிந்த முதல் பெண்ணரசி வேலுநாச்சியார் ஆவார்.
3.தென்னிந்திய புரட்சியில் பாளையக்கார கூட்டமைப்பின் தலைவர்கள் யாவர்?
சிவகங்கையின் மருது பாண்டியர், கட்டபொம்மன் அருகில் உள்ள பாளையக்காரர்களை ஒன்றிணைதது ஆங்கிலேயர்க்கு எதிரான கிளர்ச்சியை உருவாக்கினர்.
4.□திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின்□ முக்கியத்துவம் யாது?
ஜுன் 1801 □ல் ஆங்கிலேயருக்கு எதிராக மருது சகோதரர்கள் திருச்சிராப்பள்ளி பிரகடனம் வெளியிட்டனர்.
தமிழ்நாட்டின் பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட ஓர் அணியாக சேர்ந்தனர்.
5. வேலூர் கலகத்தின் விளைவுகளை எழுதுக?
வேலூர் கலகத்தின் விளைவுகள்:
1. இராணுவத்தில் சீருடை ஒழுங்கு மற்றும் புதிய முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
2.திப்புவின் குடும்பம் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
3.வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணிநீக்கம் செய்யப்பட்டார்.
6. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான உடனடிக் காரணம் என்ன?
1857 புரட்சிக்கு உடினடிக் காரணம்:
1.இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு துப்பாக்கியில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் 1857 புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாகும்.
இந்துக்கள் பசுவை புனிதமாகவும், முஸ்லிம்கள் பன்றியை அருவருப்பாகவும் கருதியதால் தோட்டாவை தொட மறுத்து புரட்சியில் ஈடுபட்டனர்.
**VII.** விரிவான விடையளி:
1.பூலித்தேவரைப் பற்றி நீவிர் அறிந்ததை எழுதுக?
பூலித்தேவர்:
1. ஆங்கிலேயரை எதிர்த்த முதல் இந்தியர், திருநெல்வேலியின் அருகில் நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார்.
2. ஆற்காட்டு நவாப், முகமது அலிக்கும் ஆங்கிலேயருக்கும் கப்பம் கட்ட மறுத்தார். இவர்களின் கட்டுபடையை திருநெல்வேலி போரில் தோற்கடித்தார்.
3. பூலித்தேவர் ஆங்கிலேயரை எதிர்க்க பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்க முயன்றார்.

4. 1761 ல் நவாப் படைகள் நெற்கட்டும் சேவலை கைப்பற்றியது மீண்டும் 1764 ல் பூலித்தேவர் கைப்பற்றினர்.
5. 1767 ல் கேப்டன் கேம்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டு தப்பித்து தலைமறைவாக வாழ்ந்தார்.

2.தீரன் சின்னமலைக்கும் ஆங்கிலேயருக்கும் இடையேயான போராட்டத்திற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவரி?

தீரன் சின்னமலை:

1. இயற்பெயர் - தீர்த்தகிரி கொங்கு நாட்டு பாளையக்காரர் (சேலம், கரூர், கோயம்புத்தூர், திண்டுக்கல் பகுதியை கொண்டது)
2. பிரெஞ்சு இராணுவத்தில் போர்பயிற்சி பெற்று திப்பு சுல்தானோடு சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தார்.
3. ஓடாநிலையில் கோட்டை கட்டி ஆங்கிலேயரை எதிர்த்தார்.
4. 1800 ல் கோயம்புத்தூர் பகுதியில் (சின்னமலை, காவேரி, ஓடாநிலை, அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போரில் கொரில்லா போர் முறையில் ஆங்கில படைகளை தோற்கடித்தார்.
5. இறுதிபோரில் தனது சமையற்காரர் நல்லப்பனால் காட்டிக்கொடுக்கப்பட்டு 1805 ல் சங்ககிரி கோட்டைடயில் தூக்கிலிடப்பட்டார்.

3..1857 ம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களை எழுதுக?

1857 ம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள்:

1.ஆங்லேயரின் அதிக வரிவிதிப்பு, பொருளாதார சுரண்டல்கள்.
2. வாரிசு இழப்புக் கொள்கை, துணைப் படைத்திட்டம் மூலம் இந்திய பகுதிகளை இணைத்துக்கொண்டது.
3. இந்தியர்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மதமாற்றம் செய்ய முயற்சித்தது.
4. சதி ஒழிப்பு, பெண்சிசுகொலை ஒழிப்பு, விதவை மறுமணம், பெண்கல்விக்கு ஆதரவு போன்ற ஆங்கிலேயரின் சட்டங்கள் ஐரோப்பியர் இந்திய கலாச்சாரத்தில் தலையிடுவதாக கருதப்பட்டது.
5. இராணுவத்தில் புதிய விதிமுறைகள், இந்திய சிப்பாய்களுக்கு குறைவான ஊதியம், பதவி உயர்வு மறுப்பு போன்றவை.
6. புதிய என்பீல்டு துப்பாக்கியில் பசு, பன்றி தடவப்பட்ட தோட்டாவை பயன்படுத்த வற்புறுத்தியது.

4. 1857-ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக?

1857 ம் ஆண்டு கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:

1.சரியான ஒருங்கிணைப்பு, திட்டம், ஆயுத தொழில் நுட்பம் புரட்சியாளர்களிடம் இல்லை.
2.கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையாணவர்களாக இல்லை.
3.இந்தியர் முழுவதும் புரட்சியில் பங்குகொள்ளவில்லை.
4.நவீன கல்விகற்ற இந்தியர் புரட்சியை ஆதரிக்கவில்லை.
5.கூர்க்கர், ஆப்கானியர், சீக்கியர் ஆங்கிலேயர்க்கு உதவினர்.
6.ஆங்கிலேயர்கள் சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிருந்தனர்.

**VIII.**உயர் சிந்தனை வினா:

1.1857 ம் ஆண்டு புரட்சியில் தலைவர்களிடையே ஒரு பொதுவான குறிக்கோள் இல்லை  நிரூபி?

1.ஆங்கிலேயர்களின் நாடு பிடிக்கும் கொள்கை இந்தியர்களிடையே பயத்தையும், அமைதியின்மையும் ஏற்படுத்தியது.
2.சூர்க்கர் படையின் ஆங்கிலேயர்க்கு உதவினர்.
3.கல்வி கற்ற இந்தியர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை.
4.சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவான திட்டம், தலைமை, நவீன ஆயுதம் புரட்சியில் ஈடுபட்டவர்களிடம் இல்லை.
5.முகலாயர்கள் இரண்டம் பகதூர்'ாவிற்கு பிறகு அவரது வாரிசுகள் தங்களது பரம்பரை அரண்மனை மற்றும் செங்கோட்டைகளை ஆங்கில அரசிடம் ஒப்பன வற்புறுத்தப்பட்டனர்.
6.பொதுவான சிந்தனையின்றி தலைவர்கள் செயல்பட்டனர் .
7.இது ஓர் இராணுவ புரட்சி என பிற தலைவர்கள் இதில் தலையிடவில்லை.

## அலகு -5

## இந்தியாவில் கல்வி வளர்ச்சி :

### I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.வாரணாசியில் இருந்த குருகுலக் கல்வி முறைக்கான சான்றுகளை வழங்கியவர் யார்?

விடை: ஈ.பெர்னியர்.

2.வங்காளத்தில் அரசர் தர்மபாலரால் நிறுவப்பட்டப் பல்கலைக்கழகம் எது?

விடை: ஆ.விக்ரமசீல பல்கலைக்கழகம்.

3.யாருடைய ஆட்சியின் போது சீனத்துறவி யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார்?

விடை:இ. முதலாம் நரசிம்ம பல்லவன்.

4.நாளந்தாவை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?

விடை: ஈ.2009.

5.கல்கத்தாவில் முதல் மதரசாவை நிறுவிய கவர்னர் ஜெனரல் யார்?

விடை: அ.வாரன் ஹேஸ்டிங்ஸ்

6.காலங்காலமாக ஓரங்கட்டப்பட்டிருந்த சமூகப் பெண்களுக்கெனப் பள்ளி ஒன்றை நிறுவியவர் யார்?

விடை: அ.ஜோதிபா புலே

7.ஜெர்மானிய சமயப் பரப்பாளர் பார்த்தலோமஸ் சீகன்பால்கு, தமிழ்நாட்டில் எங்கு முதல் பள்ளியை நிறுவினார்?

விடை: அ. தரங்கம்பாடி

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகள்கள், மகன்கள் மட்டுமே ------- இந்தியாவில் கல்வி கற்க முடிந்தது.

விடை: பழங்கால

2.பாப்டிஸ்ட் மி'ன் கல்லூரி 1818 இல் --------- என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

விடை: செராம்பூர்

3.பேராசிரியர் கார்வே ------ வில் இந்து விதவைகளுக்காக ஒரு பள்ளியைத் தொடங்கினார்.

விடை: பூனா.

4.அகில இந்திய மகளிர் மாநாடு தீர்மானம் இயற்றி ---------- கல்லூரியை டில்லியில் தொடங்கியது.

விடை: 1964 இர்வின் சீமாட்டி.

5.முதல் இடைநிலைக் கல்விக்குழுவின் தலைவர் ------------ ஆவார்.

விடை: டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார்.

**III.**பொருத்துக:
1.பல்கலைக்கழக மானியக் குழு - 1956
2.கோத்தாரி கல்விக் குழு - 1964
3.மெக்காலே - ஆங்கிலக் கல்வி
4.இலவச, கட்டாயக் கல்வி - 6 -14 வயது வரை
5.டாடாவின் இந்திய அறிவியல் கழகம் - பெங்களுரு

**IV.**சரியா ∴ தவறா எனக் குறிப்பிடுக
1.சிந்துவெளி எழுத்துக்களும் கீழடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பானையோடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களும் ஒன்றே என்பதை வெளிக்காட்ட நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன.
விடை : சரி.
2.நாலடியார் சமணர் வழங்கிய நூலாகும்.
விடை : சரி.
3.உப □ நி -'த் என்ற சொல்லுக்கு, □ஒருவருக்கு அருகில் உட்காருதல் என்று பொருள்.
விடை : சரி
4.புத்தர், மகாவீரர் மற்றும் கோசலர் ஆகியோர் வேதங்களின் மேலாதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.
விடை : தவறு
5.நாளந்தா ஒரு சிறந்த வேதக் கல்விமையமாக இருந்தது.
விடை : சரி.

**V.**பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு:
**I.** சமஸ்கிருதக் கல்வியானது வேதங்கள், உபநிடதங்கள், தர்ம சாஸ்திரங்கள் மற்றும்
காவியங்களைப் பயிற்றுவித்தது.
**II.**வாரணாசியில் இருந்த குருகுலக் கல்வி முறையில், ஆசிரியர்கள் தங்கள் இல்லங்களில் கற்பித்தார்கள்.
**III.**பல்கலைக்கழகவளாகப் பாணியில் மடாலயங்கள் கட்டப்பட்டிருந்தன.
**IV.**குருகுலக் கல்வி முறையில் ஆசிரியர்கள் மன்னர்களின் மானியங்களால் பயனடைந்தனர்.
விடை: அ) **I** மற்றும் **II** சரியானவை.

**IV.** பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.
1.புறநானூறு, கல்வியின் முக்கியத்துவம் குறித்துக் கூறுவதை எழுதுக?
<u>கல்வியின் முக்கியத்துவம்:</u>
1.ஏழ்மை நிலையில் இருப்பவரும் ஆசிரியரிடம் பரிசில் கொடுத்து கல்வி கற்க வேண்டும்.
2.தாயானவள் கற்றறிந்த குழந்தையையே பெரிதும் ஆதரிப்பாள்.
3.கற்றோர்க்கு மேல்தட்டு மக்களும் தலைவணங்குவர்.

2.தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க?
1.திருக்குறள், நாலாடியார் போன்ற நூல்கள் சமணர்களின் சிறந்த பங்களிப்பாகும்.
2.பள்ளி என்பது கல்வி கற்கும் சமண மடாலயங்கள் ஆகும்.

3.நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது?

நாளந்தா பல்கலைக் கழகம்:

1.பீகாரில் 5 ம் நூற்றாண்டில் குமார குப்தரால் அமைக்கப்பட்ட சிறந்த பௌத்த கல்வி மையம் ஆகும்.

2.நுண்கலைகள், மருத்துவம், கணிதம், வானியல், அரசியல் மற்றும் போர்க்கலை, பௌத்த கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டன.

3.சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து தங்கி கல்வி பயின்றனர்.

4. இடைக்கால இந்தியாவில் இஸ்லாமியக் கல்வியின் சாராம்சத்தைச் சுட்டிக் காட்டவும்?

இடைக்கால இஸ்லாமிய கல்வி:

இஸ்லாமிய பள்ளிகள் அனைவருக்கும் செயல்பட்டன.

மதராசாக்கள் இறையியல் கற்பிக்கும் பள்ளியாகவும் சட்டப்பள்ளியாகவும் செயல்பட்டன.

மாணவர்களுக்கு குர்ரான், அரபு இலக்கணம், இலக்கியம், கணிதம், கணக்கு பதிவியல், தர்க்க சாஸ்திரம் வட்டார மொழிகள் ஆகியவை கற்பிக்கப்பட்டன.

5.காந்தியடிகளின் வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன?

காந்தியடிகளின் வார்தா கல்வித்திட்டம் அனைவருக்கும் அடிப்படையான தொடக்க கல்வியையும், கைத்தொழில் சிலவற்றையும் கற்பிப்பதையும் நோக்கமாக கொண்டிருந்தது.

மாணவர்கள் தாங்களே உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தால் அவர்களுக்கான இலவச கட்டாயக் கல்வி சாத்தியமாகும் என்று நம்பப்பட்டது.

**VII.**விரிவான விடையளித்தல்:

1.சமண, பெத்த மடாலயங்களில் கல்வியின் முக்கியக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்?

1.சமண  பௌத்த மடாலயங்கள் தங்களது துறவிகளுக்குக் கல்வி கற்பித்தும் பயிற்சி அளித்தும் வந்தன.

2.இங்கு கல்வி பயில வரும் மாணவர்கள் தங்களது கல்வி பயிலும் காலம் தங்களது முடியும் வரை அங்கேயே தங்கி கற்றனர்.

3.சமணர்களின் சமய இலக்கியங்கள் அர்த்த  மகதி மொழியிலும் பாலி மொழியிலும் இருந்தன.

4.சமண பௌத்த கல்வி மையங்கள் பல்கலைக்கழகங்களைப் போன்ற பெரிய வளாகங்களில் கல்வியை வழங்கன.

5.பீகாரில் நாளந்தா பல்கலைக கழகம், சிறந்த பௌத்த கல்விமையமாகும், இங்கு சீனா, தென்கிழக்கு ஆசியாவிலிருந்து மாணவர்கள் தங்கி பயின்றனர்.

6.வங்காளத்தில் தர்மபாலர் விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தை நிறுவி புத்தரின் கோட்பாடுகளை பரவச்செய்தார்.

7.காஞ்சிபுரத்தில் பல கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன.

2.மெக்காலேயின் புகழ்பெற்ற அறிக்கை பற்றி சுருக்கமாக எழுதுக?

1.மெக்காலே 1835 ம் ஆண்டு கல்வி விரைவுக் கொள்கையைத் தயாரித்தார் இதன்படி

2.அரசாங்கத்தின் கல்விக் கொள்கையின் நோக்கம் இந்தியாவின் பூர்வீக மக்களிடையே ஐரோப்பிய இலக்கியத்தையும் அறிவியலையும் மேம்படுத்துவது ஆகும்.

3.இதனைக் கற்பிக்க ஆங்கில மொழியினைப் பயன்படுத்த வேண்டும் எனவும் மெக்காலே அறிவுறுத்தினார்.
4.பெண்டிங் மெக்காலேயின் வரைவுக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்ததோடு.
5.கல்விக்கான நிதியை இனி ஆங்கில வழி கல்விக்கு மட்டுமே செலவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

3.விடுதலைக்குப் பிறகு இந்திய அரசால் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை?

அறிவியல் தொழில் நுட்ப நிறுவனங்கள்:

1.மூன்று ஐந்தாண்டு திட்டகாலங்களில் ஐந்து **IIT** கள் பல்வேறு சிறப்பு மிக்க ஆய்வகங்கள்.
2.அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சில் (**CSIR**)
3.பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (**DRDO**) அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை நிறுவப்பட்டன. அதன்பின்,
4.1983 ல் ஆசிரியர் கல்விக்காக டி.பி சட்டோபாத்யாயா குழு 1986 ன் தேசிய கல்விக் கொள்கை ஆணையம்.
5.ய்'பால் குழு 1993, டி, எஸ், ஆர் சுப்பிரமணியன் ஆணையம் (2015) ஆகியவை.
6மாறிவரும் காலத்திற்கேற்ப பாடத்திட்டத்தில் மாற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டன.
7.அவை கல்வி மேம்பாட்டிற்காகப் பல பரிந்துரைகளை வழங்கியுள்ளன.
4.கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமான பரிந்துரைகளைச் சுட்டிக் காட்டுக?

கோத்தாரி ஆணையத்தின் (1964) முக்கியப் பரிந்துரைகள்:

1.**10 + 2 +3** கல்வி முறை (10-ம் வகுப்பு, 12 ம் வகுப்பு, கல்லூரி)
2.இடைநிலைக் கல்வியைத் தொழில் கல்வியாக்கல்
3.பொதுப்பள்ளிக் கல்விமுறையில் செயல்படும் பள்ளிகளில் 5-ம் வகுப்பு வரை மாணவர்கள் தங்கள் தாய் மொழியில் கற்கலாம்.
4.6 – 14 வயதுள்ள குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வி
5.மத்திய அரசு தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித் துறையில் முதலீடு செய்ய வேண்டும்.

## அலகு – 6

## இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.பின்வருவனவற்றில் மக்களின் எந்த செயல்பாடுகள் கைவினைகளில் சாராதவை?
விடை : ஈ.இரும்பை உருக்குதல்.
2.----- தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
விடை :நெசவு.
3.கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் ---
விடை :இ.கான்பூர்.
4.இந்தியாவின் முதல், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன?
விடை : இ. வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்.
5.இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது?
விடை : இந்தியாவின் தொழிற்துறை கொள்கை.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.----- இந்திய மக்களின் வாழ்க்கையில் ஒர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.
விடை : கைவினைப் பொருட்கள்.
2.தொழிற்புரட்சி நடைபெற்ற இடம்

விடை : இங்கிலாந்து.
3.அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ---
விடை : 1939.
4.கொல்கத்தா அருகிலுள்ள ஹுக்ளி பள்ளத்தாக்கில் ---- இடத்தில் சணல் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டது.
விடை : ரிஷ்ரா.
5.------ ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது.
விடை : சூயஸ் கால்வாய்.

**III**.பொருத்துக :
1.தவர்னியர் -- பிரெஞ்சு பயணி
2.டாக்கா -- மஸ்லின் துணி
3.தாதாபாய் நௌரோஜி -- செல்வச் சுரண்டல் கோட்பாடு
4.பாலிகன்ஜ் -- காகித ஆலை
5.ஸ்மித் -- கைவினைஞர்.

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக :
1.இந்தியா பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு புகழ்வாய்ந்தது.
விடை : சரி.
2.இந்தியாவில் ஆங்கிலேயர்களால் இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டது.
விடை : சரி.
3.நவீன முறையில் முதன்முதலாக இரும்பு ஜாம்ஷெட்பூரில் உற்பத்தி செய்யப்பட்டது.
விடை :தவறு.
4.1948 ஆம் ஆண்டு தொழிலக கொள்கையானது கலப்பு பொருளாதாரத்தை கொண்டு வந்தது.
விடை : சரி.
5.பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் தீவிர வேளாண்மை உற்பத்தி வளர்ச்சிக்குச் சான்றாக உள்ளது.
விடை : தவறு.
**V**.சரியான கூற்றை கண்டுபிடி :
1.பின்வருவனவற்றில் சரியானவைகளை தேர்ந்தெடுத்துக் குறியிடவும்.
**I**.எட்வர்ட் பெய்ன்ஸ் கருத்துப்படி □பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இங்கிலாந்து□.
**II**.இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைக்கு முன்னால் இந்தியாவில் கிராம கைவினை தொழில் இரண்டாவது பெரிய தொழிற்சாலையாக அமைந்தது.
**III**.சௌரர்'டிரா தகர தொழிற்சாலைக்கு பெயர் பெற்றது.
**IV**.சூயஸ் கால்வாய் கட்டப்பட்டதால் இந்தியாவில் பிரிட்டிஷாரின் பொருட்கள் மலிவாக கிடைக்க வழிவகை உருவானது.
விடை: ஆ.**II** மற்றும் **IV** சரி.
2.கூற்று : இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனிய ஆதிக்கத்தில் நலிவுற்றனர்.
காரணம் : பிரிட்டி'ர் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருட்களுக்கான சந்தையாகவும் கருதினர்.
விடை : அ.கூற்று சரி. காரணம் கூற்றுக்கான விளக்கம்.

3.பின்வருவனவற்றுள் சரியாக பொருந்தாது ஒன்று எது?
அ.பெர்னியர் -- ஷாஜகான்.
ஆ.பருத்தி ஆலை -- அகமதாபாத்.

இ.TISCO -- ஜாம்ஜெட்பூர்.
ஈ.பொருளாதார
தாரளமயமாக்கல் -- 1980
விடை :ஈ. பொருளாதார தாரளமயமாக்கல் -- 1980.

2 மதிப்பெண்கள் வினா விடைகள்:

1.இந்தியாவில் பாரம்பரிய கைவினை பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை?

1.நெசவு 2.மரவேலை 3.தந்த வேலை 4.மதிப்பு மிக்க கற்களை வெட்டுதல் 5.தோல் தொழிற்சாலை 6.வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல் 7.உலோக வேலை 8.மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களில் இந்தியா மிகவும் புகழ்பெற்று விளங்கியது.

2.செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக?

தாதாபாய் நௌரோஜியின் செல்வ சுரண்டல் கோட்பாடு:

1.ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டி, இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு சென்றன.

2.இந்திய மக்கள் வறுமைக்கு ஆளாயினர்.

3.பெரிய அளவில் நெசவு உற்பத்திக்கு பயன்படுத்திய கண்டுபிடிப்புகளின் பெயர்களை எழுதுக?

1.காட்டன் ஜின் 2.பறக்கும் எறிநாடா 3.நூற்கும் ஜென்னி 4.மற்றும் நீராவி இந்திரம் ஆகியவை பெரிய அளவில் நெசவு உற்பத்தி உருவாக்க உதவியது.

4.இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

1.இந்திய தொழிற்துறை, கூட்டமைப்பு 1985ல் நிறுவப்பட்ட ஒரு வணிக சங்கம் ஆகும்.

2.இது ஒரு அரசு சாரா, இலாப நோக்கமற்ற சிறு மற்றும் நடுத்தர, பன்னாட்டு நிறுவனங்களை கொண்டு உருவாக்கப்பட்டது.

5.தொழில்மயம் அழிதல் என்றால் என்ன?

பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் வீழ்ச்சி ஆகியன தொழில்மயம் அழிதல் என குறிப்பிடப்படுகிறது.

II.விரிவிவான விடையளி:

1.இந்தியத் தொழில்மயம் அழிதலுக்கு பிரிட்டி'ாரின் வர்த்தகக் கொள்கை எவ்வாறு காரணமானது?

1. பிரிட்டி'ாரின் தடையில்லா வாணிபக் கொள்கை இந்திய வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை சந்தைவிலைக்கு விற்க கட்டாயபடுத்தியது.
2. இதனால் இந்தியர்களின் கைவினை தொழில் அழிந்தது.
3. கிழக்கிந்திய கம்பெனி மலிவான விலையில் இந்திய பொருட்களை வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளிடம் பெரும் இலாபத்திற்கு விற்றனர்.
4. இதனால் இந்திய பாரம்பரிய தொழில் பாதிப்படைந்தது.
5. பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்பட்டன.
6. இந்தியாவில் கொண்டு வரப்பட்ட ஆங்கிலேய பொருட்களுக்கும் பெயரளவில் மட்டுமே வரி விதிக்கப்பட்டன.

2.தோட்ட தொழில்கள் பற்றி விரிவாக எழுதுக?

தோட்ட தொழில்கள்:

1. ஐரோப்பாவில் தோட்ட தொழில் மிகப்பரந்து விரிந்தது.
2. தேநீர், காபி, மற்றும் கருநீலச்சாயம் (இண்டிகோ) அதிக அளவில் பரவி காணப்பட்டன.
3. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1939-ம் ஆண்டு காபி தோட்டமும் தொடங்கப்பட்டன.
4.தேயிலை தோட்டம் கிழக்கிந்திய பகுதிகளில் மிக முக்கிய தொழிலாக இருந்தது.
5. மூன்றாவது முக்கிய தொழில் சணல் -பல தொழிற்சாலைகள் உருவாக வழிவகுத்தல்.
6. தேயிலை, காபி, சணல் தொழிலகள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்கள் பலரால் கட்டுப்படுத்தப்பட்டன.
6. தேயிலை, காபி, சணல் தொழில்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்கள் பலரால் கட்டுப்படுத்தப்பட்டன.

3.1991-ம் ஆண்டு சீர்த்திருத்தங்களுக்குப் பிறகு தொழிற்துறையின் வளர்ச்சியை விளக்குக?

1.1991 □ம் ஆண்டு சீர்த்திருத்தம் தொழிற் துறை உற்பத்தி உயர் வளர்ச்சியடைந்தது.
2. தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல், விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
3.புதிய பொருளாதார கொள்கை வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறது
4.தகவல் தொழில் நுட்பம், கல்வி, மெண்பொருள் நவீன மயமாக்கலில் வளர்ச்சிபெற்றுள்ளது.
5.இயந்திரங்கள், தரிவாடங்கள், உள்கட்டமைப்பு, போக்குவரத்து, மின்சார உற்பத்தியில் வளர்ச்சியில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

VIII.உயர் சிந்தனை வினா:

1.எவ்வாறு கைவினைப்பொருட்களும், இயந்திர தயாரிப்புப் பொருட்களும் வேறுபடுகின்றன?

கைவினைப் பொருட்கள்:

1.இந்திய கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்த நிலையில் கைவினைப் பொருட்கள் இருந்தன.
2.நெசவு, மரவேலை தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகியவை பாரம்பரிய கைவினைப் பொருட்களாகும்.
3.தொழில் நுட்பம் பழமையானது.
4.குறைந்த உற்பத்தி செலவு.
5.பொருட்கள் தயாரிக்க அதிகநேரமாதல்.

இயந்திர தயாரிப்பு பொருட்கள்:

1. இங்கிலாந்தில் இயந்திரம் மூலம் மிக அதிக அளவில் நெசவு, இரும்பு எ.்.கு தொழில், விவசாயம் பிற அளவில் தொழில்கள் இயந்திரம் கொண்டு தயாரிக்கப்பட்டன.
2. உலகின் பல பகுதிகளில் விற்பனை சந்தைக்கு பயன்பட்டன.
3.புதுமையான தொழில்நுட்பம் உடையது.
4.அதிக உற்பத்தி செலவு, குறைந்த நேரத்தில் அதிக பொருட்கள் உற்பத்தி செய்ய இயலும்.

அலகு -7

## ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்.

**I**.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.பழங்கால நகரங்கள் எனப்படுவது.

அ.ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ.

2.ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம் ' நகரங்கள்.

அ.சூரத் ஆ.கோவா இ.பம்பாய் ஈ. மேற்கண்ட அனைத்தும்.

விடை : ஈ. மேற்கண்ட அனைத்தும்.

3.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய நகரமயமாக்கலின் ஒரு புதிய நடைமுறை.

விடை :அ.சூயஸ் கால்வாய் திறப்பு ஆ.நீராவிப் போக்குவரத்து அறிமுகம் இ.ரயில்வே கட்டுமானம் ஈ. மேற்கண்ட அனைத்தும்.

4.ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தது.

விடை : அ.வர்த்தகத்திற்காக.

5.புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம்.

விடை : இ.மதராஸ்.

6.1744 ஆம் ஆண்டு வரை கிழக்கிந்திய கம்பெனியின் முதன்மை குடியிருப்பாக இருந்தது எது?

விடை : இ.புனித ஜார்ஜ் கோட்டை

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக :

1.இந்தியாவில் இருப்புப் பாதை போக்குவரத்து அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு -----

விடை : 1853.

2.இந்தியாவின் □உள்ளாட்சி அமைப்பின் தந்தை□ என்று அழைக்கப்படுபவர் ----

விடை : ரிப்பன் பிரபு.

3.1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் ----- அறிமுகப்படுத்தியது.

விடை : இரட்டை ஆட்சி.

4.நகராட்சி உருவாவதற்குப் பொறுப்பாக இருந்தவர்----

விடை : சர் ஜோசியா சைல்டு.

5.------ இல் பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரூ கோகன் ஆகியோர் மதராசபட்டினத்தில் ஒரு தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனத்தை நிறுவுவதற்கு அனுமதி பெற்றனர்.

விடை : 1639.

**III**.பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1.பம்பாய் | -- | ஏழு தீவு. |
| 2.இராணுவ குடியிருப்புகள் | -- | கான்பூர். |
| 3.கேதர்நாத் | -- | சமய மையம். |
| 4.டார்ஜிலிங் | -- | மலை வாழிடங்கள். |
| 5.மதுரை | -- | பண்டடைய நகரம். |

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து நகரங்கள் செழித்து வளர்ந்தன.

விடை : சரி.

2.பிளாசிப்போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.

விடை : சரி.

3.புனித வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது.

விடை : தவறு.

4.குடியிருப்புகளில் இராணுவ வீரர்கள் வாழத் தொடங்கினர்.

விடை : சரி.

5.மதராஸ் 1998 இல் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.

விடை : தவறு.

V.சரியான கூற்றைத் தேர்வு செய்யவும் :

1.கூற்று : இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.

காரணம் : பிரிட்டி'ரின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகக் கொள்கை மற்றும் தொழில்துறை புரட்சி இந்திய உள்நாட்டு தொழில்களை அழித்தன.

விடை : இ.கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது.

2.பின்வரும் எந்த அறிக்கை 'அறிக்கைகள் உண்மையற்றவை?

I.ஸ்ரீரங்க ராயலு ஆங்கிலேயர்களுக்கு மதராசபட்டணத்தை மானியமாக வழங்கினார்.

II.டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் புனித ஜார்ஜ் கோட்டை கட்டியதற்கு பொறுப்பானவர்கள்.

III.1969 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.

விடை : அ.I மட்டும்.

3.கூற்று : ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.

காரணம் : அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.

விடை : இ.கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது.

IV.சுருக்கமான விடையளி:

1.நகர்ப்புற பகுதி என்றால் என்ன?

ஒரு நகர்புற பகுதி என்பது அதிக மக்கள் தொகை அடர்த்தியோடு, உணவு உற்பத்தியில்லாத தொழில்களில் ஈடுபடுவதும், நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வதும் ஆகும்.

2. மலைப்பிரதேசங்கள் காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியில் தனித்துவமான அம்சமாக இருந்தன ஏன்?

மலைகளின் குளிர்ந்த காலநிலை, வெப்பமான வானிலை, தொற்று நோயிலிருந்து பாதுகாப்பு அளித்தன.

மலைப்பிரதேசங்கள் படைகள் தங்குமிடமாகவும் எல்லைகளை பாதுகாக்கவும், தாக்குதலைத் தொடங்கும் இடமாகவும் இருந்தன.

3. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக?

18□ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷார் இந்தியாவை

1.கல்கத்தா 2.பம்பாய் 3.மதராஸ் என 3 மாகாண நகரமாக நிர்வாக நோக்கத்திற்காக பிரித்தனர்.

4.19-ம் நூற்றாண்டில் நகரமயமாக்கலின் புதிய போக்குக்கு ஏதேனும் நான்கு காரணங்களைக் கூறுக?

1.சூயஸ் கால்வாய் திறப்பு 2.நீராவி போக்குவரத்து அறிமுகம், 3.ரயில்வே சாலைகள் அமைத்தல் சுரங்கம் 4.கால் வாய்கள், துறைமுகங்கள், தொழிற்சாலை, வங்கி, தேயிலை தோட்டம், கப்பல் போக்குவரத்து, காப்பீடு

5. இராணுவ குடியிருப்பு நகரங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக?

1. இராணுவ குடியிருப்புகள் நகர்புற மையங்களாயிருந்தன
2. இராணுவ வீரர்கள் இந்த பகுதியில□ வசிக்கத் தொடங்கினர் இப்பகுதிகள் படிப்படியாக நகரங்களாக வளர்ந்தன

(எ.கா) □ கான்பூர், லாகூர்.

6. பிரிட்டி' ஆட்சியின் போது மதராஸ் மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள் யாவை?
மதராஸ் மாகாணம்:
1.தற்போதைய தமிழ்நாடு 2.லட்சத் தீவு 3.வடக்கு கேரளா 4.ராயலசீமா 5.கடலோர ஆந்திரா 6.கர்நாடக மாவட்டங்கள் மற்றும் 7.ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்களைக் கொண்டிருந்தது.

VII.விரிவான விடையளி:
1.காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றி விளக்குக?
1. கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் மதராஸ் - 1639, பம்பாய் -1661, கல்கத்தா -1690 பிரிட்டி'ார் புதிய நகரங்களை உருவாக்கினர்.
2. இங்கு வீடுகள், கடைகள், தேவாலயங்கள், வணிக மற்றும் நிர்வாக தலைமையகத்தை அமைத்தனர்.
3. 1757 □ம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின்னர் ஆங்கில கிழக்கிந்திய நிறுவன வர்த்தகம் விரிவடைந்தது.
4. சூயஸ் கால்வாய் திறப்பு, நீராவி போக்குவரத்து, ரயில்வே, சாலைகள், கால்வாய்கள், துறைமுகங்கள்.
5. மற்றும் வங்கி, காப்பீடு, தொழிற்சாலைகள், சுரங்கம் வளர்ச்சி நகரமயமாக்கள் வளர்ச்சி பெற்றது.

2. மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைப் பற்றி எடுத்துரைக்கவும்?
1. ஆங்கில கிழக்கிந்திய வணிக குழு, சூரத், மசூலிப் பட்டினத்தில் வணிக மையம் அமைத்தும் வளர்ச்சிபெறவில்லை.
2. பின் பிரான்சிஸ் டே 1637 □ல் தொழிற்சாலை, வணிக மையம் அமைக்க சென்னையை தேர்வுசெய்தார்.
3. திருப்பதி மேற்கே 12 கி.மீ தொலைவில் உள்ள சந்திரகிரி அரசரின் பிரதிநிதி தமர்லா வெங்கடபதி 1639 □ல் எழும்பூர் கூவம் நதிக்கு இடைப்பட்ட நிலத்தை மானிய ஒப்பந்த பத்திரத்தை கிழக்கிந்திய கம்பெனியின் பிரான்சிஸ்டே அவர்களுக்கு வழங்கினார்.
4. 1639 □ல் பிரான்சிஸ்டே, ஆண்ட்ரூ கோகன் ஆகியோர் வணிக தளத்துடன் கூடிய தொழிற்சாலை, மதராசப்பட்டனத்தில் கோட்டை அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டது.
5. இக்கோட்டை பின்னர் ஜார்ஜ் குடியிருப்பு (வெள்ளை நகரம் எனவும். இதன் அருகில் வசித்த கிராமங்கள் கருப்பு நகரம் எனவும் அழைக்கப்பட்டன.
6. இவ்வாறு மதராஸ் தோற்றம் உதயமானது.

3. இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது எப்படி?
1.ஆங்கிலேயரின் பொருளாதார கொள்கை, நகர வளர்ச்சி மூலம் இந்திய உற்பத்தி தொழில்கள் அழிக்கப்பட்டன.
2. இந்தியாவின் நகர்ப்புற கைவினைத் தொழில்களில் திடீர் சரிவு ஏற்பட்டது.
3. இறக்குமதி பொருட்களின் போட்டியால் ஒட்டுமொத்த தொழில்துறை கட்டமைப்பும் செயலிழந்து போயின.
4. அதிகப்படியான இறக்குமதி வரி மற்றும் ஏற்றுமதி சார்ந்த கட்டுப்பாடுகள். இந்திய பொருட்கள் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படுவது குறையலாயின.
5. இவ்வாறு இந்திய, பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.

அலகு - 8

## காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை:

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.------சமூகமானது தனக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் மாற்றங்களை உட்கிரகித்தும் வெளிப்படுத்தியும் நீக்கியும் தொர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது.

விடை : அ.மனித

2..இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் .

விடை: ஆ.முத்துலட்சுமி அம்மையார்.

3.சதி எனும் நடைமுறை ஒழிக்கப்பட்ட ஆண்டு.

விடை: இ.1829.

4.ட .ஆ. மலபாரி என்பவர் ஒரு

விடை :ஈ.பத்திரிக்கையாளர்.

5.பின்வருவனவற்றில் எது ’ எவை சீர்திருத்த இயக்கம்.: . இயக்கங்கள்)?

விடை : அ.பிரம்ம சமாஜம். ஆ.பிரார்த்தனை சமாஜம் இ.ஆரிய சமாஜம் ஈ.மேற்கண்ட அனைத்தும்.

6.பெதுன் பள்ளி --- இல் து .நு. னு பெதுன் என்பவரால் நிறுவப்பட்டது.

விடை : ஆ.1849.

7.1882 ஆம் ஆண்டில் சிறுமிகளுக்கான ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க எந்த ஆணையம் பரிந்துரைத்தது?

விடை : இ.ஹண்டர்.

8.சாரதா குழந்தை திருமண மசோதாவானது சிறுமிகளுக்கான குறைந்தபட்ச திருமண வயதை ---- என நிர்ணயித்தது.

விடை : ஈ.14.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.--------- 1819 இல் கிறித்தவ சமயப்பரப்பு குழுக்களால் அமைக்கப்பட்டது.

விடை : பெண்சிறார் சங்கம்.

2.சிவகங்கையை சேர்ந்த -------- என்பவர் பிரிட்டி‘ாரை எதிர்த்து வீரமாக போராடினார்.

விடை : வேலுநாச்சியார்.

3.இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவியவர் -------

விடை : கோபால கிரு‘ண கோகலே.

4.தமிழ்நாட்டின் மிகப்பெரிய சமூக சீர்திருத்தவாதிகளில் ஒருவர் ------ ஆவார்.

விடை :ஈ.வெ. ரா. பெரியார்.

5.கந்துகூரி வீரேசலிங்கம் வெளியிட்ட பத்திரிகையின் பெயர்----------

விடை :விவேக வர்த்தினி.

**III**.பொருத்துக:

1.பிரம்மஞான சபை - அன்னிபெசன்ட்.
2.சாரதா சதன் - பண்டித ரமாபாய்
3.உட்ஸ் கல்வ ிஅறிக்கை - 1854.
4.நிக்கோலோ கோண்டி - இத்தாலிய பயணி.
5.வரதட்சணை - சமூக தீமை.

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1.ரிக் வேத காலத்தில் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விடை : சரி.

2.தேவதாசி முறை ஒரு சமூக தீமை.

விடை :சரி.

3.இந்திய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடி ராஜா ராம்மோகன் ராய்.

விடை :சரி.

4.பெண்களுக்கான 23 சதவீத இட ஒதுக்கீடு என்பது பெண்களின் சமூக  அரசியல் நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கிறது.

விடை : தவறு.

5.1930 ஆம் ஆண்டு சாரதா சட்டம் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கான திருமண வயதை உயர்த்தியது.

விடை : சரி.

**V**. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும் :

1.சரியான இணையை கண்டுபிடி.

விடை :அ.மகளிர் பல்கலைக்கழகம் --பேராசிரியர் **D .K.** கார்வே.

2.மாறுபட்ட ஒன்றினைக் கண்டுபிடி.

விடை : ஈ.விதவை மறுமணம்.

3.பின்வரும் கூற்றைகளைக் கவனிக்கவும்.

**I**.பேகம் ஹஸ்ரத் மஹால், ராணி லட்சுமி பாய் ஆகியோர் ஆங்கிலேயர் மீது ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர் .

**II**. தமிழ்நாட்டின் சிவகங்கையைச் சேர்ந்த வேலுநாச்சியார், பிரிட்டிஷாருக்கு எதிராக வீரமாக போராடினார்.

விடை :இ. **I** மற்றும் **II** சரி.

4.கூற்று : ராஜா ராம்மோகன் ராய் அனைத்து இந்தியர்களாலும் மிகவும் நினைவு கூறப்படுகிறார்.

காரணம் : இந்திய சமுதாயத்தில் இருந்த சதி என்ற தீயபழக்கத்தை ஒழித்தார்.

விடை : இ.கூற்று சரியானது. கூற்று காரணம் கூற்றை விளக்குகிறது.

2 மதிப்பெண்கள் வினா விடைகள்:

1.பெண்களின் முன்னேற்றத்திற்காக போரடிய முக்கிய தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக?

1.ராஜாராம்மோகன் ராய் 2.தயானந்த சரஸ்வதி 3.கேசவ சந்திர சென் 4.ஈஸ்வர சந்திர வித்யாசாகர் 5.பண்டித ரமாபாய் 6.டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் 7.ஜோதிராவ் பூலே 8.பெரியார் 9.ஈ.வே.ரா 10.டாக்டர் தர்மாம்பாள் போன்ற பல முக்கிய சமூக  சமய சீர்த்திருத்தவாதிகள் பெண்களின் மேம்பாட்டிற்காக போராடினர்.

2.சமூக தீமைகளில் சிலவற்றைப் பட்டியலிடுக?

சமூக தீமைகள்:

1.பெண் சிசுக்கொலை 2.பெண் சிசு கருக்கொலை 3.குழந்தை திருமணம் 4.சதி 5.தேவதாசி முறை 6.அடிமைத்தனம்.

3.இடைக்கால இந்தியாவில் குறிப்பிடத்தக்க பெண்கள் யாவர்?

இடைக்கால இந்தியாவில் குறிப்பிடத்தக்க பெண்கள்:

1.ரசியா சுல்தானா 2.ராணி துர்காவதி 3.சாந்த் பீபி 4.நூர்ஜஹான் 5.ஜஹனாரா 6.ஜீஜாபாய் மற்றும் 7.மீராபாய்

4.இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமான பெண்களைக் குறிப்பிடுக?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள்:

1.சிவகங்கையின் வேலு நாச்சியார் 2.பேகம் ஹஸ்ரத் மஹால் 3.ஜான்சி ராணி லட்சுமிபாய் போன்றோர் ஆயுதமேந்தி போராடி இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களாவர்

5.சதி பற்றி குறிப்பு வரைக?

1. சதி என்பது இந்தியாவில் (ராஜபுத்திரர், வங்காளப் பகுதியில்) கணவன் இறந்தால் அவரின் மனைவியை கணவருடன் சேர்த்து உயிருடன் எரித்தும் புதைத்தும் உறவினர்களால் செய்யப்பட்ட இந்துமத சடங்காகும்.
2. இச்சமூக தீமை ராஜாராம் மோகன்ராய் முயற்சியால் வில்லியம் பெண்டிங் பிரபு டிசம்பர் 4, 1829 ல் விதிமுறை XVII என்ற சட்டத்தின் மூலம் சதி தடைசட்டம் நிறைவேற்றினார்

VII.விரிவான விடையளி:

1.சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கினைக் கண்டறியவும்?
1.தொடக்ககால காலனிய எதிர்ப்பு போரட்டத்தில் பெண்கள் பல்வேறு வகைகளில் முக்கிய பங்காற்றினர்.
2.சிவகங்கையின் வேலுநாச்சியார் ஆங்கிலேயருக்கு எதிராக வீரதீரமாக போரிட்டு சிவகங்கையின் தனது ஆட்சியை மீட்டெடுத்தார்.
3.1857-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் பேகம் ஹஸ்ரத் மஹால், ஜான்சியின் ராணி லட்சுமிபாய் போன்றோர் ஆயுதமேந்தி போராடினர்.
4.விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் அயல்நாட்டு பொருட்களை புறக்கணித்தல், ஊர்வலங்களில் கலந்துகொள்வது, சட்டங்களை மீறுதல் மூலம் தடியடி பெற்று சிறைக்கு சென்றனர்
5.விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் போராட்டத்தில் புதிய பரிமாணத்தை சேர்த்தது.

2.சமூக தீமைகளை ஒழிப்பதில் சமூக சீர்த்திருத்தவாதிகளின் பங்களிப்பை விளக்குக?
1.பெண் கல்வி 2.விதவை மறுமணச் சட்டம் 3.குழந்தை திருமணம், பெண் சிசுக்கொலை எதிர்ப்பு 4.கலப்பு திருமணம் 5.சாதி முறை எதிர்ப்பு 6.ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமநிலை போன்றவற்றில் சமூக சீர்த்திருத்தவாதிகள் பாடுபட்டனர்.
2.இராஜாராம் மோகன்ராய் -சதி தடைச் சட்டம் -1829.
3.ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் -விதவை மறுமண சட்டம் -1856.
4.வீரேசலிங்கம் - முதல் பெண்கள் பள்ளி  1874.
5.ஆ.பு. ரானடே, மலபாரி, கோகலே, பெரியார் போன்றோர் பெண்கல்வி, விதவை மறுமணம்.
6.ரமாபாய் - 1889 பம்பாயில் விதவைகளுக்கு கற்றல் இல்லம் அமைத்தார்.
7.Dr. தர்மாம்பாள், Dr.அன்னிபெசண்ட் Dr. முத்துலட்சுமி- பெண்கள் முன்னேற்றம், தேவதாசி முறையை எதிர்த்து போராடினர்.

3.சீர்த்திருத்த இக்கத்தின் தாக்கம் குறித்து விரிவாக விடையளிக்கவும்?
1.பெண்களின் விடுதலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
2.இது மக்களிடையே தேசிய விழிப்புணர்வை உருவாக்கியது.
3.தியாகம், சேவை மற்றும் பகுத்தறிவு உணர்வு ஆகியவற்றை உருவாக்கியது.
4.சதி மற்றும் பெண்சிசுக்கொலை ஆகியவை சட்டவிரோதமாக்கப்பட்டது.
5.விதவை மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

## புவியியல் அலகு - 1

## பாறை மற்றும் மண்.

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக் கோளம் என அழைக்கப்படுகிறது?
விடை :இ.நிலக்கோளம்.
2.உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்.
விடை : ஈ.டிசம்பர் 5.
3.உயிரினப் படிமங்கள் ------- பாறைகளில் காணப்படுன்றன.

விடை :அ. படிவுப் பாறைகள்.

4.மண்ணின் மேல் நிலை அடுக்கு ?

விடை :அ. கரிம மண் அடுக்கு.

5.பருத்தி வளர ஏற்ற மண்

விடை : ஆ.கரிசல் மண்.

6.மண்ணின் முக்கிய கூறு

விடை : ஆ.கனிமங்கள்.

7.கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?

விடை : அ.வண்டல் மண்.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு -------

விடை : பாறையியல்.

2.-------- மண் தினைப் பயிர்கள் விளைவிப்பதற்கு ஏற்றதாகும்.

விடை : கரிசல்.

3.புவியின் தோல் என்று ------ அழைக்கப்படுகிறது.

விடை : மண்.

4.உருமாறிய பாறைகளின் ஒரு வகையான ------ பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது.

விடை : வெள்ளை பளிங்கு.

5.------ பாறை முதன்மை பாறை என்று அழைக்கப்படுகிறது.

விடை : தீப்பாறை.

**III**.பொருத்துக:

1.கிரானைட் -- அடியாழப் பாறைகள்.

2.மண் அடுக்கு -- அடிப்பாறை.

3.பாரன் தீவு -- செயல்படும் எரிமலை.

4.மண் வளப்பாதுகாப்பு -- பட்டைப் பயிரிடல் வேளாண்மை.

2)

1.பசால்ட் (கருங்கல்) --- வெளிப்புற தீப்பாறைகள்.

2.சுண்ணாம்புப் பாறை -- படிவுப்பாறைகள்.

3.நிலக்கரி -- ஆந்த்ரசைட்

4.ஜெனிஸ் (நைஸ்) -- உருமாறியப் பாறைகள்.

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1.தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.

விடை : சரி.

2.களிமண் பாறையிலிருந்து பலகைக்கல் (**slate**) உருவாகிறது.

விடை : தவறு.

3.செம்மண் சுவருதல் (டுநயஉாைபெ) செயல்முறைகளில் உருவாகிறது.

விடை : தவறு.

4.இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு செயற்கை மணல் (**m – sand**)பயன்படுகிறது.

விடை : சரி.

5.படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.

விடை : தவறு.

**V**. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க:
1) விடை : இ.படிவுப்பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.
2) விடை : இயற்கை உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.

**VI**. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்றைக் கண்டுபிடித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
கூற்று: 1. படிவுப் பாறைகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்டவை.
கூற்று :2. படிவுப் பாறைகள் பல்வேறு காலங்களில் உருவானவை.
விடை : அ.கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம் .

**VII.**காரணம் கூறுக:
1.நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன □ காரணம் கூறுக?
இரசாயன படிவுப் பாறைகள், பாறைகளில் உள்ள கனிமங்கள் நீரில் கரைந்து, இரசாயன கலவையாக மாறுகிறது. இவை உப்புபடர் பாறைகள் எனப்படும்.
இவை ஆவியாதல் மூலமாக உருவாகின்றன. உ.ம் -ஜிப்சம்.
2.தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது □காரணம் கூறுக?
தீப்பாறைகள் புவியின் அழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக்குழம்பு (**magma**) உறைந்து உருவானதாகும்.

**VIII.** வேறுபடுத்துக:
1.உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள் -வேறுபடுத்துக?

| உருமாறிய பாறைகள் | படிவுப் பாறைகள் |
|---|---|
| அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப் பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது. | அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு (காற்று, நீர், பனியாறுகள்) படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இருகியதால் படிவுப் பாறைகள் உருவாகின்றன. |

2.மண்வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு □வேறுபடுத்துக?

| மண்வள பாதுகாப்பு | மண்ணரிப்பு |
|---|---|
| மண்வள பாதுகாப்பு □ என்பது மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண்வளத்தை மேம்படுத்தும் செயல் முறையாகும் .<br>உம். காடுகள் - அணைகள் | மண்ணரிப்பு □ என்பது ஓடும் நீர், காற்று போன்ற இயற்கை காரணிகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் மண்ணின் மேலடுக்கு நீக்கப்படுதல் (அ) அரிக்கப்படுதல் ஆகும். |

**IX.**சுருக்கமான விடையளி:
1.தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?
தீப்பாறைகள் புவியின் அழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக்குழம்பு உறைந்து உருவானதாகும்.
இவை முதன்மை (அ) தாய்ப்பாறை என்றும் அழைக்கப்படும்

2.பாறைகளின் கூட்டமைப்பு பற்றி விவரி?
பாறைகளின் கூட்டமைப்பு:
1.தீப்பாறைகள் - ஊடுருவிய, வெளிப்புற தீப்பாறைகள்.
2.படிவுப் பாறைகள் - கரிம படிவு, கனிம, இராசாயன, பௌதிக படிவுகள்.
3.உருமாறியப் பாறைகள் -வெப்ப, இயக்க உருமாறிய பாறைகள்.

3.□பாறைகள்□ □ வரையறு?
பாறைகள் என்பது திட கனிம பொருட்களால் புவியின் மேற்பரப்பில் மற்ற கோள்களில் உள்ளதுபோல் உருவானதாகும்.
2000 கனிமங்களில் 8 அடிப்படைக் கனிமங்கள் ஆகும்.

4.மண்ணின் வகைகளைக் கூறுக?
மண்ணின் வகைகள்:
1.வண்டல் மண் 2.கரிசல் மண் 3.செம்மண் 4.சரளை மண் 5.மலை மண் 6.பாலை மண்.

5.மண்வளப் பாதுகாப்பு என்றால் என்ன?
மண் வள பாதுகாப்பு என்பது மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண்வளத்தை மேம்படுத்தும் செயல்முறையாகும்.
காடுகள் வளர்த்தல், அணைகள் கட்டுதல், சம உயர, படிக்கட்டு மற்றும் பயிற்சுழற்சி வேளாண்மை மூலம் மண் வளத்தை பாதுகாக்கலாம்,

X.விரிவான விடையளி:
1.மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி?
மண் என்பது பல்வகை கரிமப் பொருள்கள், கனிமங்கள், வாயுக்கள், திரவப் பொருள்கள் மற்றும் பல உயிரினங்கள் கலந்த கலவையாகும் மண் புவியின் தோல் எனப்படும்.
பாறைகள், வானிலை சிதைவு மற்றும் அரித்தல் செயல் முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு மண்ணாக உருவாகிறது.
மண்ணில் கனிமங்கள் 45% கரிமப் பொருள்கள் 5% நீர் 25 % மற்றும் காற்று 25% கொண்டுள்ளது.
நீர், காற்று, வெப்பநிலைமாறுபாடு, புவி ஈர்ப்பு விசை, வேதிபரிமாற்றம், உயிரினங்கள் மற்றும் அழுத்த வேறுபாடுகளால் தாய்ப்பாறைகள் சிதைந்து துகள்களாக மண் உருவாகின்றன.
மண் - வண்டல், கரிசல், செம்மண், சரளை, மலை, பாலை மண், என வகைப்படும்.

2.பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்?
பாறைகள் 1.தீப்பாறைகள் 2.படிவுப் பாறைகள் 3.உருமாறிய பாறைகள் என 3 வகைப்படும்.
தீப்பாறைகள்:
புவியின் அழமான பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு உறைந்து உருவானதாகும் இவை கடினமானது, எரிமலை குழம்பு லாவாவால் ஏற்படுகிறது.
படிவுப் பாறைகள்:
தீப்பாறைகள் காற்று, நீர், பனியாறுகளால் அரிக்கப்பட்டு நீண்ட காலமாக வெப்பம் அழுத்தத்தால் இறுகி படிவு பாறைகளாகின்றன.
இவைகளில் மென்தன்மை, உயிரின படிமங்கள் காணப்படுகின்றன. இவை உயிரின, பௌதிக, இரசாயன படிவுப் பாறைகள் என மூன்று வகைப்படும்.

உருமாறிய பாறைகள்:

அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப் பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகளாகின்றன. இவை படிக தன்மை மற்றும். வெளிர், கருமை நிற கனிமங்களை கொண்டவை.

இப்பாறை வெப்ப மற்றும் இயக்க உருமாற்ற பாறைகள் என இருவகைப்படும்.

3.மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்?

1.இலை, மக்கு அடுக்கு □கரிமப் பொருட்களால் உருவானவை.

2.மேல்மட்ட அடுக்கு □ கரிம மற்றும் கனிமப் பொருட்களால் ஆன அடுக்கு.

3.உயர்மட்ட அடுக்கு □ களிமண், இரும்பு, அலுமினிய ஆக்சைடு, தாதுக்கள் காணப்படும்.

4. அடி மண் அடுக்கு -தாய்பாறையின் இரசாயன (அ) பௌதிக மாற்றத்திற்கு உட்பட்டவை. இரும்பு, களிமண், அலுமினிய ஆக்சைடு, கனிமப் பொருட்கள் கொண்ட திரள் மண்டலம் ஆகும்.

5.தாய்பாறை அடுக்கு □சிதைந்த, சிதையாத அடிமட்ட பாறைகள்.

4.மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்?

மண்ணின் வகைகள்:

1.வண்டல் மண்: ஓடும் நீரில் படியவைக்கப்பட்ட வளமான மண், நெல், கரும்பு, கோதுமை, சணல் பயிரிட ஏற்றமண்.

2.கரிசல் மண்: தீப்பாறைகள் சிதைவால் உருவானது. களிமண்தன்மையுடன் ஈரப்பதத்தை தக்க வைக்கும், பருத்தி நன்கு வளரும்.

3.செம்மண்: உருமாறிய, படிவு பாறைகள் சிதைவால் உருவாகிறது. இதில் இரும்பு ஆக்சைடு உள்ளதால் சிகப்பு நிறம் கொண்டது. திணை நன்கு வளரும்.

4.சரளை மண்: அதிக வெப்பம், மழை பகுதியில் அயன மண்டல கால நிலையில் உருவாகிறது.

வளம் குறைந்த மண், தேயிலை, காப்பி, போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

5.மலை மண்: மலைச்சரிவில் காணப்படும், காரத்தம்மையுடன் உயரத்திற்கு ஏற்றவாறு இதன் பண்புகள் மாறுபடும்.

6.பாலை மண்: அயனமண்டல பாலைவனத்தில் காணப்படும் இது உவர்தன்மை, மற்றும் நுண்துகளைக் கொண்டது. வளம் குறைந்த இம்மண்ணில் வேளாண்மை செய்ய இயலாது.

## அலகு - 2

## வானிலை மற்றும் காலைநிலை:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.புவியின் வளிமண்டலம் ---நைட்ரஜன் மற்றும் ---ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது.

விடை : 78% மற்றும் 21 %

2.----ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

விடை : இ.காலநிலை.

3.புவி பெறும் ஆற்றல் .

விடை : ஈ.வெப்பம்.

4.கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.

விடை: ஈ.சம மழையளவுக் கோடு.

5. -------என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.

விடை : ஈரநிலை மானி.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.-------- என்பது குறுகிய காலத்தி வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.

விடை : வானிலை.

2.வானிலையைப் பற்றிய அறிவியல் ஆய்வு -------

விடை : வளியியல்.

3.புவியில் அதிகபட்ச வெப்பம் பதிவான இடம் -------

விடை : மரணப்பள்ளத்தாக்கு.

4.காற்றில் உள்ள அதிக பட்ச நீராவிக் கொள்ளளவுக்கும் உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம்.

விடை : ஒப்பு ஈரப்பதம்.

5.அனிமாமீட்டர் மற்றும் காற்றுமானி மூலம் -----மற்றும் -------ஆகியவை அளக்கப்படுகின்றன.

விடை : காற்றின் வேகம் காற்றின் திசை.

6.சம அளவுள்ள வெப்ப நிலையை இணைக்கும் கற்பனைக் கோடு -----

விடை : சம வெப்பக்கோடு.

**III**.பொருத்துக:

1.காலநிலை -- நீண்ட நாளைய மாற்றங்கள்

2.ஐசோநிப் -- சம அளவுள்ள பனிபொழிவு

3.ஈரநிலைமானி -- ஈரப்பதம்.

4.ரேடார் -- புயலின் அமைவிடத்தையும் அது நகரும் திசையையும்அறிந்து கொள்வது

5.குறைந்த அழத்தம் -- சூறாவளி.
(தாழ்வு அழத்த மண்டலம் )

**IV.** சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1.புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும்.

விடை : சரி.

2.வானிலை பற்றிய அறிவியல் பிரிவிற்கு காலநிலை என்று பெயர்.

விடை : தவறு.

3.சமமான சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளை இணைக்கும் கோட்டிற்கு சம சூரிய வெளிச்சக் கோடு என்று பெயர்.

விடை : சரி.

4.ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அரனிராய்டு அழுத்த மானி. விடை : தவறு.

**V**.சுருக்கமாக விடையளி:

1.காலநிலை □ வரையறு?

காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய (35 ஆண்டுகள்) வானிலை சராசரி நிகழ்வை குறிக்கும் வளிமண்டல வானிலை கூறுகளின் சராசரி ஆகும்.

2.□வெயிற் காய்வு□ என்றால் என்ன?

1.புவியும் அதன் வளிமண்டலமும் சூரியனின் வெப்ப கதிர் வீசலால் வெப்பம் அடைகின்றன.

2.சூரிய ஒளி மூலம் புவி வெப்பமடைதல் வெயிற் காய்வு எனப்படும்.

3.வளிமண்டலக் காற்றழுத்தம் என்றால் என்ன?

புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே வளிமண்டல அழுத்தம் அல்லது காற்றழுத்தம் எனப்படும்.

காற்றின் அழுத்தம் காற்றழுத்தமானியால் அளவிடப்படுகிறது.

4.சிறுகுறிப்பு வரைக: கோள் காற்று.். நிரந்தக் காற்று?

கோள் காற்றுகள்: ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் அல்லது நிலையான காற்று என்று பெயர்.

இவை பருவகால காற்று, வியாபார காற்று, நிலக்காற்று, கடல் காற்று என வகைப்படும்.

5.சம அளவுக் கோடுகள் - ஐசோலைன்ஸ் என்றால் என்ன?

சமஅளவுக் கோடு என்பது சம அளவுள்ள இடங்களை இணைப்பதாகும். நில வரைபடங்களில் வானிலைக் கூறுகளின் பரவலைச் சம அளவுக் கோட்டு வரைபடம் மூலம் காண்பிக்கப்படுகிறது. சம வெப்ப, சூரிய, காற்றழுத்த, மழையளவு கோடுகள் சமஅளவுக் கோடுகள் எனப்படும்.

II.வேறுபடுத்துக:

1.காலநிலை மற்றும் வானிலை வேறுபடுத்துக?

| குாலநிலை | வுானிலை |
|---|---|
| காலநிலை: என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய 35 ஆண்டுகால வளிமண்டல வானிலை சராசரியைக் குறிக்கும். | வானிலை: என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் ஒரு நாளில் (அ) ஒருவாரம் (அ) ஒரு மாதத்தில் குறுகிய கால வளிமண்டல நிகழ்வான. சூரிய வெளிச்சம், வெப்பம், மேகமூட்டம். காற்றின் திசை, காற்றழுத்தம், ஈரப்பதம், மழைப்பொழிவு இவைகளின் தினசரி நிகழ்வை குறிக்கும். |

2.முழுமையான ஈரப்பதம் மற்றும் ஒப்பு ஈரப்பதம் வேறுபடுத்துக?

| முழுமையான (உண்மையான) ஈரப்பதம் | ஓப்பு ஈரப்பதம் |
|---|---|
| ஒரு கன மீட்டர் காற்றில் எவ்வளவு கிராம் நீராவி உள்ளது என்பது ஈரப்பதம் எனப்படும். | ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் உள்ள நீராவியின் சராசரி விகிதம் ஒப்பு ஈரப்பதம் எனப்படும். |

3.கோள் காற்று மற்றும் பருவகாலக் காற்றுகள் வேறுபடுத்துக?

| கோள் காற்றுகள் | பருவகால காற்றுகள் |
|---|---|
| ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் எனப்படும்.<br>எ.கா.வியாபார காற்று. | பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும், எ.கா.நிலக்காற்று, கடல் காற்று. |

VII.காரணம் கூறுக.

1.காலநிலையும் வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன  காரணம் கூறுக?

உயரம், நிலப்பரவல், நீர் நிலைகள் மலையமைவு, காற்றழுத்தம், காற்று மற்றும் கடல் நீரோட்டங்கள் வெப்பம், கடலிலிருந்து தூரம் வானிலை காலநிலை வேறுபாட்டிற்கு காரணமாகும்.
2.உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது காரணம் கூறுக?
வெப்பநிலை செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் வேறுபடுகிறது. வெப்பம் மாறும் மண்டலத்தில், வெப்பநிலையானது 1000 மீட்டர் உயரத்திற்கு $6.5^{o}$ என்ற அளவில் வெப்பநிலை குறைந்து கொண்டே செல்கிறது இதனை வெப்ப குறைவு வீதம் என்று அழைப்பர்.
3.மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்கு செல்லும்போது ஆக்சிஜன் சிலிண்டர்களை எடுத்து செல்கின்றன □ காரணம் கூறுக?
மிக உயரமான இடங்களில் காற்றில் ஆக்சிஜன் அளவும் காற்றின் அழுத்தமும் குறைவதால் அதனால் மூச்சுதினறல் மற்றும் மனிதர்கள் அங்கு இறக்கக் கூடும்.
எனவே மலை ஏறுபவர்கள உயர்ந்த சிகரங்களில் ஏறும்பொழுது ஆக்சிஜனை உருளையில் அடைத்து எடுத்துச் செல்கின்றனர்.

**VIII**.விரிவான விடையளி:
1.வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது?
வெப்பநிலை என்பது ஒரு குறிப்பிட்ட கன அளவு காற்றில் குறிப்பிட்ட நேரத்தில் அளவிடப்படுகிறது. இது செல்சியஸ், பாரன்ஹீட் மற்றும் கெல்வின் அளவுகளால் அளவிடப் படுகிறது.
வானிலை ஆய்வாளர்கள் வெப்பநிலையை அளக்க வெப்பமானி, ஸ்டீவன்சன் திரை வெப்பமானி மற்றும் குறைந்தபட்ச □ அதிகபட்ச வெப்பமானி மூலமும் கணக்கிடுகிறார்கள்.
சூரியக் கதிர்களிலிருந்து புவி பெறுகின்ற வெப்ப ஆற்றலானது வெளியேறுகின்ற புவி கதிர் வீசலால் இழக்கப்படுகிறது.
வளிமண்டலம் புவிகதிர்வீசலால் வெளியேற்றும் வெப்பத்தால் பிற்பகல் பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணிக்குள் அதிகபட்ச வெப்ப நிலை பதிவிடப்படுகிறது
குறைந்தபட்ச வெப்ப நிலை அதிகாலை 4 மணி முதல் சூரிய உதயத்திற்கு முன் பதிவாகிறது.

2.காற்றையும், அதன் வகைகளைப் பற்றியும் விவரி?
1.கிடைமட்டமாக நகரும் வாயுவிற்கு காற்று என்று பெயர்.
2.செங்குத்தாக நகரும் வாயுவிற்கு காற்றோட்டம் என்று பெயர்.
3.காற்று எப்போதும் உயர் அழுத்தப்பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்தப் பகுதியை நோக்கி வீசும்.
4.காற்று 3 வகைப்படும். அவை
1.கோள் காற்றுகள்: ஆண்டு முழுவதும் ஓரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள்.
எ.க. வியாபாரக் காற்று.
2.பருவக் காற்றுகள்: பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும். இவை கோடைக் காலத்தில் கடலிலிருந்து நிலத்தை நோக்கியும். குளிர்காலத்தில் நிலத்திலிருந்து கடலை நோக்கியும் வீசும்.
3.தலக்காற்றுகள்: ஒரு நாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிறிய பகுதியில் வீசும்.
எ.க. நிலக் காற்று, கடல் காற்று.
3.வானிலைக் கூறுகளையும் அதை அளக்க உதவும் கருவிகளையும் பட்டியலிடுக?
1.வானிலைக் கூறுகள்: வெப்பநிலை, மழை வீழ்ச்சி, காற்றழுத்தம் ஈரப்பதம் மற்றும் காற்று ஆகும்.

2.வெப்பநிலை என்பது வானிலை மற்றும் காலநிலையின் முக்கியமான கூறு ஆகும்.
3.காற்றழுத்தத்தை காற்றழுத்தமானி மூலம் அளவிடப்படுகிறது.
4.ஈரநிலைமானி (ஹைக்ரோ மீட்டர்) கொண்டு காற்றின் ஈரப்பதம் அளக்கப்படுகிறது.
5.பியோபோர்டு அளவை என்ற கருவி காற்றின் வேகத்தை அளவிட பயன்படுகிறது.
6.அனிமா மீட்டர் காற்றின் வேகத்தை அளவிடபயன்படுகிறது.
7.காற்று மானி □ காற்றின் திசையை அளக்க பயன்படுகிறது.

## அலகு -3
## நீரியல் சுழற்சி:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு --- என்று பெயர்.
விடை : ஆ.நீரின் சுழற்சி.

2.புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் ----
விடை : இ. 2.80 %

3.நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு ----- என்று பெயர்.
விடை : அ.நீர்திரவமாய் சுருங்குதல்.

4.நீர் மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு -----
விடை :ஈ. நீர் வழிந்தோடல்.

5.நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு ----என்று அழைக்கின்றனர்.
விடை : அ.நீர் உட்கசிந்து வெளியிடுதல்.

6.குடிப்பதற்கு உகந்த நீரை ----- என்று அழைப்பர்.
விடை :இ.நன்னீர்.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு ------ என்று அழைக்கப்படுகிறது.
விடை : ஈரப்பதம்.

2.நீர்ச் சுழற்சியில் ------ நிலைகள் உள்ளன.
விடை : 3

3.வளிமண்டலத்திற்கு புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் -----என்று பெயர்.
விடை : மழை.

4.மழைத்துளியின் அளவு 0.5 மீ குறைவாக இருந்தால், அம்மழை பொழிவின் பெயர் ----
விடை : தூறல்.

5.மூடுபனி ------ ஐ விட அதிக அடர்த்தி கொண்டது.
விடை: அடர்மூடுபனி

III.பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1.தாவரங்கள் | -- | நீர் உட்கசிந்து வெளியிடுதல். |
| 2.நீர் சுருங்குதல் | -- | மேகங்கள். |
| 3.பனித்துளி மற்றும் மழைத்துளி | -- | கல்மழை |
| 4.நீர் ஊடுருவுதல் | -- | புவியின் மேற்பரப்பு. |

IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்:

1.நீராவியாதல் என்பது

I.நீராவி நீராக மாறும் செயலாக்கம்

II. நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

III.நீர் 100 $^{O}$ C வெப்பநிலையில் கொதிக்கிறது. ஆனால் O $^{O}$ C வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

IV. ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைகிறது.

விடை : இ.II III சரி

V.சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.212 $^{O}$F வெப்பநிலையில் நீர் கொதிக்கிறது ஆனால் 32 $^{O}$F வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

விடை : சரி.

2.மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகளைப் பெற்றிருப்பதில்லை.

விடை : தவறு.

3.அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடைநீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.

விடை : சரி.

IV.சுருக்கமான விடையளி:

1.நீர் கொள் பரப்பு பற்றி குறிப்பு வரைக?

<u>நீர் கொள் பரப்பு</u>

புவியில் உள்ள மொத்த நீரில் 97. 2% உவர்ப்பு நீராகவும் மற்றும் 2.8.% நன்னீராகவும் உள்ளது.

மீதமுள்ள 0.6% நீர் புவியின் மேற்பரப்பிலும், நிலத்தடி நீராகவும் கிடைக்கின்றது.

பனியாறுகள், பனிமலைகள் - 2.15 %

ஆறு, ஏரி - 0.01 %

மற்ற நீர் வடிவங்கள் - 0.04 %

2.நீர் சுழற்சி வரையறு?

நீரியல் சுழற்சி சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வு.

நீர் கடலிலிருந்து ஆவியாதல் மூலம் வளிமண்டலத்திற்குச் சென்று, பின் வளிமண்டலத்திலிருந்து மழைப் பொழிவாக நிலத்திற்கும், நிலத்திலிருந்து நீராக கடலுக்கும் சென்றடைகிறது.

3.பனி உருவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?

நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது.

பொருட்களின் வெப்ப நிலை பனிநிலையின் வெப்பநிலையை விடக் குறைவாக இருக்கும் பொழுது பனி உருவாகிறது.

4.□மேல்மட்ட நீர் வழிந்தோடல்□ குறிப்பு வரைக?

மழை நீர் நிலச்சரிவின் காரணமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வது நிலநீர் ஓட்டம் ஆகும்.

இந்த நிலநீர் ஓட்டம் - ஆறுகள், சிறு ஓடைகள் மற்றும் கடல்களில் இணைவதால் இது மேல்மட்ட நீர் வழிந்தோடல் என அழைக்கப்படுகிறது.

VII.<u>காரணம் கூறுக</u>:

1.நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது □ காரணம் கூறுக?
மழைநீர் நிலத்திலிருந்து நிலத்திலிருந்து புவிக்கு அடியில் உள்ள பாறைகளின் அடுக்குகளைச் சென்றடைகிறது, இதனால் நீர் புகாப் பாறைகளில் (மண்ணில் குறைவான நீர் ஊடுருவல் உள்ள இடங்களில் நீரின் ஊடுருவல் மிகவும் குறைவாக இருக்கும்.

2.புவியில் நன்னீர் குறைவாக உள்ளது □ காரணம் கூறுக?
புவியில் உள்ள மொத்த நீரில் 97.2 % உவர்ப்பு நீராகவும் மற்றும் 2.8% நன்னீராகவும் உள்ளது.
புவியின் மேற்பரப்பில் காணப்படும் 2.2% நன்னீரில்
பனியாறுகள் = 2.15%
பனிமலைகள்
ஏரிகள், ஆறுகள் = 01% இருக்கிறது.
மீதமுள்ள நீர் = 0.4% மட்டும் நீர் வடிங்களக உள்ளது.

3.துருவப்பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் பனிப்பொழி பொதுவான நிகழ்வாக உள்ளது □ காரணம் கூறுக?
1.துருவப் பகுதி, மலைப் பகுதிகளில் -மேகத்திலுள்ள வெப்பம் குறைவதின் காரணமாக நீராவி அடிக்கடி நேரடியாக பனிக்கட்டிகளாக மாற்றப்படுகிறது.
2.இது துகள்போன்று பனியின் நுண்துகள்களைத் திரளாககொண்டு பனிபொழிவு நிகழ்கிறது.

**VIII**.விரிவான விடையளி:
1.நீர் சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி?
படம் - பக்கம் 124 (புத்தகம்)
நீரியல் சுழற்சி 6 நிலைகளை கொண்டது.
1.ஆவியீர்ப்பு □ புவியின் மேற்பரப்பு நீர் ஆவியாதல் மூலமும், தாவரங்கள் நீரை உட்கசிந்து வெளியிடுதல் மூலமும் நடைபெறுகிறது.
2.திரவமாய் சுருங்குதல்: -வளிமண்டலத்தில் வெப்பக் காற்று மேலே எழுந்து, குளிர்வடைந்து நீராவி மேகமாக மாறி நீராக மீண்டும் புவியை அடைகின்றன.
3.பொழிவு: மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.
4.நீர் ஊடுருவல்: - புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர் புகுவதற்கு நீர் ஊடுருவல் என்று பெயர்.
5.உட்கசிதல்: - என்பது மண்ணடுக்கு மற்றும் பாறை அடுக்குகளின் வாயிலாக உடுருவிய நீர் கீழ்நோக்கி நிலத்திற்கு அடியில் செல்வதாகும்.
6.நீர் வழிந்தோடல்: என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.

2.தாவரங்கள் நீர் உட்கசிந்து வெளியேறுதலுக்கும் ஆவியாதலுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக?

| நீர் உட்கசிந்து வெளியிடுதல் | ஆவியாதல் |
|---|---|
| என்பது தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்கும் செல்லும் செயலாக்கம் ஆகும்.<br><br>வெப்பநிலை, காற்று, ஈரப்பதம் | நீர் திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறுவதாகும்.<br>நீர் $100^{o}c$ வெப்பநிலையில் நீர் கொதித்து ஆவியாகிறது.<br>பேராழிகள், கடல்கள், ஏரிகள், ஆறுகள் 90% |

| | |
|---|---|
| மூலம் தாவரத்தின் இலைகள் நீரை உட்கசிந்து வெளியிடுகின்றன. | ஈரப்பதம் ஆவியாகி வளிமண்டலத்திற்கு செல்கிறது. தாவரங்கள் மூலம் 10% நீர் உட்கசிந்து வெளியேறுகிறது பேராழிகளில் ஆவியாதல் அதிகமாகவும், மழைப்பொழிவு குறைவாகவும் உள்ளது. நிலப்பரப்பில் ஆவியாதல் குறைவாகவும், மழைப் பொழிவு அதிகமாகவும். உள்ளது |

3.மழைபொழிவின் பல வடிவங்களைப் பற்றி விவரி?

மழைப்பொழிவின் வடிவங்கள் 1.மழை 2.கல் மழை 3.உறைபனி மழை 4.ஆலங்கட்டி மழை மற்றும் 5.பனி என வகைப்படும்.

1.மழை: படை மேகத்திலிருந்து மழைபொழிவு ஏற்படுகிறது. 0.5 மிமீ விட்டமுள்ள நீர்துளிகள் மழை எனவும் இவற்றிகு குறைவாக இருப்பது தூறல் என்றும் அழைக்கப்படும்.

2.கல்மழை: பனிக்கட்டிகளும், நீர்த்துளிகளும் சேர்ந்து புவியின் மீது கல்மழையாக பொழிகிறது.

5 மி.மீ விட்டமுள்ள பனித்துளிகள் கல்மழையாகும்.

3.உறைபனி மழை: மழைத்துளிகள் குளிர்ந்த காற்றில் உறையாமல் (குளிர் புவிப்பரப்பை தொடும்போது உறைந்துவிடுகின்றன. விட்டம் 0.5 மி.மீ விட அதிகம்.

4.ஆலங்கட்டி மழை: 5 மி.மீ விட்டத்தை விட பெரிய உருண்டையான பனிக்கட்டியாகும்.

இது கார்திரள் மேகங்களிலிருந்து இடியுடன் கூடிய மழையாக உருவாகிறது.

5.பனிப்பொழிவு: துருவப் பகுதிகள், உயரமான மலைப் பகுதிகளில் மேகத்திலுள்ள வெப்பம் குறைவதால் பனிக்கட்டியாகி பனிமழை பெய்கிறது.

4.நீர் வழிந்தோடல் மற்றும் அதன் வகைகளை விவரி?

நீர் வழிந்தோடல் என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு, முழுவதும் செல்வதாகும்.

மழை நீர் 65% மண்ணில் உறிஞ்சப்பட்டும் 35% நீர் மட்டும் கடலில் கலக்கிறது.

1.மேல்மட்ட மழை நீர் வழிந்தோடல்:

நிலச்சரிவின் காரணமாக நிலநீர் ஓட்டம் ஆறுகள் ஓடைகள், கடல்களில் இணைவது மேல் மட்ட நீர் வழிந்தோடல் எனப்படும்.

2.அடிப்பரப்பு நீர் வழிந்தோடல்:

நீரானது அடிமண் அடுக்கினுள் நுழைந்து நிலத்தடி நீரில் கலக்காமல் பக்கவாட்டு திசையில் நகர்ந்து ஓடைகள், ஆறுகள், கடலுடன் கலப்பது அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் (அ) இடை நீர் ஓட்டம் எனப்படும்.

3.அடிமட்ட நீர் ஓட்டம்:

செறிவடைந்த நிலத்தடி நீர் மண்டலத்திலிருந்து நீர் பாதை வழியாக நிலத்தடி நீராக ஓடுவது அடிமட்ட நீர் ஓட்டமாகும்.

இவை வறண்ட மழையற்ற காலங்களில் நிலத்தடி நீரால் நீருட்டப்படுகின்றன.

## அலகு - 4
## இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.மக்கள் ---- லிருந்து ---- க்கு நல்ல வேலைவாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்.

விடை : அ.கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு.

2.ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் ---- எனப்படுகிறது.

விடை : இ.குடியேறுபவர்.

3.வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது.

விடை : அ.கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு.

4.போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ---- ஐ சார்ந்தது.

விடை : இ.அரசியல்.

5.வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம்-----

விடை : அ.மிகையான உணவு தானிய உற்பத்தி.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.நகரமயமாதல் ---- எண்ணிக்கையிலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

விடை : 3

2.---- என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.

விடை : வேலையின்மை.

3.இந்தியாவின் ----- மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.

விடை : புதுடெல்லி.

4.ஒரு நபர் தன்னார்வத்துடனும் விருப்பத்துடனும் நல்ல வசிப்பிடம் தேடி இடம் பெயர்தல் ---- இடம்பெயர்வு எனப்படும்.

விடை : தன்னல்ல.

5.நவீன காலத்தில் நகர்ப்புற வளர்ச்சி ---- வளர்ச்சியால் அதிகரிக்கிறது.

விடை : தொலை தொடர்பு

**III**.பொருத்துக :

1.குடிபெயர்தல் -- வெளியேறுதல்.
2.குடியேற்றம் -- குடிபுகுபவர்.
3.இழுக்காரணி -- வேலைவாய்ப்புகள்.
4.உந்து காரணி -- வேலை வாய்ப்பின்மை
5.திருமணம் -- சமூகம் மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு

**IV**.சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1.குடிசைப்பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது.

விடை:சரி.

2.நவீன காலத்தில், ஒரே சமயத்தில் அதிக மக்களின் இடம்பெயர்வு நடைபெறுவதில்லை.

விடை:சரி

3.நகரமயமாக்கம் குறுகியக் கால வரலாறுடையது.

விடை: தவறு.

4.பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.

விடை:சரி

5.மேய்ச்சலுக்காக கால்நடைகளை இடமாற்றம் செய்வது, பருவகால இடம் பெயர்வு எனவும் அழைக்கப்படுகிறது.

விடை: சரி.

**V**.கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க:

கூற்று: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.

காரணம்: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல
விடை: அ.கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

**VI**.சுருக்கமாக விடையளி:

1.இடம் பெயர்தல் - வரையறு?

ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ தம் இருப்பிடத்தை விட்டு குறிப்பிடத்தக்க தொலைவிற்கு வசிக்கும் இடத்தை மாற்றுவதே இடம் பெயர்தல் எனப்படும்.

மக்கள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதைக் குறிக்கும்.

2.கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்களை யாவை?

மக்கள் ஊரகப் பகுதியிலிருந்து வளர்ந்து வரும் நகரம் மற்றும் மாநகரங்களுக்கு முக்கியமாக வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிக்காக இடம் பெயர்கிறார்கள்.

3.சுற்றுச் சூழல் அல்லது இயற்கையால் இடம் பெயர்வதற்கான காரணங்களைக் கூறுக?

எரிமலைவெடிப்பு, நிலஅதிர்வு, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை காரணிகள் மக்களைத் தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறி புதிய பகுதிகளில் குடியேற உந்துகின்றன.

4.இடம் பெயர்வுக்கான இழு காரணிகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக?

இடம் பெயர்வுக்கான இழு காரணிகள்:

1.இயற்கை வளங்கள் மற்றும் கனிமங்கள் மிகுந்த பகுதிகள் (நீர், எண்ணெய், யுரேனியம்) வேலைவாய்ப்பு.

2.குறைந்த செலவு, நகர்ப்புற சேவைகள்.
(எ.கா.சுகாதாரம், கல்வி, நீர், போக்குவரத்து, பொழுதுபோக்கு)

5.நகரமயமாக்கம் என்றால் என்ன?

நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள் தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பதை நகரமயமாதல் எனப்படும்.

தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மிகுந்து காணப்படும்.

6.உலகில் அதிக மக்கள்தொகைக் கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக?

அதிக மக்கள் தொகை கொண்ட உலகின் முதல் ஐந்து மாநகரங்கள்:

| நகரம் | மில்லியன் |
|---|---|
| 1.டோக்கியோ (ஜப்பான்) | 37 மில்லியன் |
| 2.புது தில்லி (இந்தியா) | 29 மில்லியன் |
| 3.சாங்காய் (சீனா) | 26 மில்லியன் |
| 4.மெக்சிகோ நகரம் (மெக்சிகோ) | 22 மில்லியன் |
| 5.சா பாலோ (பிரேசில்) | 22 மில்லியன் |

**VII**.இடம் பெயர்தலின் பல்வேறு வகைகள் யாவை? அவைகளை விளக்குக?

இடம் பெயர்தலின் வகைகள்:

I.நிர்வாக எல்லை அடிப்படையில்

1.உள்நாட்டு இடம் பெயர்வு:

ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழும் மக்களின் இடம்பெயர்வாகும் இவை நான்கு வகைப்படும். அவை

1.ஊரகத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி: வேலைவாய்ப்பு, கல்வி பொழுதுபோக்கிற்காக இடம் பெயர்கிறார்கள்.

2.நகரத்திலிருந்து நகர்புறத்திற்கு: அதிக வருவாய் பெறும் பொருட்டு இடம் பெயர்கிறார்கள்.

3.ஊரகத்திலிருந்து ஊரகத்திற்கு ☐ சாகுபடிக்கு ஏற்ற வளமான நிலம் போன்ற சமூக காரணத்தால் இடம் பெயர்கிறார்கள் .

4.நகர்புறத்திலிருந்து ஊரகப் பகுதிக்கு ☐ பணி ஓய்வு பெற்றபின் பூர்விக இடங்களை நோக்கி இடம் பெயர்கிறார்கள்.

II.சர்வதேச இடம் பெயர்வு:

விருப்பத்தின் அடிப்படையில்

1.தன்னார்வ இடம் பெயர்வு ☐ தனி நபர் விருபத்தின் பேரில் பொருளாதார முன்னேற்றம் வசதிவாய்ப்பிற்காக இடம்பெயர்வதாகும்.

2.கட்டாய இடம்பெயர்வு ☐ போர் போன்ற உந்து காரணிகளால் இடம் பெயர்தலாகும்.

கால அளவின் அடிப்படையில்

1.குறுகிய கால இடம்பெயர்வு ☐ சில நாட்கள் (அ) சில மாதங்கள் மட்டும்.

2.நீண்டகால இடம் பெயர்வு ☐ சில வருடங்கள் குடியேறிய இடத்தில் தங்கி இருப்பார்கள்.

3.பருவகால இடம் பெயர்வு ☐ கோடையில் மலைவாழ்பகுதியிலும் விவசாயிகள் பயிர் விதைக்கும் பருவங்களிலும் மந்தை இடமாற்றம் - மக்கள் கால்நடையுடன் இடம் பெயர்தலாகும்.

2.இடம் பெயர்தலுக்கான பல்வேறு காரணங்களை விரிவாக விளக்குக?

இடம் பெயர்தலின் 5 காரணிகள்:

1.சூழியல் அல்லது இயற்கை காரணங்கள்: எரிமலை வெடிப்பு, நில அதிர்வு, வெள்ளம், வறட்சி போன்றவை மனிதகுலம் இடம் பெயர இயற்கை காரணிகளாகும்.

நீர்வளம், பிரச்சினைகளற்ற நிலப்பகுதிகள், மாசற்ற நிலைகள் போன்றவை இடம் பெயர்பவர்களை ஈர்க்கும் சக்திகள் ஆகும்.

2.பொருளாதார காரணங்கள்: மக்களின் ஏழ்மை நிலை, வேலைவாய்ப்பின்மையால் பூர்வீக இடத்திலிருந்து வேலைவாய்ப்புகள் உள்ள இடங்களுக்கு செல்கின்றனர்.

புலம் பெயர்வோரை ஈர்க்கும் காரணிகள் - வளமான வேளாண் நிலம், வேலைவாய்ப்புகள், தொழில் நுட்ப வளர்ச்சி.

3.சமூக மற்றும் பண்பாட்டுக் காரணங்கள்:

1.பெண்களின் திருமணத்திற்குப் பின் இடம்பெயர்வு

2.புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம்பெயர்தல்.

4.மக்கள் தொகை சார்ந்த காரணங்கள்:

வயது, பாலினம் அதிக மற்றும் குறைந்த மக்கள் தொகை இடம் பெயர்வுக்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

பெண்கள் திருமணத்திற்கு பிறகு புலம் பெயர்கிறார்கள் அதிக மக்கள் தொகை ஒரு உந்து காரணியாகவும் குறைவான மக்கள் தொகை இழுகாரணியாகவும் கருதப்படுகிறது.

5.அரசியல் காரணங்கள்:

காலனி ஆதிக்கம், போர்கள், அரசாங்க கொள்கைகள் போன்றவை இடம்பெயர்விற்கான அரசியல் காரணங்கள் ஆகும்.

3.நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க?

நகரமயமாதலின் சவால்கள்:

1.குடியிருப்பு பற்றாக்குறை, தரமற்ற குடியிருப்புகள், குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உருவாகின்றன.

2.மக்கள் நெரிசலால் - சுகாதார சுற்று சூழல் பாதித்படைந்து பல்வேறு நோய்கள் கலவரங்கள் உருவாகின்றன.

3.தண்ணீர் விநியோகம் வடிகால் மற்றும் சுகாதாரம் - நீர் விநியோகம் முறையாக செய்யப்படுவதில்லை கழிவு நீர் வடிகால் அமைப்பு மோசமாக உள்ளது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குப்பைகளை அகற்றுதல் பெரும் சவாலாக உள்ளது.

4.போக்குவரத்து நெரிசலால் காற்று மாசு அடைகின்றது.

5.மாசடைதல் - நகரமயமாதல் நகர, தொழிற்சாலை கழிவுகள் நீரையும், காற்றையும், நிலத்தையும் மாசடைய செய்கின்றது, மேலும் புகை நச்சு வாயுக்களை வெளியிட்டு வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றன.

## அலகு -5. இடர்கள்

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம்-----------

விடை :அ.78.09 %

2.இந்தியப் பெருங்கடலில் சுனாமி ------------- ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

விடை: ஆ.2004.

3.சுனாமி என்ற சொல் ----------- மொழியிலிருந்து பெறப்பட்டது.

விடை: இ.ஜப்பானிய.

4.புவி மேற்பரப்பு நீருக்கு ------------ எடுத்துக்காட்டாகும்.

விடை: ஈ.ஏரிகள்.

5.பருவமழை பொய்ப்பின் காரணமாக --------------- ஏற்படுகிறது.

விடை: ஆ.வறட்சி.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.இடர்கள் ------------- க்கு வழிவகுக்கிறது

விடை: அழிவிற்கு.

2.நிலச்சரிவு ----------------- இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

விடை: இயற்கை.

3.இடர்கள் தோன்றுவதன் அடிப்படையில் இடர்களை ------------ வகைகளாகப் பிரிக்கலாம்.

விடை: - 8

4.தீவிரவாதம் ------------- இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

விடை: மனிதனால் உருவாக்கப்படும்.

5.நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் ------------ மாசுபடுத்திகளாகும்.

விடை:முதன்மை.

6.செர்னோபில் அணு விபத்து-------------- ஆண்டில் நடைபெற்றது.

விடை: 1986 ஏப்ரல் 26.

III.பொருத்துக:

1.முதல்நிலை மாசுபடுத்திகள் -- சல்பர் ஆக்சைடுகள்.

2.அபாயகர கழிவுகள் -- காலாவதியான மருந்துகள்.

3.நில அதிர்வு -- சுனாமி.

4.வானிலையியல் வறட்சி -- மழைப் பொழிவு குறைதல்

5.மனிதனால் தூண்டப்பட்ட இடர் -- தீவிரவாதம்.

**IV**.சுருக்கமான விடையளிக்கவும்:

1.இடர் - வரையறுக?

ஒரு பொருளோ, நபரோ, நிகழ்வோ அல்லது காரணியோ மக்கள் அல்லது கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார வளங்களுக்கு அச்சுறுத்தலாகவும், இழப்பு ஏற்படுத்தும் வகையிலும் அமைந்தால் அது இடர் எனப்படும்.

2.இடரின் முக்கிய வகைகள் யாவை?

1.இயற்கை, மனித செயல்கள், சமூக - இயற்கை காரணிகளால் ஏற்படும் இடர்கள் (நிகழ்வுகள்)

2.உருவாகும் அடிப்படையில் - வளிமண்டலம், நில அதிர்வு, வெள்ளப்பெருக்கு, எரிமலை, தொற்று நோய்கள், கட்டமைப்பு மற்றும் போர் விபத்து சார்ந்த இடர்கள்.

3.அபாயகரக் கழிவுகள் பற்றி குறிப்பு எழுதுக?

சுற்றுச்சூழல் மற்றும் மனிதர்களுக்கு பெருத்த சுகாதார தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய நச்சுக் கழிவுகள் அபாயகர கழிவுகள் எனப்படுகிறது.

உ.ம்: கதிரியக்க, மருத்துவ, இரசாயன கழிவுகள்.

4.நமது நாட்டில் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் முக்கியப் பகுதிகளைப் பட்டியலிடுக?

<u>வெள்ள பாதிப்பு இடங்கள்:</u>

1.வடக்கு வடகிழக்கு இந்தியாவில் 1.பஞ்சாப் 2.ஹரியனா 3.உத்திரப் பிரதேசம் 4.வடபீகார் 5.மேற்கு வங்கம் 6.கங்கைச் சமவெளி 7.பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குப் பகுதிகளும் 8.கடலோர ஆந்திரம் 9. ஒடிசா 10.குஜராத்தின் தென் பகுதி போன்றவை அடிக்கடி வெள்ள பாதிப்புக்கு உள்ளாகும் இடங்கள் ஆகும்.

5.வறட்சியின் வகைகளைக் குறிப்பிடுக?

<u>வறட்சியின் வகைகள்:</u>

1.வானிலையியல் வறட்சி

2.நீரியியல் வறட்சி

3.வேளாண் வறட்சி

6.மலை அடிவாரப் பகுதிகளில் நாம் ஏன் குடியிருப்புகளை அமைக்க கூடாது?

நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு, சூறாவளி புயல்கள், இவைகளால் இடர் மற்றும் பேரிடர் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் மலை அடிவாரப் பகுதிகளில் குடியிருப்புகளை அமைப்பது ஆபத்தை ஏற்படுத்தும்.

**V**.வேறுபடுத்துக:

1. இடர் மற்றும் பேரிடர் வேறுபடுத்துக?

| இடர் | பேரிடர் |
|---|---|
| மக்கள், பொருளாதார வளங்கள் அல்லது கட்டமைப்புகளை அச்சுறுத்தக் கூடிய நிகழ்வுகள் இடம் எனப்படும். | உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெரும் அழிவை விளைவுக்கும் அபாயகரமான நிகழ்வு பேரிடர் எனப்படும். |

2.இயற்கை மற்றும் செயற்கை இடர்கள் வேறுபடுத்துக?

| இயற்கை இடர்கள் | செயற்கை இடர்கள் |
|---|---|
| நில அதிர்வு, வெள்ளப் பெருக்கு, சூறாவளி, புயல்கள், வறட்சி, நிலச்சரிவு, சுனாமி மற்றும் எரிமலை வெடிப்பு. | தொழிற்சாலை, இரசாயன, எண்ணெய் கசிவுகள், அணுஉலை வெடிப்பு, தீவிரவாதம், குண்டுவெடிப்பு, போர் மற்றும் உள்நாட்டு கலவரங்கள், போக்குவரத்து விபத்துக்கள். |

3.வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி வேறுபடுத்துக?

| வெள்ளப் பெருக்கு | வறட்சி |
|---|---|
| கனமழை, பேரலைகளால் ஆறு, கால்வாய் கடற்கரைப் பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்து நிலப்பகுதி நீரில் மூழ்குதல் வெள்ளப்பெருக்கு எனப்படும். | வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் துறை மற்றும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நீர் பற்றாக்குறையே வறட்சி எனப்படும். |

4.நில அதிர்வு மற்றும் சுனாமி வேறுபடுத்துக?

| நில அதிர்வு | சுனாமி |
|---|---|
| புவியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடுமையான அதிர்வாகும். | கடலடி நில அதிர்வு, கடலடி நிலச் சரிவு, எரிமலை வெடிப்பு இவற்றால் கடலில் ஏற்படும் பேரலைக்கு சுனாமி என்று பெயர். |

Vi.விரிவான விடையளி:

1.காற்று மாசுபடுதலைப் பற்றி ஒரு கட்டுரை வரைக?

1.காற்று பல வாயுக்களின் கலவையாகும்.

2.காற்றில் 78.09மூ நைட்ரஜனும், ஆக்சிஜன் 20.95மூ கார்பன்டை ஆக்சை 0.03மூ உள்ளன.

3.நைட்ரஜன் - தாவரங்களுக்கு உரங்கள் தயாரிக்கவும், காற்றை மந்தமாக்குவதற்கும் பயன்படுகிறது.

4.ஆக்சிஜன் சுவாசிக்கவும், கார்பன் டை ஆக்சைடு ஒளிச்சேர்க்கைக்கும் பயன்படுகிறது.

முதன்மை மாசுபடுத்திகள் ஒரு மூலத்தில் இருந்து நேரடியாக வெளியேற்றப்படும் மாசுவாகும்.

இரண்டாம் நிலை மாயுகள் நேரடியாக வெளியேற்றப்படுவதில்லை மற்ற முதன்மை மாசுகள் வளிமண்டலத்தில் வனைபுரிவதால் உருவாகுபவை ஆகும்.

முதன்மை மாசுபடுத்திகள்:

1.சல்பர்டை ஆக்சைடு 2.நைட்ரஜன் ஆக்சைடு 3.கார்பன் டை ஆக்சைடு 4.துகள்ம பொருட்கள் 5.மற்ற முதன்மை மாசுபடுத்திகள்.

இரண்டாம் நிலை மாசுபடுத்திகள்:

1.தரைமட்ட ஓசோன் 2.பனிப்புகை

2.நில அதிர்வை வரையறுத்து அதன் விளைவுகளைப பட்டியலிடுக?

நில அதிர்வு ☐ என்பது புவியின் மேலோட்டில் தீடீரென ஏற்படும் கடும் அதிர்வாகும், இவ்வதிர்வு தோன்றும் மையத்திலிருந்து அனைத்து திசைகளிலும் தொடர்ச்சியான அதிர்வு அலைகளை ஏற்படுத்துகிறது.

ஒரு பகுதியினுடைய நிலவியல் அமைப்பு, கடந்த காலங்களில் ஏற்பட்ட நில அதிர்வு, அதிர்வலைகளின் தன்மைகள் ஆகியவற்றை அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நில அதிர்வு மண்டலங்கள் கண்டறியப் படுகின்றன.

இதன் அடிப்படையில் இந்திய தர நிர்ணய நிறுவனம் இந்தியாவை 5 நில அதிர்வு மையங்களாக வகைப்படுத்தியுள்ளது.

மண்டலம் 5 ☐ அபாயத் தன்மை மிக அதிகம்.

மண்டலம் 4 ☐ அதிக ஆபத்து.

மண்டலம் 3, மிதமான ஆபத்து

மண்டலம் 2, மிதமான அபாயம்.

3.நிலச்சரிவிற்கான காரணங்கள் குறித்து விரிவான விளக்கம் தருக?

நிலச்சரிவு என்பது புவியீர்ப்பு விசையினால் பாறைகள், மண் மற்றும் தாவரங்கள் மலைச்சரிவுகளில் கீழ்நோக்கி வேகமாகச் செல்லும் நகர்வைக் குறிப்பதாகும்.

பொதுவாக நிலச்சரிவுகள் திடீரென ஏற்படும் அரிதான நிகழ்வாகும். செங்குத்து சரிவு மற்றும் கனமழை நிலச்சரிவு ஏற்பட முக்கிய காரணங்களாகும்.

பலவீனமான தளர்ந்த நில அமைப்பு, காடழிப்பு, நில அதிர்வு, எரிமலை வெடிப்பு, சுரங்கம் தோன்றுதல், மலைப்பிரதேசங்களில் சாலைகள் மற்றும் இருப்பு பாதைகளின் கட்டுமானம் ஆகியவை நிலச்சரிவுகள் ஏற்படுவதற்கான மற்ற காரணங்களாகும்.

இந்தியாவில் 15மூ நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதிகளாகும்.

இமயமலைச் சரிவுகள், மேற்கு தொடர்ச்சி மலைச்சரிவுகள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் நிலச்சரிவுகள் அதிகம் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கொடைக்கானல் (திண்டுக்கல் மாவட்டம்) மற்றும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) பகுதிகள் நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

4.நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க?

1.நீர் மாசு மனிதன் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கின்றது.
2.விவசாயம் பாதிப்படைந்து விளைச்சல் குறையும்.
3.நீரின் உப்புத் தன்மை அதிகம் இருப்பதால் உற்பத்தி திறம் பாதிப்பு அடைகிறது.
4.நீரின் மாசுபாடு குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது.
5.நீர் மாசு  நீரில் உயிரினங்கள் அழிவு, ஏற்படும்.
6.மாசடைந்த நீரை பருகுவதால் 1. மலேரியா 2.டெங்கு 3.டைப்பாய்டு 4.யானைக்கால் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

## அலகு  6

## தொழிலகங்கள் :

**I**.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் --- பிரிவுகளின் கீழ் வருகின்றன.

விடை : அ.சிறிய அளவிலான தொழிலகம்.

2.உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள் --- வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

விடை : இ. 4

3.அமுல் பால் பண்ணைத் தொழிலகம் --- துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடை : இ.கூட்டுறவுத்துறை.

4.இரும்பு எ்.கு மற்றும் சிமெண்ட தொழிலகங்கள் ----- தொழிலகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடை : ஆ.கனிம வளம் சார்ந்த.

5.சார்புத் துறை ------- வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது

விடை : இ. 2

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.வங்கித் துறை என்பது ------ பொருளாதார நடவடிக்கையாகும்.

விடை: சார்புநிலை.

2.மூன்றாம் நிலை தொழில்கள் -------- மற்றும் ------- ஆக வகைப்படுத்தப்படுகிறது.

விடை : நான்காம்நிலை ஐந்தாம் நிலை.

3.அரசாங்க முடிவு எடுக்கும் செயல்முறைகள் ------ துறையின் கீழ்வரும் மூன்றாம் நிலை செயல்பாடாகும்.

விடை : ஐந்தாம்நிலை.

4.மூலப்பொருட்கள் அடிப்படையில் பருத்தி நெசவாலை ஒரு ----- தொழிலாகும்.

விடை : ஈரப்பத காலநிலை.

5.பெரிய அளவிலான தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேவையான மூலதனம் ---- ஆகும்.

விடை : ஒரு கோடி.

**III**.பொருத்துக :

1.நீதித்துறை -- ஐந்தாம் நிலை செயல்பாடுகள்.
2.தொலைக்காட்சி ஓளிபரப்பு -- நான்காம் நிலை செயல்பாடு.
3.புவியியல் காரணிகள் -- மூலப்பொருட்கள்
4.மூலதானம் -- புவியியல் அல்லாத காரணிகள்
5.பஜாஜ் ஆட்டோ -- தனியார் துறை.

**IV**.வேறுபடுத்துக:

1.இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடு மற்றும் மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடு வேறுபடுத்துக?

| இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடு | மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடுகள் |
|---|---|
| மூலப்பொருட்களை முறைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது ஆகும்.<br><br>உ-ம்: மாவுகளை ரொட்டியாக மற்றுதல், உலோகங்கள், நெகிழிகளை முறைப்படுத்தி வாகனங்களாக, மாற்றும் தொழிற்சாலைகள் ஆகும். | அத்தியவசிய சேவைகளை அளிக்கிறது. தொழிலங்கள் இயங்குவதற்கு உதவி புரிகின்றது. இவை சேவைகள் துறை என்று அழைக்கப்படுகிறது.<br><br>போக்குவரத்து, நிதி பயன்பாடுகள், கல்வி, வர்த்தகம், மருத்துவம், வீட்டுவசதி, பிற சேவைகள் மூன்றம் நிலை பொருளாதார செயல்பாடுகள் ஆகும். |

2.வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள் வேறுபடுத்துக?

| வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|
| வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.<br><br>உ.ம்: பருத்தி நெசவாலைகள், தாவர எண்ணெய். | கடல் மற்றும் பெருங்கடலிலிருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள் மூலப் பொருட்களாகப் பயன்படுகின்றன.<br><br>உ-ம்: கடல்சார் உணவு, மீன் எண்ணெய் |

3.பெரிய அளவிலான தொழிலகங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழிலகங்கள் வேறுபடுத்துக?

| பெரிய அளவிலான தொழிலகங்கள் | சிறிய அளவிலான தொழிலகங்கள் |
|---|---|
| ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் மூலதனம் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள். | ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான மூலதனத்தை கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள். |

| | |
|---|---|
| உ-ம்: இரும்பு எ.்.கு ஆலை, நெசவாலை, சிமெண்ட், எண்ணெய் சுத்தகரிப்பு ஆலைகள். | எ.கா:பட்டு, நெசவு, வீட்டு உபயோக பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள். |

**V.**சுருக்கமான விடையளி:

1.தொழிற்சாலை ☐ வரையறு?

மூலப்பொருட்களை இயந்திரங்களின் மூலம் பயன்படுத்த கூடிய பொருட்களாக மாற்றப்படும் இடமே தொழிற்சாலை எனப்படும்.

2.பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன?

உற்பத்தி, விநியோகம் நுகர்வு அல்லது பணிகளில் ஈடுபடும் எந்த ஒரு செயலுமே பொருளாதார நடவடிக்கையாகும்.

3.முக்கிய பொருளாதார நடவடிக்கைளின் பெயர்களை எழுதுக?

முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்:

1.முதன்மை துறை ☐ வேளாண்மை, சுரங்கம், மீன்பிடித்தல் கால் நடை, உணவு சேகரித்தல்.

2.இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடுகள்.

மூலப் பொருட்களை பயன்பாட்டு பொருளாக மாற்றுதல்

உ.ம்: ரொட்டி, சர்க்கரை, பருத்தி ஆலைகள்.

3.சார்பு துறை (அ) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள்:

அத்தியாவசிய சேவைகளை அளிக்கிறது,

உ-ம்: கல்வி, போக்குவரத்து, மருத்துவம், பிற சேவைகள்.

4.ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குக?

தொழிற்சாலைகள், வணிகம், கல்வி மற்றும் அரசாங்கங்களின் உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகள் செயல்கள் ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கை எனப்படும்.

உ-ம்: பெற்றோர், அமைச்சரவை குழுவினர்.

5.தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக?

தொழிலக அமைவிடக் காரணிகள்:

மூலப்பொருட்கள், நிலம், நீர், தொழிலாளர்கள், மூலதனம் ஆற்றல் வளம், போக்குவரத்து மற்றும் சந்தை இவைகள் தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும்.

6.பின்வருவனவற்றிற்குச் சிறு குறிப்புத் தருக?

அ.பெரிய அளவிலான தொழிலகங்கள்:

ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மூலதனம் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் பெரிய அளவிலான தொழிலகங்கள் எனப்படும்.

உ-ம்: இரும்பு எ.்.கு ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை, நெசவாலை தொழிலகங்கள்.

ஆ.சிறிய அளவிலான தொழிலகங்கள்:

ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான மூலதனத்தை கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகளை சிறிய அளவிலான தொழிலகங்கள் எனப்படும்.

உ-ம்: பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்.

**VI.**விரிவான விடையளி:

1.மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக?

மூலப்பொருள் அடிப்படையில் தொழிலகங்கள்:

I.வேளாண் சார்ந்த தொழிலகங்கள் - வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள்.
எ.கா: பருத்தி நெசவாலைகள், தாவர எண்ணெய், பால் உற்பத்தி பொருட்கள், உணவு பதப்படுத்துதல்.

II.கனிமவளம் சார்ந்த தொழிற்சாலைகள்:
இரும்பு தாது, சிமெண்ட தொழிற்சாலை, இயந்திர கருவி உற்பத்தி.

III.கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்:
கடல் பெருங்கடலிருந்து கிடைக்கும் பொருட்கள் மூலப் பொருட்களாகப் பயன்படுகின்றன.
எ.கா: பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தி அலகுகள் ஆகும்.

IV.வனவளம் சார்ந்த தொழிலகங்கள் - வனப் பொருட்கள் மூலப் பொருட்களாகப் பயன்படுகின்றன.
எ.கா: மரக்கூழ், காகித உற்பத்தி, மரத்தளவாடங்கள், சில மருந்து உற்பத்தி தொழிலகங்களாகும்.

2.தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக?

தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகள்:

1.மூலப்பொருட்கள் - சர்க்கரை ஆலை, இரும்பு எஃகு ஆலை இவைகள் மூலப்பொருட்கள் கரும்பு, இரும்பு தாது கிடைக்குமிடத்தில் அமைந்துள்ளது.
2.ஆற்றல் வளம் - தொழிற்சாலை மின் தேவையை பூர்த்தி செய்ய நிலக்கரி, தாது எண்ணெய், நீர் போன்ற மரபு சார் மூலங்களிலிருந்து எரிசக்தி உற்பத்திசெய்யப்படுகிறது.
3.மனித சக்தி ☐ மலிவான திறமையான தொழிலாளர் தேவை.
எ.கா: தேயிலை தொழிற்சாலை.
4.போக்குவரத்து - மூலப்பொருட்களை தொழிற்சாலைக்கும், முடிவுற்ற பொருட்களை சந்தைக்கும் கொண்டு செல்ல நீர்வழி, சாலை, இருப்பு பாதை தேவைப்படுகிறது.
5.சேமிப்பு மற்றும் கிடங்கு ☐ முடிவுற்ற பொருட்கள் சந்தைக்கு செல்லும்வரை பொருத்தமான கிடங்குகளில் சேமித்து வைக்க வேண்டும்.
6.நிலத்தோற்றம் - நிலம் சமமாக, போக்குவரத்து வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.
7.காலநிலை ☐ ஒவ்வொரு தொழிலகங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலநிலை தேவைப்படுகிறது.
எ.கா: பருத்தி நெசவாலைக்கு குளிர் - ஈரப்பத காலநிலை சிறந்தது.
8.நீர்வளம் - ஆறுகள், ஏரிகள், கால்வாய் அருகில் பல தொழிலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.
எ.கா: இரும்பு, எஃகு, ஜவுளி, இரசாயன தொழிற்சாலை.

3.தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப் படம் மூலம் விளக்குக?

தொழிலகங்களின் வகைப்பாடு:

I.மூலப்பொருள் சார்ந்த தொழிலகங்கள்:
1.வேளாண் சார்ந்த தொழிலகங்கள்.
2.கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள்.
3.கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்.
4.வன வளம் சார்ந்த தொழிலகங்கள்.

II.அளவின் அடிப்டையில் தொழிலகங்கள்:
1.பெரிய அளவிலான தொழிலகங்கள்.

2.சிறிய அளவிலான தொழிலகங்கள்.

III.உடைமையாளர் அடிப்படையில் தொழிலகங்கள்:
1.பொதுதுறை தொழிலகங்கள்.
2.தனியார் துறை தொழிலகங்கள்.
3.கூட்டுத்துறை தொழிலகங்கள்.
4.கூட்டுறவு தொழிலகங்கள்.

## அலகு -- 7

## கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) :

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :
1.ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை -----
விடை : இ.நன்னம்பிக்கை முனை.
2.எகிப்திற்கும் சினாய் தீபகற்பத்திற்கும் இடையில் ஒரு நிலச்சந்தி வழியாக உருவாக்கப்பட்ட செயற்கை கால்வாய் -----
விடை : இ.சூயஸ் கால்வாய்.
3.மத்திய தரைக்கடல் காலநிலையோடு தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்வு செய்க.
விடை :ஆ.II மற்றும் IV. சரியானவை.
4.ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளை பிரிக்கும் மலைத்தொடர் -----------
விடை : அ.பெரிய பிரிப்பு மலைத்தொடர்.
5.கல்கூர்லி சுரங்கம் ------ கனிமத்திற்குப் புகழ்பெற்றது.
விடை : ஈ.தங்கம்.
II.கோடிட்ட இடங்களை நிரப்புக:
1.அட்லஸ் மலை ----- கண்டத்தில் அமைந்துள்ளது.
விடை : வடமேற்கு ஆப்பிரிக்கா.
2.ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் ----- ஆகும்.
விடை : கிளிமாஞ்சாரோ.
3.ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் மரம் ------
விடை : யூகலிப்டஸ்.
4.ஆஸ்திரேலியாவில் உள்ள மிதவெப்ப மண்டல புல்வெளிகள் ----- என அழைக்கப்படுகின்றன.
விடை: : டவுன்ஸ்.
5.அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் -------
விடை : தட்சின் கங்கோத்ரி.

III.பொருத்துக:
1.பின்னாக்கல் -- சுண்ணாம்பு பாறை தூண்கள்.
2.கிரில் -- சிறிய செம்மீன்.
3.நெருப்புக்கோழி -- பறக்க இயலாத பறவை.
4.ஐந்து ஏரி -- உப்பு ஏரி.
5.புவியின் அணிகலன் -- புவியிடைக் கோட்டுக்காடுகள்.

IV.சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1.கூற்று : அரோரா என்பது வானத்தில் தோன்றும் வண்ண ஒளிகள் ஆகும்.
காரணம் : அவை வளிமண்டலத்தின் மேலடுக்குக் காந்த புயலால் ஏற்படுகின்றன.
விடை : அ.கூற்று மற்றும் காரணம் உண்மை, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.
2.கூற்று : ஆப்பிரிக்காவின் நிலவியல் தோற்றங்களில் ஒரு முக்கிய அம்சம் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஆகும்.
காரணம் : புவியின் உள்விசை காரணமாக புவியின் மேற்பரப்பில் உண்டான பிளவு.
அ.கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுகான காரணம் சரியான விளக்கம்.

**V.**சுருக்கமான விடையளி:

1.ஆப்பிரிக்கா தாய் கண்டம் என அழைக்கப்படுவது ஏன்?

1.ஆப்பிரிக்காவில் மனிதனின் மூதாதையர்கள் 5 மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக ஆதாரங்கள் உள்ளன.
2. புவியில் மனித இனங்கள் வாழ்ந்த, பழமையான கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது தாய் கண்டம் என புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

2.ஆப்பிரிக்காவின் முக்கியமான ஆறுகள் யாவை?

ஆப்பிரிக்காவின் முக்கிய ஆறுகள்:
1.நைல் நதி 2.காங்கோ ஆறு 3.நைஜர் ஆறு 4.சாம்பசி ஆறு.

3.ஆஸ்திரேலியாவின் நிலத்தோற்ற பிரிவுகள் யாவை?

ஆஸ்திரேலியாவின் நிலத்தோற்ற பிரிவுகள்
1.மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி.
2.மத்திய தாழ் நிலங்கள்.
3.கிழக்கு உயர் நிலங்கள்.

4.அண்டார்டிகா கண்டத்தின் தன்மை குறித்து எழுதவும்?

அண்டார்டிகா துருவப் பகுதியில் நிரந்தர பனியுடன் அமைந்த மிக குளிர்ந்த கண்டம் ஆகும்.
அண்டர்டிகாவின் நிலத்தோற்றம் சில மலைத் தொடர்கள், சிகரங்கள், பள்ளத்தாக்குகள், பனியாறுகள், பீடபூமிகள் மற்றும் எரிமலைகளை உள்ளடக்கியதாகும்.

5.அஸ்திரேலியாவின் பொருளாதார நடவடிக்கைகள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக?

வேளாண்மை, வளம் சார்ந்த தொழில்கள், மீன்பிடித்தல், உற்பத்தி தொழிலகங்கள், வணிகம், ஆடு வளர்ப்பு மற்றும் சேவைப்பிரிவு ஆஸ்திரேலியாவின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும்.

**VI.**வேறுபடுத்துக:

1.சாஹேல் மற்றும் சகாரா வேறுபடுத்துக?

| சாஹேல் | சஹாரா |
|---|---|
| 1.ஆப்பிரிக்காவில் தரிசு, மணற்பாங்கான பாறைகளுடன், கிழக்கு மேற்கு, 4,000 கி.மீ நீண்டு 3 மில்லியன், ச.கி.மீ பரப்பில் காணப்படும்.<br>அரை வறண்ட வெப்ப மண்டல சவானா பகுதியாகும். | 1.வட ஆப்பரிக்காவில் 11 நாடுகளில் 9.2 மில்லியன் ச.கி.மீ பரப்பில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல பாலைவனம் ஆகும்<br><br>2. நைல் மற்றும் நைஜர் ஆறுகள் சஹாரா பாலைவனத்தின் வழியாக |

| | |
|---|---|
| 2.இது சஹாரா பாலைவனத்திற்கும், சவானா புல்வெளிக்கும் இடையில் அமைந்துள்ளது. | பாய்கிறன. |

2.மேற்கு அண்டார்டிகா மற்றும் கிழக்கு அண்டார்டிகா வேறுபடுத்துக?

| மேற்கு அண்டார்டிகா | கிழக்கு அண்டார்டிகா |
|---|---|
| 1.பகுதி பசிப்பிக் பெருங்கடலை நோக்கி அமைந்துள்ளது.<br>இது தென் அமெரிக்காவை நோக்கியுள்ள அண்டார்டிக் தீபகற்பம் ஆண்டிஸ் மலைத் தொடரின் நீட்சி ஆகும். | பகுதி அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களை நோக்கி அமைந்துள்ளது.<br><br>இப்பகுதியில் ரோஸ் தீவில் அமைந்துள்ள மவுண்ட் எரிபஸ் ஒரு செயல்படும் எரிமலை ஆகும். |

3.பெரிய பவளத் திட்டு மற்றும் ஆர்டீசியன் வடிநிலம் வேறுபடுத்துக?

| பெரிய பவளத் திட்டு | ஆர்டீசியன் வடிநிலம் |
|---|---|
| ஆஸ்திரேலியாவில் பசிப்பிக் பெருங்கடல் குயின்ஸ்லாந்தின் கிழக்கு கடற்கரையை ஒட்டிய வடகிழக்கு பகுதியில் உள்ளது.<br>இது சிறிய பவள நுண்ணுயிரிகளால் உருவானது<br>2300 கி.மீ நீளம் கொண்ட உலகின் இயற்கை அதிசயங்களில் ஒன்றாகும். | புவியினுள் இருந்து வேகமாக வெளியேறும் நீருற்றுகள் ஆர்டீசியன் நீருற்றுகள் எனப்படும்.<br><br>ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து, தெற்கு வடக்கு பகுதியில் வறண்ட அரை வறண்ட பகுதியில் 1.7 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. |

**VII.**காரணம் கூறு:

1.எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது ஏன்?

1.நைல் நதி எகிப்தின் வாழ்வாதாரமாக விளங்குவதால் இந்நதி எகிப்தின் நன்கொடை என அழைக்கப்படுகிறது.

2. நைல் நதி எகிப்தில் இல்லையெனில் இந்நாடு பாலைவனமாக இருந்திருக்கும்.

2.வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் அமைந்துள்ளன □ காரணம் கூறுக?

1.வெப்ப பாலைவனங்களில் வியாபார காற்று வீசும் மண்டலத்தில் அமைந்துள்ளது.

2.இவ்வியாபாரக் காற்றுகள் வடகோளத்தில் வடக்கிலிருந்தும், தென் கோளத்தில் தென் கிழக்கிலிருந்தும் வீசுகின்றன.

3.கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப் பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும்பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாக வீசுவதால் கண்டங்களின் மேற்கு பகுதிகள் பாலைவனங்களாக உள்ளன.

3.அண்டார்டிகா ஆராய்ச்சியாளர்களின் கண்டம் என அழைக்கப்படுகிறது □ காரணம் கூறுக?

உலகின் எந்த ஒரு நாட்டின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் அண்டார்டிகாவில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், தரவுகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.
எனவே இக்கண்டம் அறிவியல் கண்டம் என அழைக்கப்படுகிறது.

**VIII**.விரிவான விடையளி:

1.ஆஸ்திரேலியாவின் கனிம வளங்கள் குறித்து விரிவாக எழுதவும்?

ஆஸ்திரேலியாவின் கனிம வளங்கள்:

கனிமங்கள் ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய ஏற்றுமதி பொருட்களாகும்.

1.பாக்சைட், லிமோனைட், ரூட்டில், சிர்தான் - முதலிடம்.

2.தங்கம், ஈயம், லித்தியம், மாங்கனிசு, தாது, துத்தநாக உற்பத்தியில் - இரண்டாமிடம்.

3.இரும்பு தாது, யுரேனிய உற்பத்தியில் - மூன்றாமிடம்.

4.நிலக்கரி உற்பத்தியில் - 4-ம் இடத்திலும் உள்ளது.

| | கனிமங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 1. | நிலக்கரி வயல்கள் | நியூகோஸ்டல் முதல் சிட்னி வரை |
| 2. | இரும்பு தாது | மேற்கு, தெற்கு ஆஸ்திரேலியா |
| 3. | பாக்சைட் தாது | கார்ப்பென்டீரியா வளைகுடா, பெர்த், டாஸ்மோனியா. |
| 4. | பெட்ரோல், இயற்கை எரிவாயு | பாஸ் நீர்சந்தி, மேற்கு பிரிஸ்பேன். |
| 5. | யுரேனியம் தாது | ராம் காடு குயின்லாந்து. |
| 6. | தங்கம் | மேற்கு பாலைவனப் பகுதியில் கா்ல கூா்லி,கூல் காா்லி பகுதியில் கிடைக்கிறது. |
| 7. | காரியம், துத்தநாகம், வெள்ளி, டங்ஸ்டன், நிக்கல் மற்றும் செம்பு போன்றவை ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலிருந்து பெறப்படுகின்றன. | |

2.அண்டார்டிகா கண்டத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றி விவரி?

1. அண்டார்டிகாவில் வெப்பநிலை உறை நிலைக்கு கீழே இருப்பதால் பெரிய தாவரங்கள் காணப்படவில்லை.

2.சிறிய வகை தாவரங்களான பாசிகள், பூஞ்சைகள், பிளாங்டன், மரப்பாசிகள் நன்னீா உவா்நீா ஏரிகளில் காணப்படுகின்றன.

3.சிறியவகை செம்மீன்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கு உணவாக பயன்படுகின்றன.

4.நீலத் திமிங்கலம், கடற்பசு போன்ற கடல் விலங்கினங்கள், கடல் பறவைகளான □ பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்குவா மற்றும் ஸ்டவுட் ஆகியன இங்கு காணப்படுகின்றன.

5.இங்குள்ள அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகளும் குளிர்கால நிலையை எதிர்கொள்ள தங்கள் உடலில் பு;ப்பர் எனப்படும் அடர்த்தியான கொழுப்பு அடுக்கினை கொண்டுள்ளன.

6.பென்குவின் பறக்காது, நீந்துவதற்கு பிலிப்பர் தோலுடைய பாதத்தை பெற்றுள்ளன.

7.சிறிய முதுகெலும்புப்பற்ற உயிரினங்கள் இக்கண்டத்தின் நிலவாழ் விலங்கினங்களாகும்.

3.ஆப்பிரிக்காவின் இயற்கைப் பிரிவுகளை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்கவும்?

ஆப்பிரிக்காவின் 8 வகை இயற்கைப் பிரிவுகள்:

1.சகாரா பாலைவனம்

2.சாஹேல் -அரைவறண்ட வெப்ப மண்டல சவானா பகுதியாகும்
3.சவானா □ பரவலான மரங்களை கொண்ட வெப்பமண்டல வறண்ட புல்வெளிகள்.
4.பெரிய பிளவு பள்ளத்தாக்கு, பெரிய ஏரிகள்.
5.கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்கள்.
6.சுவாலி கடற்கரை □சோமாலியா □ மொசாம்பிக் லரை 1610 கி.மீ நீளத்தில் இந்திய பெருங்கடலை ஒட்டி அமைந்துள்ளது.
7.காங்கோ, ஜையர் வடிநிலம் (ஆறுகள்)
8.தென் ஆப்பிரிக்கா பீடபூமிகள்.

சகாரா: வட ஆப்பிரிக்காவில் 9.2 மில்லியன் ச.கி.மீ பரப்பில் அமைந்த உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல பாலைவனம் ஆகும்.
சகாரா 11 நாடுகளில் பரவியுள்ளது, நைல், நைஜர் ஆறுகள் சஹாரா பாலைவனத்தின் வழியாக பாய்கின்றன.
சகாராவின் மேற்கில் -அட்லாண்டிக் பெருங்கடல் கிழக்கில் -செங்கடல், வடக்கில் - மத்திய தரைக்கடல் தெற்கில் - சாஹேல் எல்லைகளாகும்.
சகாரா பாலைவனம் - மலைகள், பீடபூமிகள், எர்க்ஸ், பாலைவனச் சோலை, மணல் மற்றும் சரளை மூடிய சமவெளிகள், உப்பு ஏரி, ஆற்று கொப்பறைக்கள் மற்றும் ஊது பள்ளங்கள் போன்ற பல்வேறு நிலத்தோற்றங்களை உள்ளடக்கியுள்ளது.

## அலகு -- 8
## புவிப்படங்களைக் கற்றறிதல்:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.புவிப்பட தயாரிப்பு முறை குறித்து கையாளும் பாடப்பிரிவு ஆகும்.
விடை : ஆ.புவிப்படவியல்.
2.ஒரு பகுதியின் இயற்கையம்சங்களைக் காட்டும் புவிப் படம்.------
விடை : ஆ.நிலத்தோற்ற புவிப்படம்.
3.அழம் குறைந்த நீர்ப் பகுதிகள் ---- வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.
விடை : இ.வெளிர் நீலம்.
4.பிளான்கள் என்று அழைக்கப்படும் புவிப்படங்கள் ----- ஆகும்.
விடை: அ.நிலக்கானி புவிப்படங்கள்.
5.மக்கட்தொகை பரவலை ---- மூலம் காண்பிக்கலாம்.
விடை : வண்ணங்கள்.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக:
1.புவிக் கோள மாதிரி என்பது ---- ன் உண்மையான உருவ மாதிரியாக்கமாகும்.
விடை : புவியின்.
2.புவியின் கோள வடிவத்தை ஒரு சமதளப்பரப்பில் வரையப்படும் முறை ----- எனப்படும்.
விடை : வரைபடக் கோட்டுச் சட்டம்.
3.சம அளவு உயரமுள்ள இடங்களை இணைக்கும் கோடு -----
விடை : சம அளவு கோடு.
4.காணிப்படங்கள் பொதுவாக ------ ஆல் பராமரிக்கப்படுகின்றன.
விடை : அரசாங்கம்.
5.----- புவிப்படங்கள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.
விடை : கருத்து.

III.பொருத்துக:
1.புவிப்பட விளக்கம் -- புவிப்படத்தின் திறவுகோல்.
2.வடகிழக்கு - $45^{o}$

3சம உயரக்கோடு -- பழுப்பு நிறம்.
4.காணிப்படங்கள் -- வரி விதிப்பு.
5.நிழற்பட்டைப் படம். ☐ கருத்துப்படங்கள்.

**IV**.சரியான கூற்றைத் தேர்வு செய்யவும் :
1.கூற்று : சிறிய அளவைப் புவிப்படங்களில் பிரதான தோற்றங்களை மட்டுமே காண்பிக்கப்படுகின்றன.
காரணம் : குறைந்த அளவு இடமே உள்ளதால், பெரிய பரப்பிலான கண்டங்கள் மற்றும் நாடுகள் போன்றவற்றை மட்டுமே காண்பிக்க இயலும்.
விடை: இ.கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
2.கூற்று : மரபு குறியீடுகளும் , சின்னங்களும் வரைபடத்தின் திறவுகோள் ஆகும்.
காரணம் : இவை குறைந்த அளவிலான படத்தில் அதிக விவரங்களைத் தருகின்றன.
விடை : அ.கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

**V**.சுருக்கமான விடையளி:
1.புவிப்பட அளவை வரையறுக?
புவிப்பட அளவை என்பது புவிப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் புவிப்படப் பரப்பில் உள்ள தொலைவிற்கும் இடையிலான விகிதத்தை குறிப்பதாகும்.
ஒரு கோட்டுப் பட்டை மற்றும் எண் அளவையில் குறிக்கப்பட்டு அவை புவிப்பட தலைப்பின் கீழோ (அ) புவி படத்தின் கீழ் பகுதியிலோ கொடுக்கப்பட்டிருக்கும்.

2.இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?
இயற்கையமைப்பு புவிப்படங்கள்:
பாலைவனங்கள், ஆறுகள், மலைகள், சமவெளிகள் மற்றும் பீடபூமிகள் ஆகிய நிலத்தோற்றங்களை காண்பிப்பதற்காக வரையப்படும் படங்கள் இயற்கைமைப்பு புவிப்படங்கள் அல்லது நிலத்தோற்றப் புவிப் படங்கள் எனப்படும்.
3.வரைபடக் கோட்டுச்சட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக?
கோள வடிவமான புவியை ஒரு சமதளப் பரப்பில் வரைவதற்குப் பின்பற்றப்படும் ஒரு நுணுக்கு முறையே வரைபட கோட்டுச் சட்டமாகும்.
அட்ச தீர்க்க கோடுகள் புவியின் அமைவிடத் தகவல்களை அளிக்கின்றன.

4.இடைநிலைத் திசைகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
இடைநிலைத் திசைகள்: வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, மற்றும் தென்மேற்கு திசைகள். இடைநிலைத் திசைகள் ஆகும்.

5.காணிப் புவிப்படங்களின் பயன்கள் யாவை?
ஓர் இடத்தின் எல்லைகள், நில உடைமைகள் பற்றி விவரங்களை ஒளிப்பது காணிப் புவிப்படங்கள் ஆகும்.
காணிப் புவிப்படங்கள் உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, வரி விதிப்பு, பெரும் பண்ணை, பராமரிப்பு, சட்ட ஆவணங்களில் சொத்து விவரங்களை குறிப்பிட பயன்படுகிறது, காணிப் புவிப்படங்கள் அரசாங்கத்தால் பாரமரிக்கப்பட்டு வருகின்றன.

**VI**.வேறுபடுத்துக:
1.நிலத்தோற்றப் படங்கள் மற்றும் கருத்துப்படங்கள் வேறுபடுத்துக?

| நிலத்தோற்றப் படங்கள் | கருத்துப்படங்கள் |
|---|---|
| ஒரு பகுதியின் பல்வேறு இயற்கை | கருத்துப்படங்கள் என்பவை |

| | |
|---|---|
| அம்சங்களைக் காண்பிப்பதற்கு வரையப்படும் படங்கள் நிலத்தோற்றப் படங்கள் எனப்படும். (பாலைவனங்கள் ஆறுகள், மலைகள், சமவெளிகள், பீடபூமிகள். | வெப்பநிலை வேறுபாடுகள், மழைப்பரவல், மக்களடர்த்தி போன்ற ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்காகத் தயாரிக்கப்படுபவை ஆகும். இவை பண்புசார், அளவுசார் கருத்துப்படங்கள் என இருவகைப்படும். |

2.பெரிய அளவை மற்றும் சிறிய அளவை புவிப்படங்கள் வேறுபடுத்துக?

| பெரிய அளவை புவிப்படங்கள் | சிறிய அளவை புவிப்படங்கள் |
|---|---|
| சிறிய பகுதிகளான வட்டம் (அ) மாவட்டம் போன்றவற்றை காண்பிக்க பெரிய அளவை புவிப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>உ.ம்: இந்திய இயற்கை அமைப்பு வரைபடம். | கண்டங்கள் (அ) நாடுகள் போன்ற பெரிய நிலப்பகுதிகளைக் காண்பிக்கச் சிறிய அளவை புவிப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>உ-ம்: உலக இயற்கை அமைப்பு |

3.புவிக் கோள மாதிரி மற்றும் புவிப்படம் வேறுபடுத்துக?

| புவிக்கோள மாதிரியானது | புவிப்படங்கள் |
|---|---|
| புவியை முப்பரிமாணத்தில் சித்தரிக்கின்றது. இது புவியின் வடிவிலான ஒரு சிறிய நிலத்தோற்றமாகும் (புவி மாதிரி) | புவியின் இருபரிமான சித்தரிப்பாகும் |

**VII.**விரிவான விடையளி:

1.பல்வேறு புவிப்பட அளவைகளை விரிவாக விளக்குக?

புவிப்பட அளவைகள்:

1.வாக்கிய முறை (அ) சொல்லளவை □ அளவுதிட்டம் சொற்களால் விவரிக்கப்படுகிறது. 1செ.மீ என்பது நிலப் பகுதியில் 1கி.மீ துரத்தை குறிக்கும் ஒரு அங்குலம் என்பது ஒரு மைல் என குறிக்கப்படும்.

2.பிரதிபின்ன முறை (அ) எண்சார் பின்னமுறை (அ) விகிதாச்சார முறை:

இம்முறையில் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவும் புவிப்பரப்பில் உள்ள தொலைவும் ஒரே அளவில் குறிப்பிடப் படுகிறது.

வரைபடத்தில் 1 செமீ என்பது புவியியல் 50,000 செ.மீ எனப்படும்.

3.வரைகலை அளவை (அ) நேரியல் அளவை:

வரைபடத்தின் அடியில் சிறிய வரைக்கோல் நிலப்பகுதியின் குறிபிட்ட தூரத்தை குறிக்கும். இதன் அளவு மாறாது என்பதால் புவிப்பட நகல்கள் எடுத்துக்கொள்ள ஏதுவாக உள்ளது.

2.காணிப் புவிப்படங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விவரி?

காணிப் புவிப்படங்கள்:

ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க காணிப் புவிப்படங்கள் பயன்படுகின்றன.
இப்புவிப்படங்கள் பொது பதிவிற்கான ஆவணங்களாக அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
இவை உள்ளாட்சி நகராட்சி அமைப்பு, வரிவிதிப்பு பராமதிப்பு, சட்ட ஆவண சொத்து விவரங்களை குறிப்பிட பயன்படுகின்றன.

காணிப்புவிப்படத்தின் முக்கியத்துவம்:
காணிப்புவிப்படங்கள், ஒரு நிலத்தின் நில உடமை, எல்லைகள், மாதிரிப் படங்கள், கட்டத்திட்டப் படங்கள், விளக்கப்படங்கள் ஆகியவை மூலம் ஆவணங்களாக பதிவுசெய்கின்றன.
தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தின் மதிப்பினை அறிந்துகொள்ளவும், வரிவிதிப்பிற்கும் இவ்வகை புவிப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

3.மரபுக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக?
புவிப்படத்தில் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிடுவதற்குப் புவிப்படக் குறியீடு மற்றும் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
இச்சின்னங்கள் புவிப்பட திறவு விசை பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.
ஒரு சிறிய பகுதியில் அதிக தகவல்களை இக்குறியீடுகள் மற்றும் சின்னங்கள் அளிக்கின்றன.
இதன் மூலம் புவிப்படங்கள் உருவாக்கி கருத்துகளை புரிந்து கொள்ளலாம்.
சில குறியீடுகள் மற்றும் சின்னங்களை பயன்படுத்த சர்வதேச ஒப்பந்தம் அல்லது நடைமுறை பின்பற்றப் படுகிறது. இவை மரபு குறயீடுகள் மற்றும் சின்னங்கள் எனப்படுகின்றன.
சூழல் சின்னங்கள் அல்லது குறியீகள் என்பதை குறிப்பிட்ட வல்லுநர்கள் முடிவு செய்யப்படும் வகையாகும்
--- நடைபாதை, I- தகவல் மையம், **A4(T)** □ முதன்மை சாலை, (P) □வாகன நிறுத்துமிடம்.

குடிமையியல்:

அலகு □ 1.

மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1.ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
விடை : அ.குடியரசுத் தலைவர்.

2.மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்.
விடை : ஆ.முதலமைச்சர்.

3.மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்.
விடை : ஈ. ஆளுநர்.

4.உயர் நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?
விடை : ஆ.முதலமைச்சர்.

5.உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒய்வு பெறும் வயது.
விடை :அ. 62.

**II.**கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை----- ஆகும்.
விடை : 28.

2.ஆளுநரின் பதவிக்காலம் ----- ஆண்டுகள் ஆகும்.
விடை : ஐந்து.

3.மாவட்ட நீதிபதிகள் ----- ஆல் நியமிக்கப்படுகின்றனர்.
விடை : ஆளுநர்.

4.ஆளுநர் ஒரு மாநிலத்தின் ------ ஆவார்.
விடை : நிர்வாகத்தலைவர்.

5.ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக ------ வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.
விடை : 25.

**III.**பொருத்துக:

1.ஆளுநர் -- பெயளவுத் தலைவர்
2.முதலமைச்சர் -- உண்மையான தலைவர்.
3.சட்டமன்ற பேரவை -- கீழவை.
4.சட்டமன்ற மேலவை -- மேலவை

**IV**. சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
விடை : சரி.

2.ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.
விடை : தவறு.

3.உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை.
விடை : சரி.

**V.**சரியான கூற்றைத் தேர்ந்தெடு :

1.மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.

**I.**குடியரசுத் தலைவர்.
**II.**துணை குடியரசுத் தலைவர்.
**III.**ராஜ் சபை உறுப்பினர்கள்.
**IV.**சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்.

விடை : இ.**I,III** மற்றும் **IV**. சரி.

**VI.**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு வார்த்தைகளில் விடையளி:

1.மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக?
மாநில சட்ட மன்றத்தின் இரு அவைகள்:
1.மேலவை என்பது சட்டமன்ற மேலவை எனவும்.
2.கீழவை என்பது சட்டமன்ற பேரவை எனவும் அழைக்கப்படுகிறது.

2.மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை?
மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராக தகுதிகள்:
1.சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
2.இந்திய குடிமகனாக, கட்சியின் சார்பாக அல்லது சுயேட்சையாக போட்டியிடலாம்.

3.முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார்.
வயது 25 க்கும் மேல் பதவிக்காலம் -5ஆண்டுகள். இவர் அமைச்சரவையின் தலைவர் ஆவார்.

4.மாநில அமைச்சரவை குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது?
சட்ட மன்ற தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி தலைவர் ஆளுநரால் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
முதலமைச்சர் தலைமையில் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை தேர்வு செய்வது அமைச்சரவை குழு எனப்படும்.

III.விரிவான விடையளி:
1.முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:
1.முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
2.மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
3.முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
4.மாநில அரசாங்கத்தின் கொள்கைகள் மக்கள் நலன் கருதி முடிவு செய்கிறார்.
5.முதலமைச்சர் ஆலோசனையின்படியே ஆளுநர் மாநில அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்.

2.மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
1.மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது.
2.மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது.
3.மாநில சட்ட மன்றம் மாநிலத்தின் நிதியை கட்டுப்படுத்துகிறது.
4.நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர முடியும்.
5.சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ, விலகிக் கொள்ளவே இயலாது.
6.அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது.
7.அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீதியை உறுதி செய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளை கொண்டுள்ளது.

3.உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் எழுதுக?
உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகள்:
1.அடிப்படை உரிமைகளை நிறைவேற்ற உயர்நீதிமன்றம் நீதிப் பேராணைகளை (ஆட்கொனர், தகுதிமுறை, தடை, கட்டண) பிறப்பிக்கின்றன.
2.ராணுவ தீர்ப்பாயம் நிங்கலாக அனைத்து சார்நிலை நீதிமன்றங்கள், மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கின்றது.
3.சார்நிலை நீதிமன்ற நிலுவை வழக்கிற்கு தீர்ப்பு வழங்குகிறது.
4.உயர்நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களை கட்டுப்படுத்துகிறது.
5.வழக்கு பதிவேடுகளின் ஆதார சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.
6.நீதி நிர்வாகத்திற்காக மாவட்ட நீதிமன்றங்கள் பிரிக்கப்பட்டு நீதிபதிகள் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள்.

## அலகு  2

## குடிமக்களும் குடியுரிமையும்:

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

விடை : ஆ.சொத்துரிமை பெறுவதன் மூலம்.

2.அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?

விடை :ஆ.பகுதி **II** பிரிவு 5  11

3.இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

விடை : ஆ.குடியரசுத் தலைவர்.

**II.**கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.ஒரு நாட்டின் ----- அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

விடை : குடிமகன்.

2.இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.

விடை : ஒற்றை.

3.இந்தியக் கடவுச் சீட்டினைப் பெற்று **(passport)**வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் ---- என அழைக்கப்படுகிறார்.

விடை : (**NRI**) வெளிநாட்டில் வாழும் இந்தியர்.

4.மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும் ----- யும் இயற்கையாக பெற்றிருக்கின்றனர்.

விடை : கடமைகள்.

5.------ என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும்.

விடை : உலகளாவிய

**II.**சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

விடை : தவறு.

2.வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு வாக்குரிமை உண்டு.

விடை :தவறு.

3.அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது.

விடை : சரி.

4.நாட்டுரிமையை மாற்ற இயலாது ஆனால் குடியுரிமையை மாற்ற இயலும்.

விடை : தவறு.

**IV.**கீழ்கண்ட கூற்றுகளில் பொருத்தமான விடைகளை தேர்வு செய்க :

1.ஒரு இந்தியக் குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது.

**I.**ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமையை பெறும் போது.

**II.**பதிவு செய்வதன் மூலம்.

**III.**தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும் போது.

**IV.**போரின் போது எதிரி நாட்டிடம் இந்திய குடிமகன் வணிகம் செய்யும் போது.

ஆ.**I** மற்றும் **III** சரி.

2.கூற்று : 1962 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்.

காரணம் : 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாகினர்.

விடை : அ.காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

**V**.கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வா்த்தைகளில் விடையளி:
1.குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக?
குடியுரிமை இரண்டு வகைப்படும்:
1.இயற்கை குடியுரிமை: பிறப்பால் பெறக்கூடிய குடியுரிமை.
2.இயல்புக் குடியுரிமை: இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை.

2.ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை?
இந்திய குடிமகனின் உரிமைகள்:
1.அடிப்படை உரிமைகள்.
2.மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை.
3.இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை.
4.இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் உறுப்பினராவதற்கான உரிமை.

3.நற்குடிமகனின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக?
நற்குடிமகனின் பண்புகள்:
1.அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடத்தல், சட்டத்துக்கு கீழ் படிதல்.
2.சமுதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல் மற்றும் குடிமைப் பணியை செயலாற்றுதல்.
3.நற்பண்புகளையும், நீதியையும் நிலைநாட்டுதல்.
4.வேற்றுமைகளை மறந்து நடத்தல்.

4.இந்தியக் குடிமகனாவதற்குறிய ஐந்து வழிமுறைகளை எழுதுக?
இந்தியக் குடிமகனாவதற்குறிய வழிமுறைகள்:
1.பிறப்பால் குடியுரிமை பெறுதல்.
2.வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்.
3.பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்.
4.இயல்புக் குடியுரிமை
5.பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை.
5.1955 ஆம் ஆண்டு இந்திய குடிரிமைச் சட்டம் பற்றி நீவிா் அறிவது என்ன?
1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம், ஒருவா் இந்தியக் குடிரிமை பெறுதலையும், இழத்தலையும் பற்றி குறிப்பிடுகிறது.

**VI**.விரிவான விடையளி:
1.ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

இந்திய குடியுரிமையை இழத்தல்:

இந்திய அரசியல் சட்டத்தின் இரண்டாவது பகுதியின் 5 முதல் 11 வரையிலான விதிகள் குடியுரிமை இழத்தலை பற்றி குறிப்பிடுகிறது.
1.குடியுரிமை துறத்தல் -ஒருவா் வெளி நாட்டில் தானாக முன்வந்து குடியுரிமை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.
2.குடியுரிமை முடிவுக்கு வருதல் -சட்டப்படி நடைபெறுதல்:
ஓர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும்பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.
3.குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்):

மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.

## அலகு - 3

## சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல்

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.சமயச்சார்பின்மை என்பது .

விடை : இ.எந்த சமயத்தைச் சார்ந்த குடிமகனும் சகிப்புத்தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்.

2.இந்தியா ஒரு --- கொண்ட நாடாகும்.

விடை : இ.(அ) மற்றும் (ஆ) இரண்டும்.

3.இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு.

விடை : ஆ.1976.

4.பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

விடை : ஈ.அரசியலமைப்பின் முகவுரை.

5.சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொர்புடையது.

விடை :ஈ.அடிப்படை உரிமைகள்.

6.அரசியலமைப்பின் பரிவு 28 எந்த வகையான கல்வியை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் தடைசெய்துள்ளது?

விடை :அ.சமய போதனைகள்.

7.ஒரு நாடு சமயச்சார்பற்ற நாடாக எப்போது கருதப்படும் எனில் அது.

விடை : இ.ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்

**II.**கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.சமயம் நமக்கு ----- போதிக்கவில்லை.

விடை : பகைமை.

2.சமயச்சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி அது ---- அளிக்கிறது.

விடை : ஒற்றுமையை.

3.-------- என்பது கடவுள் மற்றும் கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருப்பதாகும்.

விடை : நாத்திகம்.

4.நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் ----- மற்றும் ------ ஊக்குவிப்பதாகும்.

விடை : தேசிய ஒற்றுமை, ஒருமைபாட்டை

5.பிரிவு 15 சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் -------------------- காட்டுவதைத் தடை செய்கிறது.

விடை: பாகுபடுத்துவதைத்

**III.**பொருத்துக:

1.நாத்திகம் -- கடவுள் நம்பிக்கையற்றிருப்பது.
2.குழந்தைகள் -- வருங்கால குடிமக்கள்.
3.தீன் - இலாஹி -- தெய்வீக நம்பிக்கை.
4.அரசியலமைப்பு -- 1950
5.ஹோல்யோக் -- பதத்தை உருவாக்கியவர்.
6.இராஜாராம் மோகன்ராய் -- சமூகச் சீர்திருத்தவாதி.

**IV.**சரியா தவறா எனக் குறிப்பிடுக:

1இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது.

விடை : தவறு.

2.சமயச்சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

விடை : தவறு.

3.மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத்தன்மைக் கொள்கையைப் பின்பற்றினார்.

விடை : சரி.

4.சமண சமயம் சீனாவில் தோன்றியது.

விடை : தவறு.

5.இந்திய அரசாங்கம் அனைத்துச் சமய விழாக்களுக்கும் விடுமுறையை அறிவிக்கிறது.

விடை : சரி.

V.சரியான கூற்றைத் தேர்ந்தெடு:

1.இந்தியா போன்ற சமயப் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்குச் சமயச்சார்பின்மை விலைமதிப்பற்ற ஒன்றாகும்.

II.சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

III.அரசியலமைப்பு பிரிவு 26 ஒரு குறிப்பிட்ட சமயத்திற்காக வரி செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறது.

IV. அக்பரின் கல்லறை ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கந்தாரவில் உள்ளது.

விடை : ஈ.I, II, IV.மட்டும்.

2.கூற்று : ஒரு வெளிநாட்டவர் இந்தியாவில் தனது சமயத்தைப் பின்பற்றலாம்.
காரணம் : அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டவருக்கும் உண்டு.

I.கூற்றுசரி காரணம் தவறு.

II.கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

III.கூற்று தவறு, காரணம் சரி.

IV. கூற்று, காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்கவில்லை.

விடை : II.கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம். கூற்றை விளக்குகிறது.

3.கூற்று : இந்தியாவில் சமயச்சார்பின்மை என்ற கொள்கை மிக்க மதிப்புள்ளதாகும்.
காரணம் : இந்தியா பல்வேறு சமயம் மற்றும் பன்முக கலாச்சாரம் கொண்ட நாடாகும்.

I.கூற்று: சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

II.கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

III.கூற்று தவறு, காரணம் சரி.

IV.இரண்டும் தவறு.

விடை : I. கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

4.தவறான இணையைத் தேர்க.

I.தீன் இலாகி □ ஒருபுத்தகம்.

V.<u>கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு வார்தைகளில் விடையளி:</u>

1.சமயச்சார்பின்மையைப் பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக?

இராஜாராம் மோகன்ராய், சர் சையது அகமதுகான், இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி மற்றும் டீ.சு.அம்பேத்கர் போன்றோர் சமய சார்பின்மையை நிலைநாட்ட பங்களித்தனர்.

2.சமய சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது?

சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும்.

3.சமயச்சார்பின்மையின் நோக்கங்களைக் கூறுக?

1.மற்றொரு சமயக் குழுவின்மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.

2.ஒரு சமய உறுப்பினர்கள் அதே சமய உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.

3.அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது (அ) தனிநபர்கள் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது.

4.அரசிடமிருந்து சமயத்தை பிரிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்?

இந்தியா இறையாண்மையுள்ள சமத்துவ சமய சார்பற்ற நாடு ஆகும்.

எனவே சமயம் வேறு அரசியல் வேறு, பல்வேறு சமயக் கோட்பாடுகளைக் கொண்டுள்ள மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கதை பராமரிக்க நமக்கு சமயச் சார்பற்ற நாடு அவசியமாகும்.

அது சம உரிமைகளை வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி ஆகும்.

5.சமயச்சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக் கூறுகள் யாவை?

சமயச்சார்பற்ற நாட்டின் பண்புகள்:

1.சுதந்திர கோட்பாடு □ எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.

2.சமத்துவக் கோட்பாடு □அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.

3.நடுநிலைமைக் கோட்பாடு □சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்.

6.சமயச்சார்பின்மை தொடர்பான இந்திய அரசியலமைப்புப் பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிடுக?

சமயச்சார்பின்மை தொடர்பான பிரிவுகள்:

1.பிரிவு 15 □ சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்கிறது.

2.பிரிவு 25 (1) எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது.

3.பிரிவு 26 □சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்.

**VII.**விரிவான விடையளி:

1.சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?

சமயச்சார்பற்ற கல்வி:

1.குறுகிய மனப்பான்மையை போக்கி அறிவுசார்ந்த மனிதநேயத்தை உருவாக்கவும் பயன்படுகிறது.

2.இளைஞர்களை நல்ல குடிமக்களாக பயிற்சியளிக்கிறது.

3.சுதந்திரம், சமத்துவம், சகோதார மனப்பான்மையுடன் கூட்டுறவு வாழ்க்கை, மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துகிறது.

4.பரந்த பார்வை, பிறரை பாராட்டுதல், புரிந்துகொள்ளும் மனப்பான்மையை வளர்கிறது.

5.அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு, சமத்துவம், மற்றும் இரக்க உணர்வை வளர்க்கிறது.

6.பொருள் முதல்வாத கொள்கை மற்றும் ஆன்மீக கொள்கையை ஒருங்கிணைக்கவும் தேவைப்படுகிறது.

2.இந்தியா போன்ற நாட்டிற்குச் சமயச்சார்பின்மை அவசியம் நிருபிக்கவும்?

1.சமயச்சார்பற்ற நாடு என்பது ஒரு நாடு எந்தவொரு சமயத்தையும் அதிகாரபூர்வமாக ஊக்குவிக்காமல் ஒவ்வொரு சமயத்தையும் சமமாக நடத்துதல் என்பதாகும்.
2.ஒவ்வொரு குடிமகனும் சம உரிமை, சுதந்திரத்துடன் செயல்பட வழி செய்கிறது.
3.அரசாங்கம் அனைத்து சமயங்கள் தொடர்பாகவும் நடுநிலைமையை கொண்டிருப்பதோடு எவ்வித பாகுபாடும் காட்டுவதில்லை.
4.சமய சார்பற்ற ஒரு நாட்டில் எவருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகை அளிப்பதில்லை.
5.அனைத்து குடிமக்களும் எவ்வித சமய நம்பிக்கை கொண்டிருந்தாலும் அரசு பணியில் நுழைய தகுதி வாழ்ந்தவர்கள் ஆவர்.
6.கல்விக்கூடங்களில் முற்றிலும் சமய போதனைகள் இருத்தல் கூடாது என்பதோடு எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கும் ஆதரவாக எந்த வரிகளும் வசூலிப்பதில்லை.

**VIII.**உயர் சிந்தனை வினா:

1.சில சமயக் குழுக்கள் தங்களது சமயம் நரபலியை அனுமதிக்கிறது என்று கூறினால் அரசாங்கம் அவர்கள் கொள்கையில் தலையிடுமா?

முன்பு ஒரு காலத்தில் இம்முறை நிலவின.
இது நவீன உலகம், மூடநம்பிக்கைகள் அற்ற சமுதாயம் நிலவுகிறது.
எந்த உயிரினத்தையும் கொல்ல எந்த சமயமும் போதிக்கவில்லை.
எவ்வுயிர்க்கும் தீங்கு செய்தல் கூடாது என்பது அரசு மற்றும் மதங்களின் கோட்பாடு.
ஒரு மனிதரை நரபலியிடுவது சட்டவிரோதமானது.
அரசு அவர்களுக்கு தகுந்த தண்டனை அளிக்கும்.
பிறரை துன்புறுத்துவது மனித உரிமைக்கு எதிரானது.
எனவே ஒரு வேளை நரபலி நடந்தால் அச்சமய குழுக்களுக்கு அரசு கடுமையான தண்டனை வழங்கும்.

## அலகு - 4

## மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் :

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்-----மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

விடை : அ. ஐ.நா.சபை.

2.1995 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் ---- இல் கூடினர்.

விடை : அ.பெய்ஜிங்.

3.தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு.

விடை :ஆ.1993.

4.ஐ.நா. சபை 1979 ஆம் ஆண்டை ----- சர்வதேச ஆண்டாக அறிவித்தது.

விடை :ஆ.குழந்தைகள்.

5.உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

விடை :ஆ.டிசம்பர் 10.

6.மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என அழைக்கப்படுவது எது?

விடை : அ.மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (ருனுர்சுஊ)

7.தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

விடை : ஆ.ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி.

8.உலக மனித உரிமைகள் அறிவிப்பில் உள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை யாவை?

விடை : ஆ. 30.

9.தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக் காலம் என்ன?

விடை : ஈ.5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை.

10.தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

விடை : அ.புது டெல்லி.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.ஒவ்வொரு தனிமனிதனும் கண்ணியமான வாழ்க்கை வாழ ------உண்டு.

விடை : உரிமை.

2.மனித உரிமைகள் என்பது ------ உரிமைகள்.

விடை : அடிப்படை

3.மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு -----

விடை : 1997 ஏப்ரல் 17.

4.இந்திய அரசியலமைப்பின் 24 வது சட்டப்பிரிவு ------- ஐ தடைசெய்கிறது.

விடை : குழந்தை தொழிலாளர் முறையை.

5.ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு------

விடை : 1945 அக்டோபர் 24.

**III**.பொருத்துக :

1.எலினார் ரூஸ்வெல்ட் -- மனித உரிமைகளுக்கான ஆணையம்.
2.சைரஸ் சிலிண்டர் -- உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம்.
3.பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் -- 1997.
4.குழந்தை உதவி மைய எண் -- 1098.
5.வாழ்வியல் உரிமைகள் -- அடிமைத் தனத்திலிருந்து விடுதலை
6.அரசியல் உரிமை -- வாக்களிக்கும் உரிமை.

**IV**.சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

விடை : தவறு.

2.மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது.

விடை : தவறு.

3.1993 ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக வழிவகுத்தது.

விடை : சரி.

4.பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

விடை: தவறு.

5.மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

விடை : சரி.

**V**.சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1.தவறான கூற்றை கண்டறியவும்.

விடை : ஆ.தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.

2.தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்து பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல.

விடை : இ.இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

3.கூற்று : டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

காரணம் : இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.
விடை : இ.கூற்று காரணம் இரண்டும் சரி.

4.பின்வரும் கூற்றை ஆராய்க :
1.மாநில மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும்.
2.மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும்.
விடை : ஈ.எதுவுமில்லை.

VI.கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி:

1.மனித உரிமைகள் என்றால் என்ன?
1.மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றியும் அனைவருக்கும் இயல்பான உரிமைகள் ஆகும்.
2.அடிமைத்தனம் மற்றும் சித்திரவதையிலிருந்து சுதந்திரம், கருத்து சுதந்திரம், நியாயமான விசாரணை, வாழ்வதற்கான உரிமை வேலை மற்றும் கல்விபெறும் உரிமை ஆகியவை அடங்கும்.

2.மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பின் (UDHR) முக்கியத்துவத்தை எழுதுக?
மனித உரிமைகளின் உலகளாவிய அறிவிப்பு:
1.மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாக பிறக்கின்றனர்.
2.அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள்.
3.அவர்கள் அறிவாற்றலையும் மனசாட்சியையும் இயற்பண்பாகக் கொண்டவர்கள்.
4.எல்லா மக்களிடையேயும் பொதுவான சகோதாரத்துவத்தின் உணர்வை வளர்க்க கடமைப்பட்டவர்கள் ஆவர்.

3.இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப் பிரிவு எதனை அறிவுறுத்துகிறது?
இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப்பிரிவு 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

4.கல்வி உரிமைச் சட்டம் பற்றி எழுதுக?
கல்வி உரிமைச் சட்டம்:
6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கும் சட்டப்பிரிவு 21 வழிவகைச் செய்கிறது.

5.பெண்களின் நலனை பாதுகாப்பதற்காக நிறைவேற்றப் பட்ட மூன்று சட்டங்களைக் குறிப்பிடுக?
பெண்கள் நல பாதுகாப்புச் சட்டம்:
1.வரதட்சனைத் தடைச் சட்டம் -1961.
2.பெண்களைக் கேலி செய்வதற்கு எதிராணச் சட்டம் -1997.
3.குடும்ப வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் -2005.
4.இந்து விதவை மறுமணச் சட்டம் -1856.
5.இந்து வாரிசு சட்டம் -1956
6.இந்து திருமணச் சட்டம் -1955.

6.அரசியல் உரிமைகள் சிலவற்றைக் குறிப்பிடுக?

அரசியல் உரிமைகள்:

கருத்துச் சுதந்திரம், அமைதியாக கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்ளும் உரிமை.

வாக்களிக்கும் உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை ஆகியவைகள் அரசியல் உரிமைகளுள் அடங்கும்.

7.மனித உரிமைகள் ஐந்து முதன்மைப் பிரிவுகளை குறிப்பிடுக?

மனித உரிமைகள் 5 முதன்மைப் பிரிவுகள்:

1.வாழ்வியல் உரிமைகள் 2.அரசியல் உரிமைகள் 3.சமூக உரிமைகள் 4.பொருளாதார உரிமைகள் 5.கலாச்சார உரிமைகள்.

**VII.**விரிவான விடையளி:

1.மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வேறுபடுத்துக?

மனித உரிமைகள்:

1.மனித உரிமையானது தேசிய இனம், பாலினம், இன, மதம் மற்றும் வயது ஆகியவற்றைப் பொருத்படுத்தாமல் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் உரித்தானது.

2.மனித உரிமைகள் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும்.

3.எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளைப் பறிக்க முடியாது.

4.மனித உரிமைகள் பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும்.

வாழ்வியல் (சிவில்) உரிமைகள்:

1.ஒரு நாடு மாநிலத்தில் குடியுரிமை பெற்று அனுபவுத்தல் ஆகும்.

2.சிவில் உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்துடன் தொடர்பானவை.

3.அந்தந்த நாடுகள் பல்வேறு வகையான சிவில் உரிமைகள் மூலம் சுதந்திரங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும்.

4.சிவில் உரிமைகள் சமுகத்தினால் உருவாக்கப்படுகின்றன.

2.மனித உரிமைகளின் ஏதேனும் ஐந்து அடிப்படைப் பண்புகளை விவரி?

மனித உரிமைகளின் ஐந்து பண்புகள்:

1.இயல்பானவை: எந்த ஒரு நபரலாலும் அதிகாரத்தாலும் வழங்கப்படுவதில்லை.

2.அடிப்படையானவை: இந்த அடிப்படை உரிமைகள் இல்லையென்றால் மனிதனின் வாழ்க்கையும், கண்ணியமும் அர்த்தமற்றதாகிவிடும்.

3.மாற்றமுடியாதவை: இவைகள் தனிநபரிடம் இருந்து பறிக்க முடியாதவைகள் ஆகும்.

4.பிரிக்க முடியாதவை: அடிப்படை உரிமைகளை மறுக்க முடியாது.

5.உலகளாவியவை: தேசிய எல்லையைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் அமல்படுத்தப்படுகின்றன.

6.சார்புடையவை: இவைகள் ஒன்றுக்கொண்டு சார்புடையவைகள் ஆகும் ஏனென்றால் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

3.குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?

குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம்:

1.கல்வி உரிமைச் சட்டம்: 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்குச் சட்டப் பிரிவு 21யு வழிவகை செய்கிறது.

2.குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும்) சீரமைப்புச் சட்டம் 1986

இது 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடைசெய்கிறது.

3.சிறார் நீதிச்சட்டம் 2000 (குழந்தைகளைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்.

இந்தச் சட்டம் போதுமான கவனிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்த்திருத்த முயற்சி மேற்கொள்கிறது.

4.போக்சோ (**POCSO**) சட்டம் 2012:

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம். குழந்தைகளின் நலனே மிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய அம்சம் என கருதுகிறது.

**VIII.**உயர் சிந்தனை வினா:

1.உலகளாவிய மனித உரிமைகள் அறிவிப்பு யாருக்கு பொருந்தும்? இது உங்களுக்கு ஏன் முக்கியமாக இருக்கிறது?

1.உலகலாவிய மனித உரிமைகள் அறிவிப்பு உலகில் பிறந்த மக்கள் அனைவருக்கும் பொருந்தும்.

2.1950 ம் ஆண்டு முதல் டிசம்பர் 10-ம் நாள் மனித உரிமை தினமாக கொண்டாடப்படுகிறது.

3.மனித உரிமைகள் 185 நாடுகளில் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

4.உலக மனித உரிமைகள் அறிவிப்பு 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

5.மனிதர்கள் சுதந்திரமாக பிறந்து சகோதர மனப்பான்மையோடு வளர்கின்றனர்.

## அலகு -5

## சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள்.

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.சிவப்பு விளக்கு ஒளிரும் போது.

விடை: ஆ.வாகனம் நிறுத்த வேண்டும்.

2.பாதசாரிகள் சாலையைக் கடக்குமிடம்.

விடை : இ.வரிகோட்டு பாதையில்.

3.சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம்.

விடை :ஆ.ஜனவரி.

4.அவசர காலத்தில், அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண்.

விடை : அ. 108.

5.சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?

விடை : ஈ.இவை அனைத்தும்.

6.போக்குவரத்துக் குறியீடுகளின் முதல் வகை.

விடை : அ.கட்டாய குறியீடுகள்.

7.சேது பாரதம் திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு.

விடை : இ.2016.

8.**ABS** என்பதனை விரிவாக்கம் செய்க.

விடை : இ.பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பு

**(Anti  lock Braking system.)**

9.வளைவில் முந்துவது.

விடை: ஆ.அனுமதியில்லை.

10.அவசர சிகிச்சை ஊர்தி வரும்பொழுது.

விடை: இ. நம் வாகனத்தினைச் சாலை ஓரமாக செலுத்தி தடையில்லாமல் கடக்க அனுமதிக்க வேண்டும்.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக :

1.வாகனம் ஒட்டும் பொழுது எப்போதும் ------ புறம் செல்லவும்.

விடை : இடது.

2.கட்டாய குறியீடுகள் ------ வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

விடை : வட்ட

3.------- வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

விடை : வேக கட்டுப்பாட்டுக் கருவி.

4.அதிக வேகம்-------- ஆபத்து.

விடை : அதிக.

5.நான்கு சக்கர வாகனத்தில் ----- அணிவதும் இரு சக்கர வாகனத்தில் ------ அணிவதும் கட்டாயம் எனச் சட்டம் உள்ளது.

விடை : இருக்கைப் பட்டை

**III**.பெருத்துக :

1.மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் -- ஆறு மாதங்கள்.

2.புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி. -- 15 வருடங்கள்

3.பாதசாரி -- வரிக்கோட்டு பாதை.

4.பிரேசிலியா பிரகடனம். -- பன்னாட்டு மாநாடு.

5.சுவச்ச சே.ஃ.பர் -- சாலைப்பாதுகாப்புக் குறித்த சித்திர புத்தகம்.

**IV**.சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.சாலை விபத்துக்கள் தொடர்பான பிரச்சனை சாலையில் மட்டுமே உள்ளது.

விடை : தவறு.

2.பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினைப் பார்க்க வேண்டும்.

விடை : சரி.

3.ஒளிரும் மஞ்சள் விளக்கு, வேகத்தினை குறைத்தும் எச்சரிக்கையுடனும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

விடை : சரி.

4.இருசக்கர வண்டியில் ஒருவர் மட்டுமே பின் இருக்கையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள்.

விடை : சரி.

5.சாலைகள் மனிதனின் மிக மோசமான கண்டுபிடிப்புகளில் ஒன்று.

விடை :தவறு.

**V**.சரியான கூற்றைத் தேர்ந்தெடு:

1.பின்வரும் கூற்றுகளில் சரியல்லாதது எது?

**I**.முன்புற வாகனத்திலிருந்து சரியான இடைவெளியில் தொடரவும்.

**II**.வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடிக்க வேண்டும். ஒருபோதும் வேகத்திற்கான எல்லையினைத் தாண்டக்கூடாது.

**III**.வாகனம் ஒட்டும்பொழுது இருக்கை வார்பட்டை அணியத் தேவையில்லை.

**IV**.வாளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகத்தினைக் குறைக்க வேண்டாம்.

விடை : ஈ.**III.IV** மட்டும்.

2.கூற்று : மது அருந்தி விட்டு வாகனம் ஒட்டுவது விபத்துக்களை ஏற்படுத்துகின்றது.
காரணம் : மயக்கம் காரணமாக பார்வை பாதிக்கப்படுகின்றது.

விடை : அ.கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

3.கூற்று : சாலை குறியீடுகள் எளிதில் புரிந்துகொள்ள கூடிய ஒன்று.
காரணம் : அவைகள் பெரும்பாலும் படங்களாக இருக்கின்றன.

விடை : ஆ.கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

4.பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி (சாலை பாதுகாப்பு விதிகள்)

இ.வாகனம் ஒட்டும் பொழுது செல்லிடப் பேசியைப் பயன்படுத்து.

5.பின்வரும் குறியீடுகள் எதைக் குறிப்பிடுகின்றன.

விடை : ஆட்கள் வேலை செய்கிறார்கள்.

VI.பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் விடையளி:

1.சாலை பாதுகாப்பினை நீவிர் எவ்வாறு உறுதி செய்வாய்?

சாலை பாதுகாப்பு என்பது முதன்மையாக சாலையில் பயணிக்கும் அனைவரின் பாதுகாப்பையும் பாதுகாப்பு வழங்குவதையும் முதன்மையாகக் குறிக்கிறது.

சாலை விதிகளை பின்பற்றுவது, வேகக் கட்டுப்பாடு, கவனமாக செல்லுதல், இதர பாதுகாப்பை பின்பற்றி சாலை பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

2.சாலை பாதுகாப்பு நமக்கு ஏன் முக்கியமானது?

சாலை விபத்துக்கள் மூலம் படுகாயங்களும் இறப்பும் ஏற்படுகிறது எனவே கவனமாக சாலையில் பயணித்தல், சாலை விதிகளை பின்பற்றுதல், சாலை பாதுகாப்பு நமக்கு முக்கியமாகும்.

3.சாலை விபத்துக்களின் நேரடி விளைவுகள் என்ன?

சாலை விபத்துக்களின் நேரடி விளைவுகள்:

உயிரிழப்பு, படுகாயம், உடமைகளுக்கு சேதம் ஆகியனவாகும்.

4.போக்குவரத்து சமிக்கைகளின் விளக்குகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடுக?

1. சிவப்பு விளக்கு ☐ நில்
2. மஞ்சள் விளக்கு ☐ கவனி
3. பச்சை விளக்கு - செல்.

5.சாலை பாதுகாப்புக் குறித்த பிரேசிலியா அறிவிப்பைப் பற்றி குறிப்பு எழுதுக?

சாலை பாதுகாப்புக்கான பிரேசிலியா பிரகடனம்:

இது ஐ.நா. உலக சுகாதார அமைப்பு இணைந்து நடத்திய சாலைபாதுகாப்பு உயர்மட்ட மாநாடு பிரேசிலியாவில் பல நாடுகள் கையோப்பமிட்டன. இதன் மூலம் இப்பதிற்றாண்டுக்குள் - சாலை பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் போக்குவரத்தினால் ஏற்படும் இறப்புகளைக் குறைப்பதற்கான வழிகளை உருவாக்கவும் உறுதி பூண்டுள்ளன.

6.சாலை பாதுகாப்பு வாரம் கடைபிடிப்பதன் நோக்கம் யாது?

சாலை பாதுகாப்பு வாரம் என்பது சாலை விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் சாலை விபத்துக்கள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்வு ஆகும்.

மேலும் இது சாலையினை உபயோகிப்பவர்களுக்கு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது.

7.ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக?

சாலை விதிகள்:

1.இருவழி சாலையில் இடப்புறம் மட்டுமே ஒட்டுநர் வாகனத்தை செலுத்த வேண்டும்.

2.அனைத்து சாலை சந்திப்புகளிலும் மற்றும் பாதசாரி கடக்கும் கோடுகள் உள்ள இடங்களிலும் ஓட்டுநர் கட்டாயமாக வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும்.

3.தடை செய்யப்பட்ட இடங்களில் (மருத்துவமணை,பள்ளிக்கூடம்) ஒலிப்பான்களை பயன்படுத்தக் கூடாது.
4.இரு சக்கர வண்டியின் பின் இருக்கையில் ஒருவர் மட்டுமே அமர அனுமதிக்கப்படுகின்றனர்.

8.மது அருந்துதல் வாகன ஓட்டுதலை எவ்வாறு பாதிக்கின்றது?
1.மது அருந்துவது கவனத்தைக் குறைக்கும்.
2.அதன் காரணமாக வரும் மயக்கத்தினால் பார்வை தடைபடுகிறது.
3.மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டும்போது விபத்துக்கள் ஏற்படுகிறது.

VII.விரிவான விடையளி:
1.சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி?
சாலை விபத்துக்களுக்கான காரணங்கள்:
1.அதிக வேகம் -அதிக வேகம் விபத்து, காயங்கள் உயிரிழப்பு ஏற்படுகிறது.
2.மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல்:
மது அருந்துவது கவனத்தை குறைக்கும், பார்வை தடைபடும், விபத்துக்கள் ஏற்படும்.
3.வாகன ஓட்டிகளின் கவனச் சிதறல் - செல்லிடப்பேசியில் பேசுவது கவனசிதறலை ஏற்படுத்தும். இவை மனித மூளையின் செயல்பாட்டினை பெரும் பகுதி ஆக்கிர மிக்கிறது.
1.செல்லிடப்பேச்சு 2.வேறொன்றை சிந்திப்பது 3.வாகன ஒலி சாதனம் 4.சாலையில் நடமாடும் விலங்குகள் 5.பதாகைகள் 6.விளம்பரப் பலகைகைகள் கவனச் சிதறல்களுக்கான வேறு சில காரணங்கள் ஆகும்.
4.பாதுகாப்பு கருவிகளை தவிர்த்தல்:
இருக்கைப் பட்டை, தலைக்கவசம் அனியாமல் இருத்தல் விபத்தின் போது பாதிக்பை ஏற்படுத்தும்.
பல்வேறு காரணங்கள்:
தரமற்ற சாலைகள், பழுதுபட்ட வாகனங்கள், பாதசாரிகள் பாதையை கடப்பது பயனிகள் ஓட்டுநரிடம் பேசுவது, உடல் பகுதிகளை வெளியே நீட்டுவது, ஓட்டுநர்களின் தவறுகள் (களைப்பு, சோர்வு, மது அருந்துதல்)
வானிலை: முடுபனி, பனி, கனமழை, காற்று, புயல் மற்றும் கட்டி மழை போன்றவைகள் சாலை விபத்திற்கு காரணங்களாகும்.

2.சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை விளக்குக?
1.ஒரு பன்முக ஏற்புடைய வியூகம்: நுநுநுநு ☐ பொறியியல், செயலாக்கம், கல்வி, அவசரம்
சாலை பாதுகாப்பின் பன்முக யுக்தியாகும்.
2.வாகன பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல்:
சரக்கு வாகனத்தில் கம்பிகள் நீட்டாமலிருத்தல்
இரு சக்கர வாகனங்களில் யுடீளு.∴ஊடீளு நிறுத்தக் கருவிகள், முகப்பு விளக்கு, ஒளிர்விப்பான் கட்டாயம் ஆகும்.
3.50 கி.மீ தொலைவில் அவசர சிகிச்சை ஊர்தியை அமைத்தல்.
4.வாகனத்தில் வேக கட்டுப்பாட்டு கருவிகளை பொருத்த வேண்டும்.
5.பயணிகளுக்கு தகவல்கள் தெரிவிக்க பல்வேறு செய்தி குறியீடுகளை அமைத்தல் வேண்டும்.
6.ஓட்டுநர்களுக்கு பயிற்சி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

3.சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

சாலை விபத்துக்களை தடுக்கும் நடவடிக்கைகள்:

1.ஒரு வழி சாலையில் வலப்புறம் முந்தி செல்ல அனுமதிக்க வேண்டும்.
2.இருவழி சாலையில் இடப்புறம் மட்டுமே வாகனத்தை செலுத்த வேண்டும்.
3.சாலை சந்திப்பு, பாதசாரி கோடுகளில் வாகனத்தின் வேகத்தை குறைக்க வேண்டும்.
4.மருத்துவமனை, பள்ளிகூடம் அருகில் ஒலிப்பான்களை பயன்படுத்தக் கூடாது.
5.மருத்துவ ஊர்த்தி, தியணைப்பு வாகனங்கள், இராணுவ பாதுகாப்பு வாகனங்கள் போன்றவைகளுக்கு வழி விட வேண்டும்.
6.அவசர காலங்களில் அபாய குறிக்காட்டிகளைப் பயன்படுத்த வேண்டும்.
7.ஒலிப்பான்களை எரிச்சலூட்டும் வகையில் ஒலிக்க கூடாது.
8.ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை பிற்பற்றி இயக்க வேண்டும்.

## அலகு □ 6
## பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை:

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1.இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி------
விடை: அ.குடியரசுத் தலைவர்.
2.இந்திய இராணுவப் படையின் முதன்மை நோக்கமானது.
அ.தேசிய பாதுகாப்பு. ஆ.தேசிய ஒற்றுமை இ.அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காத்தல்.
விடை : ஈ.மேற்கூறிய அனைத்தும்.
3.இராணுவ தினம் அனுசரிக்கப்படும் நாள்.
விடை : அ.ஜனவரி 15.
4.அஸ்ஸாம் ரைபிள்ஸ் எதன் கீழ் செயல்படுகிறது?
விடை : ஈ.உள்துறை அமைச்சகம்.
5.இந்தியக் கடலோரக் காவல்படை நிறுவப்பட்ட ஆண்டு.
விடை: 1978.
6.இந்திய வெளியுறவுக் கொள்கையானது பல்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அவைகளுள் ஒன்று.
விடை : ஆ.பஞ்சசீலம்.
7.பின்வருவனவற்றுள் எந்த தீவுகள் இந்தியாவிற்கு சொந்தமானவை?
விடை : ஆ.அந்தமான் மற்றும் லட்சத்தீவுகள்.

**II.**கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.மெட்ராஸ் ரெஜிமெண்ட் பிரிவின் மையம் அமைந்துள்ள இடம்-------
விடை : வெலிங்டன் உதகமண்டலம், தமிழ் நாடு.
2.இந்திய கடற்படையின் தலைமை தளபதி ------- ஆவார்.
விடை : அட்மிரல்.
3.இந்திய விமானப்படையிலிருந்து ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி --------- ஆவார்.
விடை : அர்ஜுன்சிங்.
4.இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினை வடிவமைத்த முதன்மைச் சிற்பி -------
விடை : ஜவஹர்லால் நேரு.
5.அணிசேராமை என்ற சொல்லை உருவாக்கியவர் --------
விடை : வி.கே. கிருஷ்ணமேனன்.

**III.**பொருத்துக :

1.நெல்சன் மண்டேலா -- இனவெறிக் கொள்கை.
2.தேசிய போர் நினைவுச்சின்னம் -- புது டெல்லி.
3.மானக்ஷா -- பீல்டு மார்ஷல்
4.சார்க் -- 8 உறுப்பினர்கள்.
5.பி.சி.ஐ.எம். -- எரிசக்தி மேம்பாடு.

**IV**.சரியா தவறா எனக் குறிப்பிடுக :
1.மத்திய ஆயுதக் காவல் படைகள் (**CAPF**)பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
விடை : தவறு.
2.மெட்ராஸ் ரெஜிமென்ட் பழமையான காலாட்படைப் பிரிவுகளில் ஒன்று.
விடை : சரி.
3.விரைவு அதிரடிப் படையானது மத்திய ரிசர்வ் காவல் படையின் (**CRPF**) ஒரு சிறப்பு பிரிவு ஆகும்.
விடை : சரி.
4.ஹோஊ மாணவர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
விடை : சரி.
5.வங்காளதேசம் இந்தியாவின் ஒரு பகுதி ஆகும்.
விடை : தவறு.
6.இந்தியாவிற்கும், யுளுநுயுே என்ற கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் மியான்மர் ஒரு நிலப்பாலமாக செயல்படுகிறது.
விடை : சரி.

**V**. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.
1.ஆயுதப்படைகள் தொடர்பான பின்வரும் கூற்றினை ஆராய்க.
**I**.இந்திய இராணுவப் படை ஆயுதப் படைகளின் நிலஅடிப்படையிலான பரிவு ஆகும்.
**II**.இந்திய இரணுவப் படையின் நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் மனித மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது.
விடை : இ.**I**மற்றும் **II**. சரி

2.கூற்று : குடியரசுத் தலைவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமை தளபதி ஆவார்.
காரணம் : குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகவும் மிக உயர்ந்த பதவி நிலையையும் வகிக்கிறார்.
விடை : அ.கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
3.கூற்று : பன்னாட்டு கூட்டுறவை இந்தியா ஆதரிக்கிறது.
காரணம் : நட்பு -- கூட்டுறவு மூலம் நாடுகளுக்கிடையே உள்ள அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்று இந்தியா நம்புகிறது.
விடை : இ.கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
4.இனவெறிக்கொள்கை பற்றி பின்வரும் எந்த கூற்று சரியானவை அல்ல.
**I**.நிறவெறிக் கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம்.
**II**.இது மனிதாபிமானத்திற்கு எதிரானது.
**III**.இனப்பாகுபாட்டுக் கொள்கை இந்தியாவில் நடைமுறையில் உள்ளது.
விடை : ஈ.**III** மட்டும்.
5.பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
அ.மாலத்தீவு ஆ.இலங்கை இ.மியான்மர் ஈ.லட்சத்தீவுகள்.
விடை : இ.மியான்மர்.

**IV**.பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

2.பின்வருவனவற்றிற்கு விரிவாக்கம் தருக.
அ.**SFF --The Special Frontier Force.** □ சிறப்பு எல்லைப் படை
ஆ.**ICG --Indian coast Guard** - இந்திய கடலோர காவல் படை
இ.**BSF --Border security Force**-எல்லை பாதுகாப்பு படை
ஈ.**NCC -- National cadet corps** □ தேசிய மாணவர் படை

**VI.**பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்:
1.தேசிய பாதுகாப்பு மிக அவசியமானது ஏன்?
ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும்.
இது நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

2.பின்வருவற்றிற்கு விரிவாக்கம் தருக?
அ).**SFF** < சிறப்பு எல்லைப் படை **Special Frontier Force**
ஆ).**ICG** < இந்தியக் கடலோரக் காவல் படை **Indian coast Guard.**
இ).**BSF** < எல்லை பாதுகாப்பு படை **Border security Force**
ஈ). **NCC** < தேசிய மாணவர் படை **National cadet corps**

3.மத்திய ரிசர்வ் காவல் படை பற்றி சிறுகுறிப்பு வரைக?
அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பதற்கும், சமூக நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், சட்டம் ஒழுங்கு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பினைத் திறம்பட மற்றும் திறமையாக பராமரிப்பதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு உதவுவதே மத்திய ரிசர்வ் காவல் படையின் நோக்கம் ஆகும்.
4.அனிசேரா இயக்கம் நிறுவனத் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
அனிசேரா இயக்கம் நிறுவனத் தலைவர்கள்:
1.இந்தியாவின் - ஜவஹர்லால் நேரு.
2.யுகோஸ்லாவியாவின் - டிட்டோ.
3.எகிப்தின் - நாசர்.
4.இந்தோனேசியாவின் - சுகர்னோ.
5.கானாவின் - குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.
5.இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளை எழுதுக?
இந்திய வெளியுறவுக் கொள்கை:
1.தேசிய நலனைப் பாதுகாத்தல் 2.உலக அமைதியினை அடைதல் 3.ஆயுதக் குறைப்பு 3.பொருளாதார வளர்ச்சி 4.காலனித்துவம், இனவெறி மற்றும் ஏகாபதித்தியம் ஆகியவற்றை நீக்குதல் 5.நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
6.சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
சார்க் அமைப்பு 8 உறுப்பு நாடுகளைக் கொண்டது. அவைகள்:
1.இந்தியா 2.வங்காளதேசம் 3.பாகிஸ்தான் 4.நேபாளம் 5.பூடான் 6.இலங்கை 7.மாலத்தீவு 8.ஆப்கானிஸ்தான் ஆகியனவாகும்.

**VII.**விரிவான விடை:
1.இந்திய இராணுவப் படையின் அமைப்பு மற்றும் நிர்வாகத்தினை விவரி?
இராணுவப் படை (**Army**)

1.இந்திய இராணுவப் படை என்பது நில அடிப்படையிலான (தரைப்படை) ஒரு பிரிவு ஆகும்.
2.இது உலக அளவில் மிகப் பெரிய தன்னார்வ படைப்பிரிவு ஆகும்.
3. இது ஜெனரல் (**General**) என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட இராணுவப்படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது.
4.தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாத்தல் உள்நாட்டு அச்சுறுத்தல்கள் மற்றும் நாட்டின் எல்லைக்குள் அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதல் ஆகியன இந்திய இராணுவப்படையின் முதன்மைப் பணிகளாகும்.
5.மேலும் இது இயற்கை பேரழிவு மற்றும் பேரிடர் காலங்களில் மனிதாபிமான மீட்புப் பணிகளையும் செய்கிறது.
6.இந்திய இராணுவம் ரெஜிமென்ட் என்ற ஒரு அமைப்பு முறையைக் கொண்டது.
7.இது செயல்பாட்டு ரீதியாகவும், புவியியல் அடிப்படையிலும் ஏழு படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

2.துணை இராணுவப்படை பற்றி எழுதுக?

உள்நாட்டு பாதுகாப்பைப் பராமரிக்கவும், கடலோரப் பகுதியைப் பாதுகாக்கவும், இராணுவத்திற்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் படைகள் துணை இராணுவப் படைகள் என்றழைக்கப்படுகின்றன.
2. இரயில் நிலையங்கள், எண்ணெய் வயல்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய முக்கியமான பகுதிகளைப் பாதுகாக்கும் பணியைச் செய்கிறது.
3.இயற்கை மற்றும் மனித பேரழிவுகளிலிருந்து மக்களை மீட்கும் பணியிலும் இப்படைகள் ஈடுபடுகின்றன.
4.அமைதி காலங்களில் இந்த துணை இராணுவப் படைகள் சர்வதேச எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கின்றன. அவைகள்
1.அஸ்ஸாம் ரைபிள்ஸ் (**AR**)
2.சிறப்பு எல்லைப்புறப் படை (**SFF**)

அஸ்ஸாம் ரைபிள்ஸ்: (**Assam Ritles –AR**)

1.இது 1835 ம் ஆண்டில் அஸ்ஸாம் பகுதியில் பரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது. இது கச்சர் லெவி எனப்பட்ட குடிப்படை இராணுவப் பயிற்சி பெற்ற மக்கள் குழு ஆகும்.
2.இதில் 46 படைப்பிரிவுகள் உள்ளன. இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது

சிறப்பு எல்லைப்புற படை:
(**Special frontier Force – SFF**)

1.சிறப்பு எல்லைப்புற படை என்பது ஒரு துணை இராணுவச் சிறப்புப்படை ஆகும்.
2.இது 1962 ல் உருவாக்கப்பட்டது.
3.இப்படை புலனாய்வு பணியகத்தின் (**IB**) நேரடி மேற்பார்வையில் இருந்தது. பின்னர் இது இந்தியாவின் புலானாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் கீழ் செயல்பட்டு வருகிறது.

3.பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகளை எழுதுக?

பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகள்:

1.ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்.
2.பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
3.பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.
4.பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.

5.அமைதியாக இணைந்திருத்தல்.

4.இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது எப்படி?
1.இந்தியா சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பைக் கொண்டுள்ளது.
2.ஒத்துழைப்பு மூலம் நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்க்க முடியும் என்று இந்தியா நம்புகிறது.
3.இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது
1.நட்புறவுகளை வளர்ப்பது மற்றும்
2.அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

I.அண்டை நாடுகளுக்கான முன்னுரிமைக் கொள்கை:
உறவை மேம்படுத்துதல், வள ஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சி ஆகிய வடிவில் அண்டை நாடுகளுக்கு ஆதரவினை அளிக்கிறது.
பொருட்கள், மக்கள், ஆற்றல், மூலதனம் மற்றும் தகவல்கள் ஆகியவற்றின் தடையில்லா பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்காக அதிக இணைப்பும் ஒருங்கிணைப்பும் அளிக்கப்படுகிறது.
கிழக்கு செயல்பாடு என்ற கொள்கை: ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக, இந்தோ – பசிப்பிக் பகுதியில் நிலையான மற்றும் பன்முக சமநிலையை உறுதிசெய்வதும் ஆகும்.

**Saarc** –தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் அமைதி, ஒத்துழைப்புடன் செயல்படுகிறது.

**BCIM** – வங்கம், சீனா, இந்தியா, மியான்மர், பொருளாதாரம், எரிசக்தி, போக்குவரத்து, தொலைதொடர்புடன் செயல்படுகிறது.

**BIMSTEC**: வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதான கூட்டுறவு முயற்சியாகும்.

**BBIN:** வங்கம், பூடான், இந்தியா, மயான்மர் பயணிகள் சரக்கு, எரிசக்தி மேம்பாடு பரிமாற்ற கூட்டமைப்பாகும்.

**VIII.**உயர்சிந்தனை வினா:
1.பாதுகாப்பு படைப்பிரிவுகளில் பணிசெய்வது நாட்டின் மிக மதிப்பு மிக்க மற்று மரியாதைக்குரிய நிலையை உறுதிப்படுத்துகிறது அதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக?
பாதுகாப்பு படையின் முக்கியத்துவம்:
1.நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக உள்ளது.
2.நாட்டின் அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய பாதுகாப்பு படை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.
3.பாதுகாப்பு படையினர் உடல், மன வலிமையுடன் காணப்படுவர்.
4.நாட்டு மக்களின் நன்மதிப்பும், மரியாதையும் பெறுகின்றனர்.
5.நாட்டிற்காக சேவை செய்ய விரும்புவோர் பாதுகாப்பு படையில் சேர்ந்து பனியாற்றுகின்றனர்.
6.பாதுகாப்பு படையில் பணிபுரிவோர்க்கு அரசு பல்வேறு சலுகைகளை அளிக்கின்றது.
7.ஒய்வுக்கு பிறகு தனியார் மற்றும் அரசு வேலை எளிதில் கிடைக்கின்றது.

## அலகு - 7
## நீதித்துறை.

**I.**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
1.இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை -----

விடை : இ.உச்ச நீதிமன்றம்.

2.----- க்கு இடையே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு செயல்முறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது.

விடை : ஈ.மேற்கண்ட அனைத்தும்.

3.கீழ்க்கண்ட எந்த அதிகார வரம்பின் மூலம் இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனைகளை உச்சநீதிமன்றம் தீர்க்க வழிவகை செய்கிறது.

விடை : அ.முதன்மை அதிகார வரம்பு.

4பின்வரும் எந்த மாநிலம் ' யூனியன் பிரதேசம் ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது?

விடை : இ.பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர்

5.பொதுநல வழக்கு முறை இந்தியாவில் ------- ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விடை : அ.உச்சநீதிமன்றம்.

6.இந்தியாவில் உச்ச நிலையில் உள்ள நீதிமன்றங்கள் எத்தனை?

விடை : அ.ஒன்று.

7.உச்சநீதிமன்றம் அமைந்துள்ள இடம்.

விடை : ஈ.புதுதில்லி.

8.**FIR** என்பது.

விடை : அ. முதல் தகவல் அறிக்கை.

9.குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ----- என அழைக்கப்படுகின்றன.

விடை: ஆ.அமர்வு நீதிமன்றம்.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக:

1.------ நீதிமன்றம் இந்தியாவின் பழமையான நீதிமன்றம் ஆகும்.

விடை : கல்கத்தா.

2.அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள்-------- மற்றும் ------ உடன் இந்திய நீதித்துறையை நிறுவினர்.

விடை : சுதந்திரம், நடுநிலைமைத் தன்மை.

3.புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவஞானியான ------ □ஒரு சுதந்திரமான நீதித்துறை□ என்ற கருத்தை முன்மொழிந்தார்.

விடை : மாண்டெஸ்கியூ.

4.------ பணம், சொத்து, சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது.

விடை : உரிமையியல் சட்டம்.

5.பழங்காலத்தில் பெரும்பாலான அரசர்களின் நீதிமன்றங்கள் ------- ன்படி நீதியை வழங்கின.

விடை : தர்மத்தின் படி.

**III**.பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1.உச்ச நீதிமன்றம் | -- | இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம். |
| 2.உயர் நீதிமன்றம் | -- | மாநிலத்தின் உயர்ந்த நீதிமன்றம். |
| 3.லோக் அதாலத் | -- | விரைவான நீதி. |
| 4.சர் எலிஜா இம்ஃபே | -- | முதல் தலைமை நீதிபதி. |
| 5.ஸ்மிருதி | -- | சமூக கடமைகள் |

**IV**.சரியா தவறா எனக் குறிப்பிடுக :

1.1951 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் நாள் இந்திய உச்சநீதிமன்றம் தொடங்கப்பட்டது

விடை : தவறு.

2.துக்ளக் ஆட்சிக்காலத்தில் சட்ட நடைமுறைகள் அரபுமொழியில் எழுதப்பட்டன.

விடை : சரி.

3.1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச்சட்டம் உச்சநீதிமன்றம் அமைப்பதற்கு வழி வகுத்தது.

விடை : சரி.

4.சதர் திவானி அதாலத் ஒரு குற்றவியல் நீதிமன்றமாகும்.

விடை : தவறு.

5.இந்தியாவில் மிகப்பெரிய நீதிமன்றம் அலகாபாத் நீதிமன்றம் ஆகும்.

விடை : சரி.

6.இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்துக் குடிமக்களுக்கான நீதியைப் பாதுகாக்கிறது.

விடை : சரி.

V.சரியான கூற்றைத் தேர்ந்தெடு :

1.பின்வரும் கூற்றை ஆராய்க :

I.மெக்காலே பிரபுவால் ஒரு சட்ட ஆணையம் அமைக்கப்பட்டது.

II.இது இந்தியச் சட்டங்களை நெறிமுறைப்படுத்தியது.

விடை : இ.I மற்றும் II சரியானவை.

2.பின்வரும் கூற்றை ஆராய்க :

I.இந்திய தண்டனைச் சட்டம் 1860 இல் உருவாக்கப்பட்டது.

II.கல்கத்தா உயர்நீதிமன்றம் 1862 இல் நிறுவப்பட்டது.

III.1935 ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கூட்டாட்சி நீதிமன்றத்தை உருவாக்கியது.

விடை : ஈ.அனைத்தும் சரி.

3.இந்திய உச்சநீதிமன்றம் பற்றிய பின்வரும் எந்த கூற்றுச் சரியானது அல்ல.

I.இந்தியாவின் உச்சநீதிமன்றம் நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் ஆகும்.

II.இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் IV வது அத்தியாயத்தின் கீழ் பகுதி V - இன்படி நிறுவப்பட்டது.

III.ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு வழக்குகளை உச்சநீதிமன்றத்தால் மாற்ற முடியாது.

IV.இதன் முடிவுகள் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.

விடை : இ. III.

4.கூற்று : உச்சநீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றமாகும்.

காரணம் : இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளைப் பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ் நீதிமன்றங்களை கட்டுப்படுத்தும்.

விடை : இ.கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

Vi.பின்வருனவற்றிற்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி:

1.நீதித்துறை அமைப்பு நமக்கு ஏன் தேவைப்படுகிறது?

நீதித்துறை: நீதியை நிர்வகித்தல், தகராறுகளை தீர்த்தல், சட்டங்களுக்கு விளக்கம் அளித்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகவனாகவும் விளங்குகிறது.

2.இந்திய நீதிமன்றங்களின் பல்வேறு படிநிலைகள் யாவை?

இந்திய நீதிமன்றங்களின் பல்வேறு படிநிலைகள்:

1.இந்திய உச்ச நீதிமன்றம் 2. உயர்நீதிமன்றங்கள் 3.மாவட்ட நீதிமன்றங்கள் 4.துணை நீதிமன்றங்கள் (உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பரிசிலிக்கிறது. 5.அமர்வு நீதிமன்றங்கள் 8.லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றங்கள் 9.விரைவு நீதிமன்றம் 10.தொலைதூர சட்ட முன்னெடுப்பு நீதிமன்றம். 11.குடும்ப நீதிமன்றங்கள் 12 நடமாடும் நீதிமன்றங்கள் 13. இ.நீதிமன்றங்கள் (2005 முதல்)

3.சட்டம் நீதிதுறை □ வேறுபடுத்துக?

| சட்டம் | நீதித்துறை |
|---|---|
| இது மக்களை ஆள்வதற்கு ஓர் அராசாங்கத்தாலோ (அ) நிறுவத்தாலோ விதிக்கப்படும் அமைப்பு ஆகும். | சட்டப்படி, ஒரு நாட்டின் பெயரால் நீதியை வழங்குகின்ற நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்களின் அமைப்பு நீதித்துறை எனப்படுகிறது. |

4.மக்கள் நீதிமன்றம் பற்றி குறிப்பு எழுதுக?

மக்கள் நீதிமன்றம்:

1.விரைவான நீதியை வழங்க (லோக் அதாலத் - மக்கள் நீதிமன்றம், அமைக்கப்பட்டது.

2.இது மக்கள் முன்னிலையில் மக்கள் பேசும் மொழியிலேயே பிரச்சினையை விசாரித்துத் தீர்வு காண்கிறது.

3.பரஸ்பர ஒப்புதல் மூலம் தீர்த்து வைக்கப்படுகிறது.

5.நடமாடும் நீதிமன்றங்களின் நன்மைகள் யாவை?

1.நடமாடும் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களுக்கு இடர்களைத் தீர்க்கும்.

2.இது கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து, அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கிறது.

**VII.**விரிவான விடையளி:

1.நீதித்துறையின் பங்கு பற்றி எழுதுக?

நீதித்துறையின் பங்கு:

**I.**தகராறுகளைத் தீர்வு செய்தல்:

1.குடிமக்கள் 2.குடிமக்கள் மற்றும் அரசாங்கம் 3.இரண்டு மாநில அரசாங்கள் 4.மத்திய, மாநில அரசாங்கள்.

இவைகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு இயக்க முறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது.

**II.**நீதிமன்ற மனு ஆய்வு அதிகாரம்:

நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பினை மீறுகிறது என நீதித்துறை நம்பும் பட்சத்தில் அச்சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது.

**III.**சட்டத்தை நிலைநிறுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துதல்:
ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் தனக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாக நம்பும்பட்சத்தில் அவர் உச்ச நீதிமன்றத்தையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ அணுகலாம்.

2.உரிமையியல் சட்டம் குற்றவியல் சட்டம் வேறுபடுத்துக?

**I.**உரிமையியல் சட்டங்கள்:

1.இது பணம், சொத்து மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுகிறது. எ.கா: நிலம் தொடர்பான பிரச்சினைகள், வாடகை, திருமணம் தொடர்பான பிரச்சினைகள்.

2. உரிமையியல் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும்.
3. மனுதாரரின் கோரிக்கையின்படி பணம் செலுத்தும்படியான தண்டனைகள் வழங்கப்படுகிறது.

II.குற்றவியல் சட்டங்கள்:
1. குற்றம் என சட்டம் வரையறுக்கும் நடத்தைகள் அல்லது செயல்களை இது விசாரிக்கிறது.
எ.கா: திருட்டு, கொலை, பெண்களைத் துன்புறுத்துதல் ஆகியன.
2. இது வழக்கமாக காவல்துறை விசாரணையுடன் முதல் தகவல் அறிக்கை (FiR) பதிவு செய்வதன் மூலம் தொடங்குகிறது, அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.
3. குற்றவாளி என நிருபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் சிறைக்கு அனுப்பப்படுவார்.

3.உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விவரி?
உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு:
1.முதன்மை அதிகார வரம்பு: மத்திய மாநில அரசுகள் பிரச்சனைகள் மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பிரச்சினைகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.
2.மேல் முறையீட்டு அதிகார வரம்பு:
உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.
அவ்வாறான வழக்குகள் மேல்முறையீட்டுக்கு தகுதியுள்ளது என உயர்நீதிமன்றத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
3.ஆலோசனை அதிகார வரம்பு: குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்படும் பொழுது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி குறித்து ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.

4.நீதிப் பேராணை அதிகார வரம்பு: இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32 ன் படி உச்சநீதிமன்றமும்,சட்டப்பிரிவு 226ன் படி உயர்நீதிமன்றமும் நீதிப்பேராணைகளை வழங்குகின்றன.
5.ஆவண நீதிமன்றம்: இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளைப் பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ்நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும்.
6.சிறப்பு அதிகாரம்: இது கீழ் நீதிமன்றங்களின் செயல்பாட்டைக் கண்காணிக்கிறது.

## பொருளியல் :
## அலகு ☐ 1.
## பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்:

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :
1.உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?
அ.தங்கம் ஆ.வெள்ளி இ.வெண்கலம்
விடை : ஈ.மேற்கூறிய அனைத்தும்.
2.இந்திய ரூபாய் குறியீட்டினை வடிவமைத்தவர் யார்?
விடை : அ.உதயகுமார்.
3.பணத்தின் மதிப்பு
விடை : இ. அ மற்றும் ஆ.
4.வங்கி பணம் என்பது எது?
விடை:அ.காசோலை.

5.தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
விடை : ஈ.வரி செலுத்துவது.
6.பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்.
விடை : ஈ. அனைத்தும் சரி.

**II**.கோடிட்ட இடங்களை நிரப்புக :
1.நிகழ்நிலை வங்கியை ----- என்று அழைக்கலாம்.
விடை : இணைய வங்கி.
2.பணம் எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே -----
விடை : பணம்.
3.மின்னணு வங்கியை ---- என்றும் அழைக்கலாம்.
விடை : தேசிய மின்னணுநிதி.
4.கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ----- பணமாகும்.
விடை : பண்ட பணிகளை வாங்கும் சக்தி.
5.இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு------
விடை : 1935.

**III**.பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1.பண்டமாற்று முறை | -- | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம். |
| 2.இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் | -- | 1935 |
| 3.மின் - பணம் | -- | மின்னணு பணம். |
| 4.சேமிப்பு | -- | நுகர்வு தவிர்த்த வருமானம். |
| 5.கருப்பு பணம் | -- | வரி ஏமாற்றுபவர்கள். |

**IV**.ஓரிரு வினாக்களுக்கு விடையாளி :
1.□பணம் □ என்ற வார்த்தை எதன் மூலம் பெறப்பட்டது?
விடை :மோனேட்டா ஜீனோ(ரோம் வார்த்தை)
2.இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார்?
விடை : இந்திய ரிசர்வ் வங்கி.

**V**.சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும் :
1.பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன.
**I**.இருமுகத்தேவை பொருத்தமின்மை.
**II**.செல்வத்தை சேமிக்க சிரமமில்லை.
**III**.பொதுவான மதிப்பின் அளவுகோல்.
**IV**.பொருட்களின் பகுபடாமை.
விடை : இ.I > III மற்றும் IV சரி.

**V**.தவறான ஒன்றினை கண்டுபிடிக்க :
1பரிமாற்றத்திற்கு பணத்தின் சமீபத்திய வடிவங்கள்.
விடை : ஆ. பண்டமாற்று முறை.
2.பொருளாதாரத்தில் இருப்புப் பணத்தின் விளைவுகள்.
விடை : ஈ.ஆடம்பர நுகர்வுச் செலவு.

**VI**.சுருக்கமான விடையளி:
1.பண்டமாற்று முறை என்றால் என்ன?

பண்டைய காலத்தில் பணம் பயன்படுத்தப்படாமல் பண்டத்திற்கு பண்டம் பரிமாற்றம் நடைபெற்றதை பண்டமாற்று முறை என்றனர்.
மக்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை மற்றொரு பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு பரிமாற்றம் செய்திருக்கிறார்கள்.

2.அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?
பண்டப் பணம், உலோக பணம், காகித பணம், கடன் பணம், நிகர் பணம் போன்றவைகள் சமீப கால பணத்தின் வடிவங்கள் ஆகும்.
காலம், இடம், மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பணம் பல நிலைகளில் உருவானது.
3.மின் - வங்கி மற்றும் மின் - பணம் - சிறு குறிப்பு வரைக?
மின்னனுப் பணம்:
வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னனு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.
மின் வங்கி: காசோலே (அ) ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னனு வழிமுறை பயன்படுகிறது.

4.பணத்தின் மதிப்பு என்றால் என்ன?
பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும்.
இது பண்ட மற்றும் பணிகளின் விலை அளவை சார்ந்திருக்கும்.
பணத்தின் மதிப்பு 1.பணத்தின் அக மதிப்பு 2.பணத்தின் புற மதிப்பு என இருவகைப்படும்.
5.சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?
சேமிப்பு: வருவாயில் ஒரு பகுதி தற்போதைய நுகர்வுக்காக பயன்படுத்தப்படாமல் எதிர்கால பயன்பாட்டிற்கு ஒதுக்கி வைப்பது சேமிப்பு எனப்படும்.
முதலீடு: பல்வேறு முறைகளில் மூலதனத்தை பயன்படுத்தும் முறையை முதலீடு எனப்படும்.
அதாவது பணம், நேரம், முயற்சிகள் அல்லது பிற மூலங்களில் ஏதேனும் ஒன்றினைப் பயன்படுத்தி முதலீடு செய்து அதற்கு மாற்றாக எதிக் காலத்தில் வருமானமாக திரும்பப்பெறுவதாகும்.

6.கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?
கருப்புப் பணம் என்பது கணக்கில் கொண்டு வராத பணத்தின் ஒரு வடிவமாகும்.
இது பெரும்பாலும் வணிக மக்களால் தோற்றுவிக்கப்படுகிறது.

7.பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?
கருப்பு பணத்தின் விளைவுகள்
1.வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு.
2.உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது.
3.இரட்டை பொருளாதாரம் (ஒரு புறம் வளர்ச்சி, மறுபுறம் வளர்ச்சியின்மை.
4.சமத்துவம் வலுவிழத்தல்
5.பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்.
6.ஆடம்பர நுகர்வு செலவு.

VIII.விரிவான விடையளி:
1.பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?
பண்டைய காலத்தில் பணம் பயன்படுத்தப்படாமல் பண்டத்திற்கு பண்டம் பரிமாற்றம் நடைபெற்றதை பண்டமாற்று முறை என்றனர்.

பண்டமாற்று முறை ஒரு பழைய பரிமாற்ற முறையாகும்.

பண்டமாற்று முறையின் குறைபாடுகள்:

1.இருமுகத் தேவை பொருத்தமின்மை
2.பொதுவான மதிப்பின் அளவுகோல்.
3.பொருட்களின் பகுபடாமை.
4.செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்.

2.பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக?

பணத்தின் பரிணாம வளர்ச்சி

1.பண்டப் பணம் 2.உலோகப் பணம் 3.காகித பணம் 4.கடன் பணம் 5.நிகர் பணம் போன்றவைகள் சமீப கால பணத்தின் வடிவங்கள் ஆகும் காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பணம் பல நிலைகளில் உருவானது.

1.பண்டப்பணம்: பண்டங்களை கொடுத்து பண்டங்களை வாங்குதலை பண்டமாற்று முறை என அழைத்தனர்.

உரோமம், தோல் உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற பண்டங்கள் பொதுவாக பணமாக பயன்படுத்தினர்.

2.உலோகப் பணம்: மனித நாகரிக முன்னேற்றத்தில் படைபணம் உலோக பணமாக மாறியது, தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்கள் உலோக பணமாக பயன்படுத்தினர்.

3.காகிதப்பணம்: தங்கத்தை சேமிக்க பொற்கொல்லரின் இரசீது காகித பணமாக மாறியது.

1935 இந்திய ரிசர்வ் வங்கி பணத்தை அச்சிடுதல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

4.கடன் பணம்(அ) வங்கிப்பணம்:

காசோலை (**CheQue, Demand Draff**) கடன் பணம் அல்லது வங்கிப் பணம் என்றும் அழைக்கப்படும் இவை பணத்தின் பணிகளை மேற்கொள்கிறது.

5.நிகர் பணம்: உண்டியல், கருவூலக பட்டியல், பத்திரம், கடன் பத்திரங்கள், சேமிப்பு பத்திரங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள் பண பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாகும்.

6.நெகிழிப் பணம்: கடன் அட்டைகள், பற்று அட்டைகள்.

7.மின்னணு பணம்: வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணம் பரிவர்த்தனை செய்தல்.

8.நிகழ் நிலை வங்கி: இனயை வங்கி நிதிநிறுவனங்கள் வளைதளத்தின் மூலம் நிதி பரிவர்த்தனை செய்தல்.

9.மின் வங்கி: நிதி பரிமாற்றம் (**NEIT**) ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றும் முறையாகும்.

3.பணத்தின் பணிகள் யாவை? அவற்றை விளக்குக?

பணத்தின் பணிகள்:

பணத்தின் பணிகளாக 1.முதன்மை அல்லது முக்கிய பணிகள் 2.இரண்டாம் நிலை பணிகள் மற்றும் 3.வரையறுக்கப்பட்ட பணிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

I.முதன்மை அல்லது முக்கிய பணிகள்:

பணத்தின் முக்கிய பணிகள் பொருளாதாரத்தில் செயல்பட்டு அவை பிரதான பணிகளின் கீழ் வகைப்படுத்தப்படுகிறது.

1.பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை:

பணம், பண்ட மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.

2.மதிப்பின் அளவுகோல்:

அனைத்து வகையான பண்டங்கள் மற்றும் பணிகள் மதிப்பையும் பணத்தால் அளவிடலாம், பலவகையான பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இடையில் பரிமாற்ற விகிதத்தை தீர்மானிப்பது எளிது.

II.இரண்டாம் நிலைப் பணிகள்: 3 முக்கிய பணிகள்:

1.எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு

பணத்தை கடன் வாங்குபவர் குறிப்பிட்ட காலத்தில் செலுத்துவது கடமையாகும்.

2.மதிப்பின் நிலை கலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்:

பணம் அழியகூடியதில்லை, எதிர்காலத்திற்காக பணம் சேமிக்கப்படுகிறது.

3.மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி:

பணத்தால் தொலைதூர இடங்களுக்கும், வெளி நாட்டிற்கும் பண்டங்களை பரிமாற்றம் செய்ய முடியும்.

III.பணத்தின் இதர பணிகள்:

1.கடன் அடிப்படையில் இயக்கப்படுகிறது.

2.மூலதனத்தின் உற்பத்திதிறன் அதிகரிப்பு.

3.நாட்டு வருவாயின் அளவீடு மற்றும் விநியோகம்.

4.வங்கி வைப்புகளின் வகைகளை விவரி?

1.மாணவர் சேமிப்பு கணக்கு:

பூஜ்ய இருப்பினை கொண்ட சேமிப்பு கணக்குகள் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சில வங்கிகள் வழங்குகின்றன.

2.சேமிப்பு வைப்பு:

நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை வாடிக்கையாளர்கள் சேமிக்கின்றனர் நுகர்வோர், பணம் தேவைப்படும் போது அவர்கள் கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

அந்த வைப்பு தொகைக்கு வங்கி பெயரளவு வட்டி அளிக்கிறது.

3.நடப்பு கணக்கு வைப்பு: வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ள நடப்பு கணக்கு உதவுகின்றது.

4.நிரந்தர வைப்பு:

முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும், விரும்புவார்கள்.

நிரந்தர வைப்பை காலவைப்பு எனவும் அழைக்கலாம் அவை குறிப்பிட்ட நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

5.சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| ஒப்பீட்டின் அடிப்படை | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|
| பொருள் | சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும். | முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல் முறையை குறிக்கிறது. |
| நோக்கம் | சேமிப்பு குறுகிய கால அல்லது அவசரகால தேவைகளை நிறைவேற்றும். | மூலதன உருவாக்கத்திற்கும், வருவாய்க்கும் முதலீடு உதவுகிறது. |

| | | |
|---|---|---|
| இடர்பாடு | குறைந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட அளவு | இடர்பாடு மிக அதிகம். |
| வருவாய் | வருவாய் இல்லை அல்லது குறைவு | வருவாய் ஒப்பீட்டளவில் அதிகம். |
| நீர்மை நன்மை | அதிக நீர்மை | குறைந்த நீர்மை |

6.பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள்:

1.பொருளாதாரத்தில் ஒருபுறம் வளர்ச்சியும் மறுபுறம் வளர்ச்சியற்ற நிலை ஏற்பட்டு இரட்டை பொருளாதாரத்தை உருவாக்கும்.
2.உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது.
3.வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு.
4.சமத்துவம் வலுவிழத்தல்.
5.பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்.
6.ஆடம்பர நுகர்வு செலவு.
7.உற்பத்தி முறையில் விலகல்
8.பற்றாக்குறை பணத்தைத்தை விநியோகித்தல்
9.சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்.
10.உற்பத்தி மீதான விளைவுகள்.

## அலகு □ 2
## பொது மற்றும் தனியார் துறைகள் :

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1..இந்தியாவில் பொதுத்துறைகளின் தோற்றத்திற்குக் காரணமான இந்திய அரசின் தொழில் கொள்கையின் தீர்மானம் ----- ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

விடை : ஈ.1956.

2.கலப்புப் பொருளாதார நன்மைகளின் கலவை என்பது.

விடை : இ. அ மற்றும் ஆ சரி.

3.------ நிறுவனச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் முதன்மையான முக்கிய பங்குதாரர்.

விடை : ஆ.கூட்டு துறை.

4.பொதுத்துறை ------ உடையது .

விடை : ஆ.சேவை நோக்கம்.

II.கோடிட்ட இடங்களை நிரப்புக :

1.-------- மற்றும் ------ ஆகியவை சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அந்தந்த பணிகளை மேற்கொள்வதில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விடை : பொது துறை தனியார் துறை.

2.தனியார் துறை ------- நோக்கத்தில் செயல்படுகிறது.

விடை : இலாப.

3.------ என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

விடை : ஒரு சமூக பொருளாதார மேம்பாடு.

4.தனியார் துறையின் முக்கிய செயல்பாடுகளைத் தோற்றுவிப்பது------- மற்றும் ------ ஆகும்.

விடை : புதுமை, நவீனமையமாதல்.

5.குடிமக்கள் மத்தியில் -------- மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

விடை : புரிதல்

III.பொருத்துக:

1.மதியுரையகக் குழு -- நிதி ஆயோக்.
2.வேளாண்மை -- முதன்மை துறை.
3.தொழில்கள் -- இரண்டாம் துறை.
4.புனீ -- மொத்த உள்நாட்டு உற்பத்தி.

iv.பொருத்தமற்றவைக் கூறுக :

1.சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட பின்வருவனவற்றில் எந்த குறியீடு பயன்படுத்தப்படுவதில்லை.

அ.கருப்புப் பணம்.

ஏ.பின்வருவனவற்றுள் எது சரியான விடை :

1.ஐ.அரசுக்கு மட்டுமே சொந்தமான தொழில்கள் அட்டவணை □ யு என குறிப்பிடப்படுகின்றன.

ஐஐ.தனியார் துறையானது மாநில துறையின் முயற்சிகளுக்குத் துணை புரியக் கூடிய தொழில்கள் புதிய அலகுகளைத் தொடங்குவதற்கான முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்வது அட்டவணை □ டீ என குறிப்பிடப்படுகின்றன.

ஐஐஐ.தனியார் துறையில் இருந்த மீதமுள்ள தொழில்கள் அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை.

விடை : இ.I மற்றும் II சரி.

VI.பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்:

1.பொதுத் துறைகள் குறித்து சிறு குறிப்பு எழுதுக?

அரசு, பொது மக்களுக்குப் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள துறை பொதுத்துறை ஆகும்.

நிறுவனங்கள், முகவர் நிலையங்கள் மற்றும் அமைப்புகள் என முழுவதும் சொந்தமானவையாகவும், அரசாங்கத்தால் நடத்தப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் மத்திய அரசு, மாநில அரசாங்கமாகவும் இருக்கும்.

2.சமுதாய தேவை என்றால் என்ன?

சமுதாய தேவை என்பது விரைவான தொழில்மயமாக்கல் நடவடிக்கைகள் மூலம் - கல்வி, போக்குவரத்து, வணிக மையம், சுகாதார வசதி போன்ற பொருளாதார மேம்பாட்டை அடைதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியடைதலாகும்.

3.பொதுத்துறையின் நோக்கங்களை எழுதுக?

<u>பொதுத் துறையின் நோக்கங்கள்:</u>

1.உள்கட்டமைப்பு, விரிவாக்கம் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சி.
2.வளர்ச்சிக்கான நிதி ஆதாரம், வருமானம், செல்வங்களை பகிர்வு செய்தல்.
3.வேலைவாய்ப்பு, வட்டார வளர்ச்சி, தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
4.ஏற்றுமதி இறக்குமதி துரிதப்படுத்துதல்.

4.பொதுத் துறைகளின் மூன்று உறுப்புகள் யாவை?

<u>பொதுத் துறையின் உறுப்புகள்:</u>

1.அரசு நிறுவனங்கள் (இரயில்வே, தபால் மற்றும்தந்தி)

2.கூட்டுத் துறை நிறுவனங்கள் (அரசாங்கம் ஒரு பிரதான பங்குதாராக இருந்து கட்டுப்படுத்தப்படுகிறது.
3.பொதுக் கழகம் (மின்சார வாரியம், LIC இந்திய ரிசர்வ் வங்கி)
5.சமூக □ பொருளாதார மேம்பாட்டை அளவிடும் சில குறியீடுகளின் பெயர்களைக் கூறுக?
சமூக பொருளாதார மேம்பாட்டை பின்வரும் குறியீடுகள் கொண்டு அளவிடப்படுகிறது. அவை.
1.மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
2.ஆயுட்காலம் 3.கல்வியறிவு 4.வேலைவாய்ப்பு மற்றும் 5.வீடு, சுத்தமான குடிநீர், சுகாதாரம் ஆகியனவாகும்.

6.தனியார் துறை குறித்துச் சிறு குறிப்பு எழுதுக?
தனியார் தனிநபர்கள் (அ) நிறுவனங்களுக்குச் சொந்தமான, அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படும் ஒரு தேசிய பொருளாதாரத்தின் பிரிவு தனியார் துறை என்று அழைக்கப்படுகிறது.

7.தனியார்துறை நிறுவனங்களில் ஏதேனும் மூன்றினைக் கூறுக?
தனியார்துறை நிறுவனங்கள்:
1.இன்போசிஸ் 2.ரிலையன்ஸ் 3.டாடா 4.விப்ரோ 5.ஆதிதயா பிர்லா 6.ICICI வங்கி 7.இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம்.

VII.விரிவான விடை தருக:
1.பொதுத் துறையின் உறுப்புகள் பற்றி விளக்குக?
பொதுத் துறையின் உறுப்புகள்:
1.அரசுத்துறைகளால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள்:
ஒரு அரசாங்க துறையின் நிர்வாகம் என்பது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் பொதுவானதாகும்.
எ.கா: தபால் மற்றும் தந்தி, இரயில்வே துறைமுக அறக்கட்டளை, இந்தியாவில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவை.
2.கூட்டுத்துறை நிறுவனங்கள்:
இது ஒரு நிறுவன சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் அரசாங்கம் ஒரு பிரதான பங்குதாராக இருந்து கட்டுப்படுத்தப்படுகிறது.
எ.கா: இந்தியன் ஆயில் பெட்ரோனாஸ் தனியார் நிறுவனம், இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம், ரத்னகிரி கேஸ் அண்ட் பவர் தனியார் நிறுவனம், இந்தியன் செயற்கை ரப்பர் நிறுவனம்.
3.பொதுக் கழகம்:
பொதுக் கழக அமைப்பானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தினால் பொதுக் கழகத்தினை நிறுவுவதே ஆகும்.
எ.கா: ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (LIC), ஏர் இந்தியா, இந்திய ரிசர்வ வங்கி, மின்சார வாரியம்,

2.பொதுத் துறையின் வரலாற்றை சுருக்கமாக விளக்குக?
பொதுத்துறையின் வரலாறு:
1.1947 □ல் இந்திய விடுதலையின்போது ஆங்கிலேயர் நிறுவிய 18 போர் தளவாட தொழிற்சாலைகள் மட்டுமே நாட்டில் இருந்தன.
2.தேசிய ஒருமித்த கருத்து பொருளாதாரத்தின் விரைவான தொழில் மயமாதலுக்கு ஆதரவாக இருந்தது.
3.முதல் தொழிற்கொள்கை 1948 □ல் உருவானது.

4.1950 மார்ச்-ல் அமைச்சரவை தீர்மானத்தால் திட்டக் குழு அமைக்கப்பட்டது.
5.1951 □ம் ஆண்டு தொழில் துறை சட்டம் இயற்றப்பட்டது.
6.பிரதமர் ஜவகர்லால் நேரு கலப்பு பொருளாதாராத்தை ஆதரித்தார்.
7.1991 □ம் ஆண்டு தொழில் துறை கொள்கை பொது தொழிற் துறைக்கு முதலீடு செய்ய தனியார் துறை, பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
8.இவ்வாறு இந்திய பொருளாதாரத்தில் பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

3.சமூக □பொருளாதார மேம்பாட்டினை அளவிடும் குறியீடுகள் ஏதேனும் ஐந்தினை பற்றி விளக்குக?

சமூக பொருளாதார மேம்பாட்டு குறியீடுகள்:

1.மொத்த உள்நாட்டு உற்பத்தி (**GDP**)

தொழில் துறையில் பொது மற்றும் தனியார் துறை விகிதம் அதிகரிப்பால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கிறது.

2.ஆயுட்காலம்:

2011 □ல் இந்தியாவின் ஆயுட்காலம் ஆண்டுகள் -65 பெண்கள் 68 ஆண்டுகள். பல்வேறு திட்டங்கள் மூலம் அரசாங்கம் அதிக அளவு சுகாதாரம் வழங்குகிறது. (2018 -19) ல் தேசிய சுகாதார உற்பத்தி திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

3.கல்வியறிவு:

அனைவருக்கும் கல்வி இயக்கம் (**SSA**) 6- 14 வயது வரை வாழ்க்கை திறன்களுடன் கூடிய இலவச மற்றும் கட்டாய கல்வியை வழங்குகிறது.
**RMSA** □ அனைவருக்கும் இடைநிலை கல்வித்திட்டம் மூலம் திறன் வகுப்பு, மின்னணு) கற்றல், இலவச கணிணி திறன் வகுப்புகள், கற்பதற்கான இயற்கை சூழலை அரசு வழங்கிவருகிறது.

4.வேலைவாய்ப்பு:

கிராமபுறம், பின்தங்கிய பகுதிகளில் அரசு தொழில் துறையை தொடங்கி வட்டார ஏற்றதாழ்வை நீக்குகிறது.
அரசு திறன் நகரம் திட்டத்தில் நகரங்களில் வணிக மையங்கள், பள்ளிகள், வீட்டுவசதியை அளிக்கிறது.

5.தூய்மை இந்தியா திட்டத்தில் அரசு வீட்டு வசதி, சுத்தமான குடிநீர், சுகாதார வசதிகளை வழங்கிவருகிறது.

4.பொதுத் துறையின் முக்கியத்துவம் யாது?

பொதுத் துறையின் முக்கியத்துவம்:

1.பொதுத்துறை மற்றும் மூலதன உருவாக்கம்: திட்டமிடல் காலத்தில் சேமித்து, முதலீடு செய்வதில் பொதுத்துறையின் பங்கு மிக முக்கியமானதாக விளங்கியது.
2.பொருளாதார மேம்பாடு: சிறு தொழில்களுக்கு மூலப்பொருட்கள் வழங்க கனரக தொழில்கள் தேவைப்படுகிறது.
3.சமச்சீரான வட்டார வளர்ச்சி: பொது துறை நிறுவனங்கள் பின்தங்கிய பகுதிகளில் குடிநீர், தன்னாட்சி, மின்சாரம், மனித சக்தி பொருளாதார வளர்ச்சியடைய செய்கிறது.
4.வேலைவாய்ப்பு உருவாக்கம்: நாட்டில் வேலையின்மை பிரச்சினையை தீர்க்க பொதுத்துறை இலட்சக்கனக்கான வேலைகளை உருவாக்கியுள்ளது.
5.ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் அந்நிய செலாவணி வருவாய்களுக்கு அதிக பங்களிப்பு செய்கிறது.
6.நலிவடைந்த தொழில்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது, மூலதனம், நிலம், கட்டடம், இயந்திரங்கள் போன்றவற்றை தேவையற்ற முறையில் மூடுவதை பொதுத்துறை தடுக்கிறது.

7.இறக்குமதி மாற்று: சில பொது நிறுவனங்கள் முன்னர் இறக்குமதி செய்யபட்ட பொருட்களை உற்பத்தி செய்யவும், அந்நிய செலாவாணியை மேம்படுத்தவும் தொடங்கப்பட்டுள்ளன.

4.பொதுத்து துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக?

| | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | தொழில்களின் உரிமையானது அரசிடம் உள்ளது. | தொழில் உரிமை தனிநபரிடம் உள்ளது. |
| 2. | பொதுவருவாய், வருமானம், பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கும் வரியை பொருத்தது. | பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வழங்குதல் (அ) கடன் வாங்குவதைப் பொருத்தது. |
| 3. | ஊழியர்களுக்கு முறையான ஊதியம் அளிக்கிறது. | தொழிலாளர்களை சுரண்டுகிறது. |
| *4.* | *பணக்காரர்களிடம் செல்வத்தை குவிக்க அனுமதிக்காது.* | சிலா், பணா்காரா்களிடம் செல்வம் குவிக்கப்படுகிறது. |
| 5. | பொதுதுறை நிறுவனங்கள் உதாரணம்: **NLC, SAIL, BSNL** | தனியார் நிறுவனங்கள் உம்: **TVS, TATA Steel Ashok Leyland.** |
| 6. | வரி ஏய்ப்பு இல்லை. | வரி ஏய்ப்பு உண்டு |
| 7. | இது சேவை நோக்கமுடையது | இது முற்றிலும் இலாப நோக்கம் உடையது. |
| 8. | சமூகரீதியாக பின்தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. | இது சமூகரீதியாக பின்தங்கிய வா்க்க மக்களைப் பொருட்படுத்தாது. இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. |

6.தனியார் துறையின் பணிகளைப் பற்றி எழுதுக?

தனியார் துறையின் பணிகள்:

1.புதுமை மற்றும் நவீனமயமாதலை உருவாக்கி புதிய தொழில் நுட்ப முறையை பயன்படுத்தி இலாபமயை செய்தல்.

2.உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

3.இருக்கின்ற வணிகங்களை ஊக்குவித்தல், விரிவுபடுத்துதல்.

4.மனித மூலதனம், சமூக வணிக கூட்டுறவு, உள்ளூர் பரிமாற்ற அமைப்புகளுக்கு முறைசாரா கடன் வசதி அளித்து சமூக வளர்ச்சியை ஊக்குவித்தல்.

5.சிறு நுண் மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SmmE) வழங்குவதன் மூலம் அளிப்பு பக்க நடவடிக்கைகள் மற்றும் தேவை பக்க நடவடிக்கைகளைக் கோருதல் மற்றும் நரத்தில் முதலீட்டை ஈர்த்தல்.

எட்டாம் வகுப்பு சமூக அறிவியல் வரைபடம்(MAP)

பொருளடக்கம்


| அலகு | | பக்கம் |
|---|---|---|
| | வரலாறு | |
| .1 | வாஸ்கோடகாமாவின் கடல் வழிப் பயணம் | 94 |
| .2 | ஐரோப்பிய வர்த்தக மையங்கள் | 95 |
| .3 | ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர்கள் நடைபெற்ற இடங்கள் | 96 |
| .4 | விவசாயிகளின் புரட்சிகள் | 97 |
| .5 | 1799 – 1800 புரட்சியாளர்கள் கிளர்ச்சி கூட்டமைப்பு | 98 |
| 6. | 1857 ஆம் ஆண்டு புரட்சி நடைபெற்ற இடங்கள் | 99 |
| 7. | இந்திய கல்வி மையங்கள் | 100 |
| .8 | வர்த்தக வழி | 101 |
| 9 | தொழிலகங்கள் காணப்படும் இடங்கள் | 102 |
| 10 | மதராஸ் மாகாணம் | 103 |
| | புவியியல் | 104 |

| | | |
|---|---|---|
| 11. | உலகின் வெப்ப மண்டலங்கள் | 105 |
| 12. | ஆப்பிரிக்கா அரசியல் | 106 |
| 13. | ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு | 107 |
| 14. | ஆஸ்திரேலியா அரசியல் | 108 |
| 15. | ஆஸ்திரேலியாவின் இயற்கை அம்சங்கள் | 109 |
| 16. | அண்டார்டிகா - வரைபடம் | 110 |
| 17. | உலக வரைபடம் | 111 |
| 18. | தமிழ்நாடு அரசியல் | 112 |
| 19. | இந்திய இயற்கை அமைப்பு | 113 |
| 20. | இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 114 |



வ
கி
தெ
மே
ஆசியா
இந்தியா
கோவா
கள்ளிக்கோட்டை
கொச்சி
இந்தியப் பெருங்கடல்
அரேபியா
மாலிந்தி
மொம்பாஸா
மொசாம்பிக்
மொசூல் விரிகுடா
நன்னம்பிக்கை முனை
ஆப்பிரிக்கா
ஐரோப்பா
பிரான்ஸ்
டென்மார்க்
நெதர்லாந்து
இங்கிலாந்து
போர்ச்சுகல்
லிஸ்பன்
வெர்டிஸ் முனை
அட்லாண்டிக் பெருங்கடல்
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
பசிபிக் பெருங்கடல்
வாஸ்கோடகாமாவின் கடல் வழிப் பயணம்
லிஸ்பன் → கோழிக்கோடு (1497 - 1498)
அளவையில் இல்லை


ஐரோப்பிய வர்த்தக மையங்கள்
வ
மே
கி
தெ
ஆக்ரா(ஆ)
அகமதாபாத்(ஆ)
ப்ரோச்(ஆ)
சூரத்(ஆ)
டையு(போ)
டாமன்(போ)
சால்செட்(ஆ)
பசீன்(போ)
பம்பாய்(ஆ)
ஹூக்ளி(ஆ)
சின்சுரா(ட)
சந்திரநாகூர்(பி)
செராம்பூர்(டே)
கல்கத்தா(ஆ)
பாலசோர்(பி)
கடக ரேகை
ஏனாம்(பி)
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
கோவா(போ)
பழவேற்காடு(ட)
சென்னை(ஆ)
கண்ணனூர்(போ)
மாஹி(பி)
பாண்டிச்சேரி(பி)
கள்ளிக்கோட்டை(போ)
காரைக்கால்(பி)
தரங்கம்பாடி(டே)
நாகப்பட்டினம்(ட)
கொச்சி(போ)
இலட்சத்தீவுகள்
இந்தியா
இலங்கை
அந்தமான் நிக்கோபர் தீவுகள்
இந்தியா
விளக்கப்படம்
போர்ச்சுக்கீசியர்(போ)
பிரெஞ்சு(பி)
டச்சு(ட)
டேனியர்(டே)
ஆங்கிலேயர்(ஆ)
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


வ
மே
கி
தெ
ஆங்கிலேயருக்கு எதிராக போர்கள் நடைபெற்ற இடங்கள்
காஷ்மீர்
பானிபட்
தில்லி
அயோத்தி
ராஜபுதனம்
குவாலியர்
பீகார்
மாண்டசோர்
சிந்தியா
ஹோல்கர்
பக்சார்
வங்காளம்
கெய்க்வாட்
பிளாசி
பரோடா
ஆரகான்
சூர்ஜி அர்ஜுன்கான்
சூரத்
தியோகான்
சால்பை
நாக்பூர்
அஸ்ஸே
பேஷ்வா
பசீன்
சால்செட்
மராத்தியர்
பம்பாய்
கிர்க்கி
பூனா
புரந்தர்
சதாரா
போன்ஸ்லே
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
மைசூர்
மங்களூர்
ஆற்காடு
சென்னை (அடையாறு)
மாலவள்ளி
வந்தவாசி
ஸ்ரீரங்கப்பட்டணம்
ஆம்பூர்
செங்கம்
பரங்கிப்பேட்டை
திருவாங்கூர்
லட்சத்தீவுகள் (இந்தியா)
அந்தமான் நிக்கோபார் தீவுகள் (இந்தியா)
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


வ
மே
கி
தெ
விவசாயிகளின் புரட்சிகள்
பஞ்சாப்
(1890-1900)
சம்பரான்
(1917-18)
சந்தால்
(1855-56)
இண்டிகோ
(1859-60)
பாப்னா
(1873-76)
கேடா
(1918)
பர்தோலி
(1929-30)
தக்காணம்
(1875)
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
மாப்ளா
(1921)
3Q2KR
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை


புரட்சியாளர்களின் கூட்டமைப்பு (1799 - 1800)
வ
மே
கி
தெ
வேலூர்
சென்னை
சங்ககிரி
ஈரோடு
சென்னிமலை
ஓடாநிலை
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
விருப்பாச்சி
புதுக்கோட்டை
நாகூர்
திண்டுக்கல்
நத்தம்
வங்காள
விரிகுடா
திருப்பத்தூர்
மதுரை
காளையார்கோவில்
சிவகங்கை
தொண்டி
சிவகிரி
ராமநாதபுரம்
நெற்கட்டும்செவல்
கடல்குடி
எட்டயபுரம்
நாகலாபுரம்
கயத்தாறு
பாஞ்சாலங்குறிச்சி
அரபிக்
கடல்
நாங்குநேரி
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


1857ஆம் ஆண்டு புரட்சி நடைபெற்ற இடங்கள்
வ
மே
கி
தெ
மீரட்
தில்லி
பரெய்லி
ஆக்ரா
குவாலியர்
கான்பூர்
பைசாபாத்
லக்னோ
ஜகதிஷ்பூர்
பனாரஸ்
ஜான்சி
கல்பி
பாரக்பூர்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இலட்சத் தீவுகள் (இந்தியா)
அந்தமான் நிக்கோபர் தீவுகள் (இந்தியா)
இலங்கை
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை


இந்தியக் கல்வி மையங்கள்
வ
மே
கி
தெ
தட்சசீலம்
டெல்லி
லக்னோ
ஜெய்ப்பூர்
விக்ரமசீலா
அலகாபாத்
வாரணாசி
நாளந்தா
வல்லபி
கல்கத்தா
வார்தா
பம்பாய்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
காஞ்சி
சென்னை
சிதம்பரம்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
கொச்சி
மதுரை
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை


வர்த்தக வழி
மும்பை
இந்தியப் பெருங்கடல்
செங்கடல்
சூயஸ்கால்வாய்
மத்திய தரைக்கடல்
ஐரோப்பா
ஆப்பிரிக்கா
இலண்டன்
தென் அட்லாண்டிக் பெருங்கடல்
அளவையில் இல்லை


தொழிலகங்கள் காணப்படும் இடங்கள்
வ
மே
கி
தெ
புது டெல்லி
கான்பூர்
அஸ்ஸாம்
குல்டி
டாக்கா
அகமதாபாத்
ரிஷ்ரா
சௌராஷ்டிரா
கல்கத்தா
ஜாம்ஷெட்பூர்
பம்பாய்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
லட்சத் தீவுகள் (இந்தியா)
அந்தமான் நிக்கோபார் தீவுகள் (இந்தியா)
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


மதராஸ் மாகாணம்
வ
மே
கி
தெ
வங்காளம்
மத்திய மாகாணங்கள்
கஞ்சம்
விசாகப்பட்டினம்
கிழக்கு கோதாவரி
நிசாம் ஆட்சிப்பகுதிகள்
மேற்கு கோதாவரி
கிருஷ்ணா
குண்டூர்
பம்பாய் மாகாணம்
பெல்லாரி
கர்னூல்
பங்கனப்பள்ளி சமஸ்தானம்
அனந்தபூர்
கடப்பா
நெல்லூர்
வங்காள விரிகுடா
சித்தூர்
மைசூர்
தென் கனரா
செங்கல்பட்டு
மதராஸ்
வட ஆற்காடு
குடகு
சேலம்
தென் ஆற்காடு
பாண்டிச்சேரி
மலபார்
நீலகிரி
அரபிக் கடல்
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
தஞ்சாவூர்
கொச்சின்
பிரிட்டிஷ் கொச்சின்
புதுக்கோட்டை சமஸ்தானம்
மதுரை
பாக் நீர்சந்தி
திருவிதாங்கூர்
இராமநாதபுரம்
லட்சத் தீவுகள்
திருநெல்வேலி
மன்னார் வளைகுடா
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


உலகின் வெப்ப மண்டலங்கள்
குளிர் மண்டலம் (உறைப்பனி மண்டலம்)
ஆர்டிக் வட்டம் (66°30') வ
மித வெப்ப மண்டலம்
கடகரேகை (23°30') வ
வெப்ப மண்டலம்
நில நடுக் கோடு (0°)
வெப்ப மண்டலம்
மகர ரேகை (23°30') தெ
மித வெப்ப மண்டலம்
அண்டார்டிக் வட்டம் (66°30') தெ
குளிர் மண்டலம் (உறைப்பனி மண்டலம்)
அளவையில் இல்லை
வ
கி
மே
தெ


ஆப்பிரிக்கா
அரசியல்
வ
மே
கி
தெ
அட்லாண்டிக் பெருங்கடல்
மத்தியத் தரைக்கடல்
செங்கடல்
ஏடன் வளைகுடா
இந்தியப் பெருங்கடல்
கடகரேகை
பூமத்திய ரேகை
மகரரேகை
மொராக்கோ
ராபாட்
அல்ஜியர்ஸ்
அல்ஜீரியா
டுனிஸ்
டுனிசியா
ட்ரிபோலி
லிபியா
கெய்ரோ
எகிப்து
மேற்கு சகாரா
எல் அயுன்
மோர்டானியா
நுவக்சோட்
டாகர்
செனிகல்
பன்ஜீல்
மாலி
பமாகோ
நைஜர்
நியாமே
சாட்
நஜமனா
சூடான்
கார்ட்டூம்
அஸ்மெரா
எரிட்ரியா
ஜிபௌட்டி
எத்தியோப்பியா
அடிஸ் அபாபா
சோமாலியா
மொகடிஸ்ஷு
கினி
பிஸ்ஸாவ்
கின்யா
கோனாக்ரீ
ப்ரீடவுன்
சியாரா லியோன்
மன்ரோவியா
லைபீரியா
ஐவரி கோஸ்ட்
யாமெளசு
கானா
அக்ரா
டோகோ
லோம்
பெனின்
போர்டோநோவா
பர்கினா பாஸோ
நைஜீரியா
அபுஜா
கேமரூன்
யவொண்ட்
மத்திய ஆப்பிரிக்க குடியரசு
பங்குய்
தெற்கு சூடான்
ஜூபா
ஈகுவடோரியல்
சாவோ டோம் பிரின்சிப்
காபோன்
காங்கோ
ஜனநாயக குடியரசு காங்கோ
கின்ஷாசா
உகாண்டா
கம்பாலா
கென்யா
நைரோபி
ருவாண்டா
கிகாலி
புருண்டி
புஜும்புரா
டான்சானியா
டடோமா
லுவாண்டா
அங்கோலா
ஜாம்பியா
லுசாகா
மாலவி
லிலாங்வே
ஜிம்பாப்வே
ஹராரே
மொசாம்பிக்
கொமரோஸ்
அன்டனனரிவோ
மடகாஸ்கர்
நமீபியா
விண்ட்ஹோக்
போட்ஸ்வானா
கபோரோன்
பிரிட்டோரியா
மாபேன்
மபூடோ
ஸ்வாசிலாந்து
மஸேரு
லெசோதோ
தென் ஆப்பிரிக்கா
அளவையில் இல்லை

# ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு




பசிபிக் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
குயின்ஸ்லாந்து
வடக்கு பிரதேசம்
தென் ஆஸ்திரேலியா
மேற்கு ஆஸ்திரேலியா
நியூ சவுத் வேல்ஸ்
விக்டோரியா
பெரும் ஆஸ்திரேலியன் வளைகுடா
பெர்த்
டார்வின்
பிரிஸ்பேன்
சிட்னி


ஆஸ்திரேலியாவின் இயற்கை பிரிவுகள்
பசிபிக் பெருங்கடல்
பவளக் கடல்
டாஸ்மன் கடல்
அராபுரா கடல்
டோரஸ் நீர்சந்தி
பாஸ் நீர்சந்தி
டாஸ்மானியா
இந்தியப் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
பெரும் தொடர்த்திட்டு பவளப்பாறை
கோசியஸ்கோ சிகரம் (2230 மீ)
அயர்ஸ் பாறை (863 மீ)
மெக்டோனல் மலைத்தொடர்
சிம்சன் பாலைவனம்
தனாமி பாலைவனம்
பெரும் மணல் பாலைவனம்
கிப்சன் பாலைவனம்
பெரிய விக்டோரியா பாலைவனம்
நல்லர்பார் சமவெளி
பெரும் மேற்கு பீடபூமி
கிம்பர்லி பீடபூமி
மத்திய தாழ் நிலங்கள்
ஐயர் ஏரி
அளவையில் இல்லை


அண்டார்க்டிகா
கிழக்கு அண்டார்க்டிகா
மேற்கு அண்டார்க்டிகா
தென் துருவம்
டிரான்ஸ்அண்டார்டிக் மலைகள்
தென் அட்லாண்டிக் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
தென் பசிபிக் பெருங்கடல்
அமுண்ட்செசன் கடல்
ரோஸ் கடல்
வெடல் கடல்
ஸ்கோடியா கடல்
ரோஸ் பனித்திட்டு
மைத்ரி (இந்தியா)
தக்சின் கங்கோத்ரி (இந்தியா)
பாரதி (இந்தியா)
வோஸ்டாக் ஆராய்ச்சி நிலையம் (இரஷ்யா)
அமெரிக்க உயர்நிலங்கள்
லாம்பர்ட் பனியாறு
ஆமரி பனித்திட்டு
மேற்கு பனித்திட்டு
விக்டோரியா நிலம்
சோர் ரோண்டேன் மலைகள்
குயின் ஃபேபியோலா மலைகள்
பிரின்ஸ் ஆல்பர்ட் மலைகள்
எல்ஸ்வோர்த் நிலம்
ரூஸ்வெல்ட் தீவு
தென் ஆர்க்னி தீவு (ஐ.அ)
0
180
30 கி
60 கி
90 கி
30 மே
60 மே
90 மே
120 மே
80


உலகம்
வட பசிபிக் பெருங்கடல்
தென் பசிபிக் பெருங்கடல்
ஆர்க்டிக் பெருங்கடல்
வட அட்லாண்டிக் பெருங்கடல்
தென் அட்லாண்டிக் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
தென் பெருங்கடல்
கடகரேகை
பூமத்தியரேகை
மகரரேகை
அலாஸ்கா (அ.ஐ.நா)
கனடா
அமெரிக்க ஐக்கிய குடியரசு
மெக்ஸிகோ
கிரீன்லாந்து (டென்மார்க்)
ஈக்குவடார்
பெரு
பிரேசில்
பொலிவியா
சிலி
இரஷ்யா
கஜகஸ்தான்
மங்கோலியா
சீனா
ஜப்பான்
இந்தியா
ஈரான்
சவுதி அரேபியா
ஏமன்
வியட்நாம்
மலேசியா
இந்தோனேஷியா
ஆஸ்திரேலியா
நியூசிலாந்து
அண்டார்டிகா
எகிப்து
லிபியா
சூடான்
சாட்
நைஜர்
மாலி
செனிகல்
கென்யா
தான்சானியா
அங்கோலா
நமீபியா
தென் ஆப்பிரிக்கா
மடகாஸ்கர்
அளவையில் இல்லை

# தமிழ்நாடு - அரசியல்


வ
மே
கி
தெ
ஆந்திரப் பிரதேசம்
கர்நாடகம்
கேரளம்
பெங்களூரு
மைசூரு
வங்காள விரிகுடா
அரபிக் கடல்
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
பாக் ஜலசந்தி
பாக் வளைகுடா
மன்னார் வளைகுடா
திருவண்ணந்தபுரம்
திருவள்ளூர்
சென்னை
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
செங்கல்பட்டு
வேலூர்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
திருவண்ணாமலை
தருமபுரி
விழுப்புரம்
புதுச்சேரி (பாண்டிச்சேரி)
கள்ளக்குறிச்சி
கடலூர்
சேலம்
நீலகிரி
ஈரோடு
நாமக்கல்
பெரம்பலூர்
மயிலாடுதுறை
அரியலூர்
கோயம்புத்தூர்
திருப்பூர்
கரூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால் (புதுச்சேரி)
தஞ்சாவூர்
திருவாரூர்
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
தேனி
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
இராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
மாநில எல்லைக்கோடு
மாவட்ட எல்லைக்கோடு
இருப்புப் பாதை
தங்க நாற்கரச் சாலை
வடக்கு-தெற்கு இணைப்புச் சாலை
தேசிய நெடுஞ்சாலை
கடற்கரை சாலை
மாநிலத் தலைநகரம்
மாவட்டத் தலைநகரம்
மற்ற ஊர்கள்
குறிப்பு -
தமிழ்நாடு அரசு ஆணைகளின் படி புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.



இந்தியா இயற்கை அமைப்பு
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
விசாகப்பட்டினம்
பாரதீப்
குமரிமுனை
அளவையில் இல்லை


இந்தியா
மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்
லடாக்
லே
ஸ்ரீநகர்
ஜம்மு காஷ்மீர்
ஜம்மு
இமாசலப் பிரதேசம்
சிம்லா
பஞ்சாப்
சண்டிகர்
டேராடூன்
உத்தரகாண்ட்
ஹரியானா
புது டெல்லி
ராஜஸ்தான்
ஜெய்ப்பூர்
லக்னோ
உத்திரப் பிரதேசம்
பீகார்
பாட்னா
சிக்கிம்
பூடான்
அருணாச்சலப் பிரதேசம்
இட்டாநகர்
அஸ்ஸாம்
மேகாலயா
நாகாலாந்து
கோஹிமா
இம்பால்
மணிப்பூர்
திரிபுரா
மிசோரம்
பங்களாதேஷ்
டாக்கா
ஜார்க்கண்ட்
ராஞ்சி
மேற்கு வங்காளம்
கொல்கத்தா
குஜராத்
காந்திநகர்
மத்தியப் பிரதேசம்
போபால்
சட்டீஸ்கர்
ராய்பூர்
ஒடிஷா
புவனேஸ்வர்
மியான்மார்
மும்பை
மகாராஷ்டிரம்
தெலங்கானா
ஹைதராபாத்
அமராவதி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
பனாஜி
கோவா
கர்நாடகம்
ஆந்திரப் பிரதேசம்
பெங்களூரு
சென்னை
புதுச்சேரி
தமிழ்நாடு
கவரத்தி
போர்ட் ப்ளேர்
திருவனந்தபுரம்
இலங்கை
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்


மான்சி கைடு
...பிற பதிப்புகள்...
மான்சி கைடு
8
ஆம் வகுப்பு
சமூக அறிவியல்
2024-2025
மான்சி கைடு
6 முதல்
10 ஆம்
வகுப்புவரை
சமூக அறிவியல்
(விடைத் தொகுப்பு)
Book Back
ANSWER KEY
2024-2025
மான்சி கைடு
9 முதல் 12 ஆம்
வகுப்புவரை
கல்வி உதவித்
தொகைத் தேர்விற்கான
TRUST
Guide
ஊரக திறனாய்வு தேர்வு
கணிதம்-25, அறிவியல்-25
சமூக அறிவியல்-25, மனத்திறன்-25
மொத்தம் 100 மதிப்பெண்கள்.
மான்சி கைடு
NMMS
National Means Cum-Merit Scholarship
தேசிய வருவாய் வழி
மற்றும் திறன் படிப்பு உதவித்தொகை
தேர்வுக்கான கைடு
MAT (Mental Ability Test)
மனத்திறன் தேர்வு
8-ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்கள்
9,10,11,12 கல்வி ஆண்டிற்கான
மாதம் ரூ.1000/-
உதவித்தொகைக்கான கைடு
மான்சி கைடு
NTSE
தேசிய திறனாய்வு தேர்வு
10-ஆம் வகுப்பு மாணவர்கள்
மேற்படிப்பிற்கான கல்வி
உதவித்தொகை கைடு
MAT (Mental Ability Test)
மனத்திறன் தேர்வு
Part I - MAT 100 Marks
Part II - SAT 100 Marks
மான்சி கைடு
NTSE
தேசிய திறனாய்வு தேர்வு
10-ஆம் வகுப்பு மாணவர்கள்
மேற்படிப்பிற்கான கல்வி
உதவித்தொகை கைடு
Part I - MAT 100 Marks
Part II - SAT 100 Marks
கிடைக்கும் இடம்...
மான்சி கைடு
நெ.225/5, வளன் நகர்,
(அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பின்புறம்)
வேட்டவலம்-606754, திருவண்ணாமலை மாவட்டம்.


அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்கான
மான்சி கைடு
பிற பதிப்புகள்
Mancy
போட்டித்தேர்வு Guide
1 முதல் 12-ம் வகுப்பு
தமிழ்
மற்றும்
இலக்கணம்
Mancy
போட்டித்தேர்வு Guide
1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை
அறிவியல்
Mancy
போட்டித்தேர்வு Guide
1 முதல் 10-ம் வகுப்பு
சமூக அறிவியல்
மான்சி கைடு
10 ம் வகுப்பு
சமூக அறிவியல்
2023-2024
Mancy
போட்டித்தேர்வு Guide
போட்டித் தேர்வுகளுக்கான
உளவியல்
(Psychology)
மான்சி கைடு
6 முதல் 10
வகுப்பு வரை
சமூக அறிவியல்
ஒரு மதிப்பெண் வினா-விடைகள்
(Book Back Question & Answers)
2024-2025
...கிடைக்குமிடம்...
மான்சி கைடு
நெ. 225/5 வளன் நகர்,
(அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பின்புறம்)
வேட்டவலம்-606 754, தி.மலை மாவட்டம்.
Cell : 9080235851, 6374624036